DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1429 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 25, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333



# சந்திரனில் கால் பதித்த சந்திரயான் – 3

## இந்தியாவைப் பாராட்டும் உலக நாடுகளும் இந்தியா பாராட்டும் தமிழ்நாட்டின் விஞ்ஞானி வீரமுத்துவேலும்

இந்தியா விண்ணுக்கு ஏவிய சந்திரயான்-3 என்று கலம் நேற்று முன்தினம் புதன்கிழமை 23ம் திகதி சந்திரனில் கால் பதித்து உலக சாதனை புரிந்தது. அந்த நிமிடம் தொடக்கம் இன்று வரை இந்தியாவைப் பாராட்டும் உலக நாடுகளும் இந்தியா பாராட்டும் விஞ்ஞானி வீரமுத்துவேலும் என்றவாறு நாட்கள் நம்பிக்கைகளோடு நகர்ந்து கொண்டிருக்கின்றன.

மேற்படி சந்திராயன்-3 திட்ட இயக்குநர் விஞ்ஞானி வீரமுத்துவேலை ஒட்டுமொத்த தேசமும் கொண்டாடி மகிழ அவர் பிறந்த தமிழகம் சற்றே கூடுதல் பெருமிதத்துடனும் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. சந்திரனை ஆய்வு செய்ய இந்தியாவின் விண்வெளி ஆராச்சி நிறுவனமான இஸ்ரோ அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர், அன்று வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது. இதன் மூலம் அமெரிக்கா, ரஸ்யாவைத் தொடர்ந்து நிலவில் கால்பதித்துள்ள இந்தியா, தனது விண்வெளி பயணத்தில் புதிய மைல் கல்லை எட்டியுள்ளது. சந்திராயன் நிலவினை அடைந்ததைத் தொடர்ந்து இந்தியாவின் வெற்றியை தெரிவித்த இஸ்ரோ தலைவர் "இந்தியா நிலவில் உள்ளது" என்று உவகை பொங்க அறிவித்தார்.

(தொடர்சசி - பின் பக்கம்)

# உலகக்கிண்ண சதுரங்க போட்டியில் இரண்டாம் இடத்தைத் தட்டிக் கொண்ட தமிழ்நாட்டு வீரர் பிரக்ஞானந்தா




உலகக் கிண்ண சதுரங்க தொடரின் இறுதிப் போட்டி அஜர்பைஜான் நாட்டின் பாகு நகரில் நேற்று 24ம் திகதி நடைபெற்றது. இதில் உலகக்கிண்ண சதுரங்க தொடரின் இறுதிப் போட்டியில் நோர்வே வீரரான மேக்னஸ் கார்ல்சன் வெற்றி பெற்றதோடு, இந்தியாவின் இளம் வீரரான பிரக்ஞானந்தா இரண்டாம் இடத்தைத் தட்டிக் கொண்டார்.. வுநை-டிசநயமள-இன் முதல் சுற்றுகளிலும் மேக்னஸ் கார்ல்சன் வெற்றி பெற்றார். இறுதிப் போட்டியின் முதல் இரண்டு சுற்றுகளிலும் உலகின் முதல் தர வீரரான மேக்னஸ் கார்ல்சனை எதிர்கொண்டு சமநிலையில் முடித்தார் பிரக்ஞானந்தா.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG BILLYARD INSURANCE GROUP
STOUFFVILLE
Great Coverage.
BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0 Google Reviews
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI







416 423 7555 - 416 625 5010

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் இனவாதப் பேய்கள் வீதிகளில்: இனிமேல் வீடுகள் தான் பாக்கி!

உலகெங்கும் இனங்களுக்கிடையில் அல்லது மதங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தி அவற்றால் நலன்கள் பல பெறலாம் என்றும் கனவு காண்பவர்களில் பலர் அரசியல்வாதிகளாகவே உள்ளார்கள். ஆனால் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்கியவண்ணம் வீதிகளில் இறங்கி ஆவேசமாகத் திரிபவர்கள் யார் என்று நோக்கினால் அவர்களில் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள் காடையர்களாகவும் இன்னொரு அணியினர் பௌத்த பிக்குகளாகவும் இருப்பார்கள்.
இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிராக தாண்டி விடப்பட்ட கலவரங்களின் பின்னணியில் சிங்கள அரசியல்வாதிகளும் பௌத்த பிக்குகளுமே அதிகளவில் காணப்பட்டார்கள்.
இனக்கலவரங்கள் இலங்கையில் கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாக அரங்கேறி வருகின்றன. அவற்றை நினைத்தானே அதிர்ச்சியும் அச்சமும் தோன்றி எமது தமிழ் மக்களை உள ரீதியாக பாதிக்கும் அளவிற்கு கலவரங்களின் தாக்கம் மிக மோசமானதாகவும் பாதிப்புக்கள் பலவற்றை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துவிடுகின்றன.
கடந்த சில வருடங்களாக இலங்கையில் அனைத்துப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மனங்களில் பீதியை ஏற்படுத்தும் வகையில பௌத்த பிக்குகளும் இனவாத நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளும் கருத்துக்களை வெளியிட்ட வண்ணம் செயற்பட்டு வருவதைக் கண்டு தமிழ் பேசும் அரசியல் விமர்சகர்கள் பலர இனவாதம் என்னும் அடித்தளத்திலிருந்து எழுந்து வரும் இனக்கலவரங்கள் பற்றிய அச்சத்தை சுட்டிக்காட்டி எச்சரித்து வந்துள்ளனர்.
ஏனெனில் தற்போது நாட்டில் தோன்றியுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கு 'இலகுவான தீர்வாக' விளங்குவது இனக்கலவரங்களே என்பதை பெரும்பான்மை இன அரசியல்வாதிகளும் பௌத்த பிக்குகளும் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள்.
இந்த வகையில் எமது பத்திரிகையின் பக்கங்கள் பலவற்றில் காணப்படும் செய்திகள் மற்றும் கட்டுரைகள் ஆகியவற்றில் இனவாதம் மற்றும் இனக்கலவரம் பற்றிய எச்சரிக்கைகள் பதிவுகளாக காணப்படுகின்றன.
இலங்கையில் வாழும் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான வீ. தேவராஜ் அவர்களின் பதிவுகள் கொடிதான அந்த இனவாதம் பற்றிய எழுத்துக்களைக் கொண்டவையாக காணப்படுகின்றன.

அவர்கள் தனது பதிவில் பின்வருமாறு குறிப்பிட்டு எச்சரிக்கை செய்கின்றார். ”அதேவேளயில் நாட்டில் இன்னொரு இனக் கலவரத்தை உருவாக்குவதற்கான காய்கள் வேகமாக நகர்த்தப்படுகின்றன. பௌத்த பிக்குகளில் ஒரு பகுதியினரும் பேரினவாதச் சக்திகளும் நடந்து கொள்ளும்விதம் அவர்களது அடாவடித்தனங்கள் வரம்பு மீறிய செயற்பாடுகள் மாத்திரமல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாம் சளைத்தவர்கள் அல்ல என களத்தில் சண்டித்தனம் காட்டுகின்றனர்.
இவைகளை "இலங்கை அரசாங்கம்" கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றது.
"2022 ஆம் ஆண்டில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் அரசாங்கத்தை நடத்துகிறார்கள் என்று அன்று பிபிசி அறிக்கை ஒன்று இன்றைய அரசாங்கம் குறித்து 2022 ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி பிபிசி இவ்வாறு தெரிவித்துள்ளது.
இவ்வாறான ஒரு அரசாங்கத்திற்கு நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் யோசிப்பதற்கு நேரம் இருக்காது.தமது "அரசியல் இருப்பு" குறித்த கவலையே ரணில் - ராஜபக்ச' அணியினருக்கு உள்ளதெனலாம்.
• ரணில் விகரமசிங்க அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவானவர் அல்ல" என்றும் அவர் எச்சரித்துள்ளார்.
.இவ்வாறான நிலையில். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி அவர்களது கொழும்பு இராணி வீதியிலுள்ள வீட்டிற்கு முன்பாக இனவாதிகள் சிலர் இன்றையதினம் குழப்பத்தில் ஈடுபட்டனர் என்ற செய்தி தற்போது எமது ஆசிரிய பீடத்திற்கு கிடைத்துள்ளது இதன்போது அவர்கள் இனவெறிக்கூச்சலிட்டு போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பதற்றம் நிலவுகிறது. பிக்குவுடன் வந்த சிலரே இவ்வாறு குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என அச்செய்தி எழுதப்பட்டுள்ளது.
எனவே இலங்கையில் அனைத்துப் பகுதிகளிலும் பௌத்த பிக்குகளின் அடாவடித்தனங்கள் நேரடியாகவே அரங்கேறுகின்ற சம்பவங்கள் பல இடம்பெற்று வருகையில் கொழும்பில் காடையர்களும் பிக்குகளும் இனவாத அரசியல்வாதிகளும் ஒன்றாக இணைந்து இனக்கலவரம் ஒன்றுக்கான ஆரம்பப்புள்ளியை இடுகின்றபோது. அப்புள்ளியான அழிவிற்கு ஆரம்பமாக ஆபத்துக்களை கொண்டுவரலாம் என்ற எச்சரிக்கையை அனைத்து தரப்பினரும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதையும் நாம் இவ்வாரக் கதிரோட்டத்தின் முக்கிய கருப்பொருளாக எடுத்துச் சொல்ல முனைகின்றோம்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

(முன்பக்கத் தொடர்ச்சி)

## உலகக் கிண்ண சதுரங்கப் போட்டியில்...

18 வயதான பிரக்ஞானந்தா கடந்த திங்கள் கிழமை **Tie-breaker**-இல் உலகின் மூன்றாம் நிலை வீரர் பெபினோ என்பவரை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். நோர்வே வீரரான மேக்னஸ் கார்ல்சன், நிஜாத் அபாசோவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

உலக செஸ் ரசிகர்கள் மத்தியில் மேக்னஸ் கார்ல்சன் என்றாலே ஒருவித பரவசம் தோன்றும் . அத்தகைய முதல்தர செஸ் வீரரான மேக்னஸ் கார்ல்சனை எதிர்கொண்டு முதல் இரண்டு சுற்றுகளையும் வெற்றி தோல்வியின்றி முடித்தார் பிரக்ஞானந்தா. எவ்வாறாயினும், இதற்கு முன்னர் நடைபெற்ற சர்வதேச சதுரங்க போட்டியொன்றில் மெக்னஸ் கார்ல்சனை பிரக்ஞானந்தா வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகக்கிண்ண சதுரங்க தொடரில் இறுதிப் போட்டிக்கு இந்தியா சார்பில் தெரிவான இரண்டாவது போட்டியாளர் என்ற சிறப்பையும் சதுரங்க தொடரில் இறுதிப் போட்டிக்கு தெரிவான இளம் போட்டியாளர் என்ற சிறப்பையும் ரமேஸ்பாபு பிரக்ஞானந்தா பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். கடந்த ஆண்டு, நார்வே கிராண்ட்மாஸ்டரை தோற்கடித்த மூன்றாவது இந்தியர் என்ற பெருமையும் பிரக்ஞானந்தாவையே சேரும்.

இந்தியாவின் சதுரங்க ஜாம்பவான் விஸ்வநாதன் ஆனந்திற்குப் பிறகு சதுரங்க உலகக்கோப்பையின் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இந்தியரும் பிரக்ஞானந்தா என்பதும் குறிப்பிடத்தக்கது.

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**HELP WANTED**

Help wanted for restaurant in Oshawa near Harmony and Taunton.

- Dishwasher
- Kitchen help
- Food delivery driver

Contact: 416-624-2224

**Canadian Citizenship Exam எடுப்பதற்கு உதவி**

Canadian Citizenship Exam க்கு உதவிகள் தேவையா? பரீட்சைக்கு தயார்படுத்தி Canadian Citizenship Exam எடுப்பதற்கு உதவி செய்து தரப்படும்.

பின்வரும் இலக்கத்தை அழைக்கவும்

Ramneet 437-771-5294

**BASEMENT FOR RENT**

Markham/Steeles
மார்க்கம்-ஸ்காபுறொ நகரங்களுக்கு இடையில் உள்ள வீடொன்றில் One Bed Room கொண்ட Basement உடனடியாக வாடகைக்கு உண்டு. தனிப்பட்ட வாசல் உண்டு. செப்டம்பர் மாதம் தொடக்கம் வழங்கலாம்.
தொடர்புகளுக்கு:- 416 994 7776

**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

# வவுனியா மாணவர்கள் இறப்புக்கு வலையக்கல்விப் பணிப்பாளரின் முறையாற்ற தீர்மானமே காரணமா?

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் இரு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவத்தில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் முறையாற்ற தீர்மானம் காரணம் என பாடசாலை சமூகம் குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் பாடசாலை சமூகத்தை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்ட போது பின்வரும் குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர்.

வியாழக்கிழமை (17-08-2023) குறித்த பாடசாலை மாணவர்கள் வலயமட்ட போட்டி ஒன்றுக்காக வவுனியா பம்படு பகுதியில் அமைந்துள்ள பல்கலைக்கழக மைதானத்திற்கு சென்றுள்ளனர்.

குறித்த பல்கலைக்கழக விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் மண் அள்ளிய கிடங்கில் காணப்பட்ட நீரில் இறங்கிய நிலையில் வவுனியா முஸ்லிம் மகா வித்யாலய மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா தெற்கு வலயத்தின் வலயமட்டப் போட்டிகள் வவுனியா மகா வித்தியாலயத்திலும் வவுனியா நகர சபை மைதானத்திலும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் ஏன் வவுனியா பல்கலைக்கழக மைதானத்திற்கு மாற்றினார்கள்.

வவுனியா பல்கலைக்கழகம் மைதானம் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் குறித்த மைதானத்தை தேர்வு செய்தவர்கள் கள நிலைமைகளை ஆராயாமல் மாணவர்களை ஏன் அழைத்தார்கள்.

ஏற்கனவே போட்டிகளை நடாத்திய வவுனியா நகரத்தை அண்மித்த நகரசபை மைதானம் மற்றும் மகா வித்தியாலய மைதானங்களைப் புறம்தள்ளி சுமார் 10 கிலோமீட்டர் அப்பால் உள்ள பல்கலைக்கழகம் மைதானத்தை யார் தெரிவு செய்தது.

ஆகவே குறித்த மாணவர்களின் இறப்புக்கு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் முறையாற்ற தீர்மானமே காரணம் என குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இவ்வாறான நிலையில் வடமாகாண விளையாட்டு பணிப்பாளர் ராஜசீலனை தொடர்பு கொண்டு கேட்டபோது, போட்டிகளை நடத்துவது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான விளையாட்டுக் குழு முடிவெடுக்க முடியும் என தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் அவர்களது பிராத்தியோக தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்ட போதும் முயற்சி பயனளிக்கவில்லை.

இந்நிலையில் அவரது அலுவலக தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்திய நிலையில் நான்கு மணித்தியாலத்திற்கு மேலாக கலந்துரையாடல் ஒன்றில் நிற்பதாக அவரது அலுவலக பெண் ஊழியர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டது.




# சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் குற்றச் செயல்கள் அதிகரிப்பு – பொலிஸாரின் அறிவிப்பு

யாழ்ப்பாணம் - சாவகச்சேரியில் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்ற திருட்டுக்கள் தொடர்பாக பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் அண்மைக்காலமாக பகல் மற்றும் இரவு வேளைகளில் வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான உடமைகள் களவு போவதாக பெருமளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

எனவே பொதுமக்கள் தங்களின் பெறுமதியான உடமைகளை பாதுகாப்பாக வைப்பதுடன், வீட்டை விட்டு வெளியேறும் போது கதவு மற்றும் ஜன்னலை பாதுகாப்பாக பூட்டி விட்டு செல்வதுடன், அருகில் உள்ள நம்பிக்கையான ஒருவருக்கு தெரியப்படுத்திவிட்டு செல்வது சிறந்தது.

அத்துடன் தங்களின் பிரதேசத்தில் அறிமுகம் இல்லாதவர்களின் நடமாட்டம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவதுடன், சந்தேகத்திற்கிடமான வாகன இலக்கங்களை குறித்து வைப்பதும் களவுகளை தடுப்பதற்கு வசதியாக அமையும்.

பொதுமக்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குள் ஏதேனும் அசாம்பாவிதங்கள் இடம்பெறும் பட்சத்தில் 0212270722 என்ற பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் எனவும் மேலும் அவர் தெரியப்படுத்தியுள்ளார்.



அத்துடன் களவுகள் தொடர்பாக சாவகச்சேரி பிரதேசத்தில் ஒலிபெருக்கி மூலம் பொலிஸாரால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# உரிமையாளரால் குப்பைக்குள் வீசப்பட்ட 8 பவுண் தங்க நகைகளை மீட்டுக் கொடுத்த சாவகச்சேரி நகரசபை சுகாதாரப் பகுதியினர்




சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மண்டுவில் வட்டாரத்தில் வசிக்கின்ற குடியிருப்பாளர் ஒருவரினால் வீதியில் குப்பைகளோடு வீசப்பட்ட சுமார் பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியான 8 பவுண் தங்க நகைகள் நகராட்சி மன்ற குப்பை மேட்டிலிருந்து சுகாதாரப் பகுதியினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் திங்கட்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, சாவகச்சேரி மண்டுவில் வட்டாரத்தில் வேலுப்பிள்ளை வீதியில் வசிக்கும் குடியிருப்பாளர் ஒருவர் தனது வீட்டில் உள்ள சுமார் 8 பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளையர்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில் பழைய துணி ஒன்றில் கட்டி குப்பைகள் போல வீட்டிலேயே பாதுகாத்து வந்துள்ளார்.



இந்நிலையில் அண்மையில் அவரது வீட்டை சுத்தம் செய்கின்ற பொழுது குறித்த நகைகளும் குப்பைகளோடு குப்பைகளாக கட்டப்பட்டு வீதியில் கொட்டப்பட்டிருந்தன. இந்நிலையில் மண்டுவில் வட்டாரத்தில் வழமையான கழிவகற்றும் நடவடிக்கையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது குறித்த வீட்டில் முன்னால் இருந்த குப்பைகளும் சுகாதார தொழிலாளர்களால் அகற்றப்பட்டு உழவு இயந்திரத்தில் நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான குப்பைகள் தரம் பிரிக்கின்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில் வீட்டிலிருந்த நகைகள் காணாமல் போனதையிட்டுள்ளார். அப்பொழுது இன்று காலை அப்பகுதியில் நகராட்சி மன்ற கழிவகற்றும் வாகனம் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டிருந்தமை அவதானித்துள்ளார்.

இதை அடுத்து உடனடியாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு சென்று பிரதம நிர்வாக அதிகாரி செ.அனுசியாவிடம் நிலைமை தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து உடனடியாக செயற்பட்ட நகராட்சிமன்ற நிர்வாக அதிகாரி மற்றும் நகராட்சி மன்ற சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர்களான பா.தயாகரன், மற்றும் பா.நிாந்தன் ஆகியோர் நகராட்சி மன்ற கழிவு சேகரிக்கும் இடத்திற்கு வெளியிலிருந்து உள்ளேயும் உள்ளே இருந்து வெளியேயும் எவரையும் அனுமதிக்காத வண்ணம் செயற்பட்டு சுகாதார தொழிலாளர்களைக் கொண்டு தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த குடியிருப்பாளர் பழைய துணியில் கட்டி குப்பைகளோடு குப்பையாக வீதியில் வீசிய சுமார் 8 பவுண் நகைகள் குடியிருப்பாளரின் முன்னிலையிலேயே சுகாதார தொழிலாளியான சண்முகம் தமிழ்சனால் மீட்கப்பட்டு உடனடியாகவே உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி மன்ற சுகாதார பகுதினரின் நேர்மையான மற்றும் விரைந்த செயல்பாடானது நகராட்சிமன்றம் மற்றும் குடியிருப்பாளர்கள் மற்றும் நகர வர்த்தகர்கள் மத்தியில் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நகரசபை எமது எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கழிவகற்றும் நடவடிக்கைகளை கிரமமாக மேற்கொள்கின்றது.

எனவே நகரசபையின் அறிவுறுத்தல்களை பின்பற்றி வீதியில் கழிவுகளை கொட்டாமல் இருந்தால் இவ்வாறான சம்பவங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம் என நகரசபை சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தெரிவித்துள்ளார்.

# பிறந்து எட்டு நாட்களேயான குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சலால் உயிரிழப்பு!

ஐந்து நாட்கள் தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த, பிறந்து எட்டு நாட்களேயான குழந்தை ஒன்று 22-08-2023 உயிரிழந்தது.

குறித்த குழந்தை பிறந்து மூன்று நாட்களில் காய்ச்சலால் பிடிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 19ஆம் திகதி காலை நயினாதீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக அங்கிருந்து பிற்பகல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வந்தது.

இவ்வாறு சிகிச்சை பெற்று வந்த குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது. நயினாதீவு முதலாம் வட்டாரத்தை சேர்ந்த மதிவதனன் சுதர்சாவிந் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# வடக்கு மாகாண மட்ட உடற்பயிற்சி போட்டியில் ஊர்காவற்துறை சென் அன்ரனி முதலிடம்!

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சி போட்டிகள் மட்ட 21-08-2023 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த நடை பெற்ற மாகாணமட்ட உடற்பயிற்சிப் போட்டியில், 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஊர்காவற்துறை சென். அன்ரனி கல்லூரி முதலிடத்தை தட்டிச் சென்றது.

அதே போல இரண்டாம் இடத்தினை இளவாலை ஹென்றிஸ் பாடசாலையும், மூன்றாம் இடத்தை வயாவிளான் மத்திய கல்லூரியும் பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.




வெற்றியீட்டிய பாடசாலை வீரர்களையும், பாடசாலை சமூகத்தையும், அவர்களை பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர்களையும் பலரும் பாராட்டி வருகின்றனர்.

உலக செய்திகள் World News

# பிரிட்டிஸ் கவுன்சில் நிறுவன ஐ.ஈ.எல்.ரி.எஸ் பரீட்சை பணிப்பாளர் ஸ்ரொமினி கட்சன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்!




வட பகுதி மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதில் பிரிட்டிஷ் கவுன்சில் எவ்வாறு உதவி புரிகின்றது என்பது தொடர்பிலான கலந்துரையாடல் என்று ஆஸ்பத்திரி வீதியில் உள்ள காகீல்ஸ் அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின் கருத்து தெரிவித்த பிரிட்டிஸ் கவுன்சில் ஐஈஎல் ரிஎஸ் பரீட்சை பணிப்பாளர் ஸ்ரொமினி கட்சன்,

கடந்த 2019ம் ஆண்டில் இருந்து கொரோனா நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து பலர் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

சிலருக்கு இந்த நாட்டில் இருந்து வெளியேறுவதற்கான தேவையுள்ளது.




அவ்வாறு செல்வோர் கட்டாயமாக ஆங்கில மொழியில் தேர்ச்சி உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆங்கில மொழியானது கட்டாயமானது.

அத்தோடு வேறு நாடுகளில் வேலை தேடுபவர்களும் உள்ளார்கள். அவ்வாறானவர்கள் ஐ.ஈ.எல்.ரி.எஸ் ஆங்கில கற்கையினை கற்று பரீட்சையில் சித்தியெய்தி வெளிநாடுகளுக்கு செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாக இந்த பயிற்சி நெறியானது ஆங்கில மொழியினை விருத்தி செய்வதற்காகவும் ஆங்கில மொழி திறன் தொடர்பான தகைமையினை அறிய உருவாக்கப்பட்டது.

புலம்பெயர்கின்ற அனைவருக்கும் இந்த மொழிப்பரீட்சையானது முக்கியமானது. இலங்கையில் பிரிட்டிஷ் கவுன்சில் பல நிறுவனங்களுடன் இணைந்து இந்த சேவையினை செய்து வருகின்றது.

இந்த சேவையில் பலர் பயனடைந்து வருகின்றார்கள். அந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே நான் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு ஐ.ஈ.எல்.ரீ.எஸ் கற்கை நெறியினை செயற்படுத்துவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக வருகை தந்து அவர்களுடன் கலந்துரையுள்ளேன் - என்றார்.

இந்தியா செய்திகள் India News

# சென்னையிலுருந்து காங்கேசந்துறைக்கு உல்லாசக்கப்பலில் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை

சென்னையிலிருந்து ஜூன் 16 முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காங்கேசந்துறைக்கு வந்து செல்லும் கோர்டிலியா உல்லாசப்பயணக்கப்பலில் வந்து செல்லும் பயணிகளுக்கான சேவைகளை வழங்குவது தொடர்பில் வடமாகாண சுற்றுலாப் பணியகம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களுடன் 21 ஓகஸ்ட் 2023 அன்று ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட காணி ஆணையாளர், யாழ்ப்பாண இந்திய துணைத்தூதுவர், வடமாகாண துறைமுக அதிகாரசபை தலைவர், வடமாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், தெல்லிப்பளை பிரதேச செயலகர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளர், வடமாகாண கடற்படை அதிகாரி, பொலிஸ் அதிகாரி, யாழ்ப்பாண மாவட்ட தனியார் உள்ளூர் போக்குவரத்து சங்க தலைவர் முதலியோர் கலந்து கொண்டனர்.

இந்த உல்லாசப் பயணக்கப்பல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சென்னையிலிருந்து புறப்பட்டு அம்பாந்தோட்டை, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் தங்கி வெள்ளிக்கிழமை காங்கேசந்துறை துறைமுகத்தை வந்தடைந்து மீண்டும் சென்னையை சென்றடைகின்றது.

இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வந்திறங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையே இங்கு காணப்படுவதாக வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினர் சுட்டிக்காட்டியிருந்தனர். அதனை தொடர்ந்து பயணிகளுக்குரிய அடிப்படை வசதிகள், உள்ளூர்ப் பயணங்களுக்குரிய வாகன ஒழுங்குகள், சுற்றுலா வழிகாட்டும் ஒழுங்குகள் என்பவற்றை செய்வதற்குரிய பொறிமுறைகள் தொடர்பாக ஆளுநர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார்.





# வடக்கு மாகாணஆளுநரின் வழிகாட்டலில் உள்ளூராட்சி மன்றங்கள் சூழலை சுத்தமாக வைத்திருக்க விசேட வேலைத்திட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



வடக்கு மாகாணத்தலுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமது பிரதேசங்களை சுத்தமாக வைத்திருக்க விசேட வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் எனும் ஆளுநரின் வழிகாட்டலுக்கமைவாக தமது விசேட வேலைத்திட்டங்களை நல்லூர் மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைகள் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி. எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் ஆரம்பித்திருக்கின்றன.

21.08.2023 காலை 7 மணியளவில் நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்தியிலே கழிவுத்தொட்டிகள் வைக்கும் நிகழ்வு ஆளுநரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து காலை 7.30 மணியளவில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆயிரம் மரங்களை நாட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது மரம் செம்மணிச் சந்தியிலே ஆளுநரினால் நாட்டிவைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.



இவ்வேலைத்திட்டங்கள் ஆளுநரின் வழிகாட்டலுக்கமைவாக அந்தந்த பிரதேசங்களிலுள்ள பொதுமக்களுடன் இணைந்தே செயற்படுத்தப்படவுள்ளன. அந்தவகையில் கழிவுத்தொட்டிகளை வைக்கும் நிகழ்ச்சித்திட்டத்திலே கழிவுத்தொட்டிகளுக்கு பொறுப்பாக கடைவியாபாரிகள் செயற்படவுள்ளனர். அதே போல் இந்த வேலைத்திட்டங்கள் முழுவதும் பொதுமக்களின் ஒத்துழைப்போடு அவர்களுடன் இணைந்து செயற்படுவதாகவே காணப்படும் என உள்ளூராட்சித் திணைக்களம் கூறியுள்ளது.

# ஆனைக்கோட்டையில் கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவாவுடன் இருவர் கைது!

சட்டத்துக்கு புறம்பாக தயாரிக்கப்பட்ட கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டை பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 21 கிராம் 450 மில்லிகிராம் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# 13வது திருத்தம், முள்ளில் விழுந்த சேலை பக்குவமாய் எடுக்க வேண்டும் — அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவாக செயல்பட்டு வரும் நிலையில் கூப்பாடு போடாமல் அதனை நடைமுறைப் படுத்துவதற்கு தமிழ் கட்சிகள் ஒன்று பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக இலங்கையில் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13வது திருத்தம் தற்போது முற் செடியில் மாட்டிய சேலையைப் போல் உள்ள நிலையில் அதனை கிழியாமல் எடுத்து செய்ய வேண்டியதை செய்வதே எமது இலக்கா இருக்க வேண்டும்.

இதை ஏன் நான் உதாரணமாக கூறினேன் என்றால் பதின்மூன்றுக்கு எதிரானவர்கள் தென் இலங்கையில் இருக்கின்ற நிலையில் பதின்மூன்று தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஆரவாரப்பட்டால் தேவையற்ற பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடும்.

இலங்கை இந்தியா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நான் இலங்கைக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்பதற்காக தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக தேசிய நல்லிணக்கம் ஊடாக பிரச்சனை அணுகுதலை இன்று வரை செயல்படுத்திக் கொண்டு வருகிறேன்.

பிரேமதாச காலத்தில் வாகனங்களில் (சிறீ) எழுத்துப் பதிவிடுவது தமிழ் மக்களின் முதலாவது போராட்டமான சிறீ எதிர்ப்பு போராட்டத்தை அப்போதைய தமிழ் தலைவர்கள் முன்னெடுத்தனர்.

ஆனால் குறித்த போராட்டத்தை நீடிக்க விடாமல் இரவோடு இரவாக பிரேமதாசா அரசாங்கத்தோடு கச்சிதமாக பேசி கலவரங்கள் ஏற்படாத வகையில் (சிறீ) தீர்மானத்தை இல்லாமல் செய்தோம்.

இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் நமது நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில் அவர்களின் விருப்பத்தை மீறி தீர்மானங்களை மேற்கொள்வது கஷ்டமான காரியம்.

அதேபோன்றுதான் 13வது திருத்தம் தொடர்பில் சிங்கள மக்களை குழப்புவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் செயல்பட்டு வரும் நிலையில் அவர்களின் உசுப்பேத்தல்களுக்கு தமிழ் தரப்புகள் கூக்காடு போட்டால் அரசாங்கத்துக்கு இடையூறுகள் ஏற்படும்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கான ஆரம்ப கட்ட தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார்.

பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமற்ற நிலையில் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நடைமுறைப்படுத்த முடியும்.

ஆகவே பதின் மூன்று தொடர்பில் தேவையற்ற பேச்சுக்களை தவிர்த்து தந்திரமான முறையில் அதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.



# வரலாற்றுச் சிறப்புமிக்க அலங்கார நல்லூர் கந்தனின் வருடாந்த மஹோற்சவம் கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமானது

21.08.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மஹோற்சவம் கருவறையில் வீற்றிருந்த அலங்கார கந்தனுக்கும், வள்ளி, தெய்வானைக்கும் விஷேட அபிஷேக ஆராதனைகளை நடைபெற்றன.

தொடர்ந்து காலை 10.00 மணியளவில் மேளதாள வாத்தியங்கள் முழங்க சிவாச்சாரியர்களின் வேதபாராயண ஓத ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வைகுந்தன் தலைமையிலான சிவாச்சாரியர்களால் கொடியேற்றிவைக்கப்பட்டது.

21.08.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மஹோற்சவம் எதிர்வரும் 25 நாட்கள்திருவிழா இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

30.08.2023 அன்று 10வது திருவிழாவாக திருமஞ்சத் திருவிழாவும், 04.09.2023 அன்று 12வது திருவிழாவாக அருணகிரிநாதர் திருவிழாவும், 05.09.2023 அன்று 13வது திருவிழாவாக திருக்கார்த்திகை திருவிழாவும், 06.09.2023 அன்று 14வது திருவிழாவாக சூரியோதய திருவிழாவும், 09.09.203 அன்று சந்தான கோபாலர் திருவிழாவாக, மாலை திருக்கைலாச திருவிழாவும், 10.09.2023 வேல்விமானத் திருவிழாவும், 11.09.2023 அன்று தண்டயுதபாணி உற்சவ திருவிழாவும், 12.09.2023 அன்று ஒருமுகத் திருவிழாவும், மாலை சப்பறத் திருவிழாவும், 13.09.2023 அன்று இரதோற்சவமும், 14.09 அன்று தீர்த்ததோற்சவமும் நடைபெற்று, மாலை கொடியிறக்கத்துடன் இனிதே திருவிழா நிறைவடையும்.

இன்றைய கொடியேற்ற உற்சவத்தில் பல பாகங்களில் இருந்து வருகை தந்தபக்தர்கள் பலரும் இஷ்டசித்திகளை பெற்றுச்சென்றனர்.







# சண்டிலிப்பாயில் வீடொன்றின மீது தாக்குதல் ஒருவர் காயம் உடைமைகள் நாசம்

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழாய் பகுதியில் உள்ள வீடு ஒன்று தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்ட சம்பவம் 20-08-2023 இரவு 8:30 மணியளவில் பதிவானதாக பொலிசார் தெரிவித்தனர்.

முகத்தை கறுப்பு துணியால் கட்டி வந்த நால்வர் உள்ளடங்கிய கும்பல் அத்துமீறி வீட்டினுள் பிரவேசித்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துடன் குளிர்சாதன பெட்டி, தொலைக்காட்சி, சோக்கேஸ், சமையலறை உபகரணங்கள், தளபாடங்கள் என்பவற்றை அடித்து நொறுக்கி சேதம் விளைவித்துள்ளதுடன் இருமோட்டார் சைக்கள்களை எரித்து விட்டு தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இது குறித்து பொலிசாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் தடயவியல் பொலிசார் தடயங்களை ஆய்வுசெய்தனர்.



வீட்டிலிருந்த 20 வயது இளைஞன் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கோடிலியா உல்லாசப் பயணக் கப்பல் சுற்றுலாவிகளை வரவேற்க விசேட ஏற்பாடு – வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்பின் பேரில் முன்னெடுப்பு

இந்தியாவிலிருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காங்கேசன் துறைமுகத்துக்கு வரும் கோடிலியா உல்லாசப் பயணக் கப்பல் சுற்றுலாவிகளுக்கு வேண்டிய சேவைகளை உரிய முறையில் வழங்க வடக்கு மாகாண ஆளுநரின் விசேட உத்தரவின் பேரில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜூன் 16ம் திகதி காங்கேசன் துறைமுகம் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டபோது முதல் தடவையாக வருகை தந்திருந்த கோடிலியா உல்லாசப் பயணக் கப்பல் இந்த மாதம் 11ம் மற்றும் 18ம் திகதிகளிலும் காங்கேசன் துறைமுகத்துக்கு வந்திருந்தது. எனினும், இந்தக் கப்பலில் வரும் உல்லாசப் பயணிகளை வரவேற்று உபசரிக்க உள்ளூர் மட்டத்தில் உரிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து, வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தினர் உட்பட துறைசார்ந்த அதிகாரிகள் பலரையும் நேரில் அழைத்து திங்களன்று (21-08-2023) விசேட கலந்துரையாடலை நடாத்திய ஆளுநர் அவர்கள், சுற்றுலாப் பயணிகளை வரவேற்று உபசரிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவஸ்ரீ தலைமையில் வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக தலைவர் பத்திநாதன், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகனன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் இணைப்பாளரும், சுற்றுலாப் பணியக பணிப்பாளர்சபை உறுப்பினருமான று'ாங்கன், வலிகாமம் வடக்கு பிரதேசசபை செயலாளர் சுதர்ஜன், வடக்கு மாகாண கைத்தொழில் திணைக்கள பணிப்பாளர் வனஜா ஆகியோர் இணைந்து தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் செவ்வாயன்று (22-08-2023) நடாத்திய விசேட கலந்துரையாடலின்போது சுற்றுலாப் பயணிகளை வரவேற்று உபசரிப்பதற்கான பல்வேறு ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூர் தனியார் பேரூந்து சங்கத் தலைவர், தெல்லிப்பழை - காங்கேசன்துறைப் பகுதி முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், போக்குவரத்துத் துறை சார்ந்த வேறு பிரதிநிதிகள், உணவு உற்பத்தி மற்றும் விற்பனை சார்ந்தவர்கள் உள்ளிட்ட பலருடனும் இதன்போது விரிவான கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

சுற்றுலாவிகளுக்கான முச்சக்கரவண்டி, கார், சிறியரக வான், பேரூந்து உள்ளிட்டவற்றின் சேவையை சுற்றுலாப் பயணிகளை வரவேற்று உபசரிக்கும் வகையில் திறம்பட வழங்குவது குறித்தும் பேசப்பட்டதுடன், சேவை வழங்குநர் அனைவரையும் வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தில் பதிவுகளை மேற்கொண்டு உரிய ஒழுங்கு முறையில் சேவையை வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இதுவரையில் சுற்றுலாவிகள் விசேட பேரூந்து மூலம் துறைமுகத்திலிருந்து கொண்டுவந்து இறக்கப்பட்ட காங்கேசன்துறை வெளிச்சவீட்டுச் சந்தியில் வசதிகள் போதாமிலிருப்பதால், துறைமுகத்துக்கு அருகாமையில் தற்போது பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் கட்டிடத்தில் சுற்றுலாவிகளை வரவேற்று உபசரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்வது குறித்து நேரில் சென்று ஆராயப்பட்டது. இந்தக் கட்டிடமும், அதன் சுற்றுப்புறமும் போதிய இடவசதியுடன் இருக்கின்ற காரணத்தினால் போக்குவரத்து வாகனங்களை உரிய முறையில் ஒழுங்குபடுத்தி, உணவு மற்றும் இதர யாழ்ப்பாண உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கான கூடங்களையும் அதற்குள் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு என 40 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ பொருட்கள் கையளிப்பு



**- மன்னார் நிருபர் (23-08-2023)**

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்திய சாலை அபிவிருத்திச்சபை என குறிப்பிடப்படும் தொண்டு அமைப்பின் அனுசரணையில் புதன்கிழமை (23) மதியம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் ஒரு தொகுதி மருத்துவ பொருட்கள் மற்றும் உபகரணப்பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த அமைப்பின் தலைவர் சுபேதி தேரர் அவர்களினால் சுமார் 40 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ பொருட்கள் மற்றும் உபகரண பொருட்கள் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு வழங்கும் வகையில் புதன்கிழமை (23) மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி பங்களிப்பு மற்றும் அனுசரணையை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் இலங்கையை சேராதவர்கள் வழங்கி உள்ளனர்.

குறித்த மருத்துவ உபகரணங்கள் நேரடியாக வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு தருவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த மருத்துவ பொருட்கள் மற்றும் உபகரணப்பொருட்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை என குறிப்பிடப்படும் தொண்டு அமைப்பின் அனுசரணையில் குறித்த அமைப்பின் தலைவர் சுபேதி தேரர் அவர்களினால் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் ஊடாக உரிய வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் "இனிய நந்தவனம்" இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு

தமிழ்நாட்டின் திருச்சியில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் "இனிய நந்தவனம்" இதழானது வெள்ளி விழா கண்ட தமிழ் இதழாகும். தமிழர்கள் வாழும் நாடுகளுக்கெல்லாம் அனுப்பப்படும் இந்த இதழானது நாடுகள், பிரதேசங்கள், ஊர்கள், முக்கிய தினங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அநேக சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளது.

முன்னே யாழ்ப்பாணச் சிறப்பிதழை வெளியீடு செய்துள்ளது. அதன் தொடர்ச்சியாக இலங்கைச் சிறப்பிதழ் வெளியாகி இருக்கின்றது. இலங்கைச் சிறப்பிதழின் யாழ்ப்பாண அறிமுக நிகழ்வானது "இனிய நந்தவனம்" இதழின் இலங்கை தொடர்பாளர் எழுத்தாளர் யாழ். பாவாணன் தலைமையில் 19.08.2023 சனிக்கிழமை பிற்பகல் 3:30 மணிக்கு ஈழத்தின் யாழ்ப்பாணம் பொதுசன நூலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. நிகழ்வில் பிரதம பங்கேற்பாளராக "இனிய நந்தவனம்" இதழின் ஆசிரியர் த.சந்திரசேகரன் பங்கேற்றார்.

நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர் மாதகல் மயூரன் தொகுத்து வழங்கினார். தமிழ் மொழி வாழ்த்தினை யாழ்.மாதகல் சென் யோசேப்பு மகா வித்தியாலய மாணவர்கள் இசைத்தனர். வரவேற்புரையினை யோ.புரட்சி வழங்கினார்.

வாழ்த்துரையினை இலக்கிய விருது பெற்ற படைப்பாளர் ஓய்வு நிலை அதிபர் ஆ.கனகரத்தினம் வழங்கினார். இலங்கை இதழின் அறிமுக உரையினை எழுத்தாளர் லதா கந்தையா நிகழ்த்தினார். "செத்த வீடு" சிறுகதை உள்ளிட்ட அனைத்து கதைகளின் பட்டியலை வழங்கிய லதா தந்தையா இதழில் இடம் பெற்றுள்ள படைப்புகளை குறித்து விளக்கங்களையும் அளித்தார்.

இதழ் பற்றிய மதிப்பீட்டு உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் (சிறப்பு) பட்டதாரி டயானா நியூட்டன் நிகழ்த்தினார். அட்டைப்பட அமைப்பு முதலாக கட்டுரைகள், கவிதைகள், நேர்காணல்கள் உள்ளிட்ட ஒவ்வொரு அம்சங்களையும்



தெளிந்து ஆராய்ந்து மதிப்பீட்டுரையினை வழங்கினார் டயானா நியூட்டன் அவர்கள். நிகழ்வில் இதழ் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், இலங்கை தொடர்பாளர் யாழ் பாவாணன் ஆகியோர் மதிப்பளிப்புச் செய்யப்பட்டனர்.

நன்றியுரையினை காசி ஜீவலிங்கம் வழங்கினார். ஏற்புரையினை "இனிய நந்தவனம்" ஆசிரியர் சந்திரசேகரன் வழங்கினார். சிற்றிதழ் தொடரான வெளிவருதலில் பொருளாதாரம் என்பது முக்கிய பங்கு வகிப்பதனையும், பொருளாதாரத்திற்காக இலக்கியத்தை தள்ளி வைக்கவில்லை என்பதையும் இரண்டையும் சமமாக இனிய நந்தவனம் கொண்டு செல்வதனால்தான் 25 ஆண்டுகளை கடந்து இயங்குகிறது" என்பதை குறிப்பிட்டார் சந்திரசேகரன். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இலக்கிய விரும்பிகளும் இலக்கியப் படைப்பாளர்களும் பங்கேற்ற சிறப்பான நிகழ்வாக இன்றைய நிகழ்வு அமைந்திருந்தது.



# நல்லூரானின் கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு மிகவும் பக்தி பூர்வாமாக இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன்படி கல்வியங்காட்டில் அமைந்துள்ள, கொடிச்சீலை வழங்கும் செங்குந்தர் பரம்பரையை சேர்ந்தவரின் இல்லத்தில் கொடிச்சீலைக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று மங்கள வாத்திய சகிதம் கல்வியங்காடு வேல் மடம் முருகன் ஆலயத்திற்கு கொடிச்சீலை எடுத்து செல்லப்பட்டது.

அதனை தொடந்து வேல் மடம் முருகன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தில் பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

21-08-2023 காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறவுள்ளது.







# நெல்லியடி கொடிகாமம் வீதியில் கோவில் சந்தை பகுதியில் அதிகாலை விபத்து இரு இளைஞர்கள் பலி!

நெல்லியடி கொடிகாமம் வீதியில், கோயில் சந்தை பகுதியில் 19-08-2023 அதிகாலை 1:20 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மரண வீடு ஒன்றிற்கு சென்று விட்டு கொடிகாமம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது வேக கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்திற்கு உள்ளாகியதில் சம்பவ இடத்திலேயே இருவரும் மரணமடைந்துள்ளனர்.

இதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக வசிக்கும் 31 வயதுடைய செல்வநாயகம் வின்சன் மனோஜ்குமார், கரவெட்டி வதிரியைச் சேர்ந்த 29 வயதுடைய விஜயகாந்த் நிசாந்தன் ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சடலம் பருத்தித்திறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.





# மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலார்களுக்கான வாழ்வாதார உதவிகள் மெசிடோ நிறுவனத்தால் வழங்கி வைப்பு

- மன்னார் நிருபர் (21.08.2023)

மன்னார் மாவட்டத்தில் மண்டோஸ் புயலினால் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டு உரிய நிவாரணங்கள் கிடைக்க பெறாமல் வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் காணப்பட்ட 40 மீனவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (21) மன்னார் மாவட்ட செயலக ஜேக்கா மண்டபத்தில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இடம் பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் நிவாரணப் பணியின் ஒரு பகுதியாக மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக 40 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு குடும்பத்திற்கு தலா 45.000 ரூபா பெறுமதியான வலைகள் உள்ளடங்களான மீன் பிடி உற்பத்தி பொருட்கள் கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி மெண்டோஸ் புயலினால் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கும் கிளிநொச்சி மாவட்டதில் 40 குடும்பங்களுக்கும் முல்லைத்தீவு 40 குடும்பங்களுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த 52 குடும்பங்களுக்கும் என மொத்தமாக 172 குடும்பங்களுக்கு குறித்த நிவாரண பொருட்கள் கையளிக்கப்படவுள்ளது.

அதே நேரம் கடந்த மாதம் மெசிடோ நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட பெண் முயற்சியாளர்களுக்கான சவர்கார உற்பத்தி பயிற்ச்சியை பூர்த்தி செய்த பெண்களுக்கான சான்றிதல் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பனிப்பாளர் கலிஸ்ரன், கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை உதவிப்பணிப்பாளர் லெம்பேர்ட் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமை பிரிவில் உதவி பணிப்பளர் திலீபன் உட்பட பலரும் கலந்து கொண்டு மீனவர்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் கைத்தொழில் பயிற்சியை பூர்த்தி செய்த பெண்களுக்கான சான்றிதலையும் வழங்கி வைத்தனர்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் விபத்து – ஒருவர் மரணம்

- மன்னார் நிருபர் (22.08.2023)







மன்னார் - தலைமன்னார் பிராதன வீதியில் பயணித்த இரு வாகனங்கள் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணித்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் திங்கள் (21) மாலை மன்னார் - தலைமன்னார் பிராதன வீதியில் தலைமன்னார் பொலிஸ் பிரிவான பருத்திப் பண்ணையில் இடம் பெற்றுள்ளது.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருகையில், தலை மன்னார் ஊர்மனையைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தையின் தந்தையான லோறன்ஸ் மனோகரன் நிசாந்தன் (வயது 32) என்பவரே விபத்துக்கு உள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மனோகரன் நிசாந்தன் பேசாலையில் இருந்து தனது மோட்டர் சைக்கிளில் தனிமையாக தனது கிராமமான தலைமன்னார் ஊர் மனைக்கு பயணித்துக் கொண்டிருந்த போது வெளி மாவட்டத்திலிருந்து சுற்றுல்லா வந்த ஹயஸ் ரக வாகனம் தலைமன்னார் ஊர்மனையிலிருந்து மன்னாருக்கு வந்த போது இரண்டு வாகனங்களும் மோதி இவ் விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இறந்தவரின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு உடற் கூற்று பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மேலும் விபத்துக்கு உள்ளான மோட்டார் சைக்கில் மீது மோதுண்ட வாகனம் தலைமன்னார் பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தலைமன்னார் பொலிசார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

# திருகோணமலையில் "இனிய நந்தவனம்" இலங்கை சிறப்பிதழ் சஞ்சிகை வெளியீடு



வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இனிய நந்தவனம் சஞ்சிகையின் இலங்கை சிறப்பிதழ் 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ச.திருச்செந்தூரன், கவிஞர் க.யோகானந்தம், கவிஞர் தில்லைநாதன் பவித்ரன் உள்ளிட்டோர் உரையாற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில், திருகோணமலையை சேர்ந்த அனாமிகா பண்பாட்டு மையத்தின் நிறுவுனர் பேராசிரியர் பாலசிங்கம் சுகுமார், வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் சிரேஷ்ட உதவியாசிரியர் கந்தையா சிவராசா, கெப்பிட்டல் வானொலியின் முன்னாள் சிரேஷ்ட நிகழ்ச்சி முகாமையாளர் தில்லையம்பலம் தரணிதரன் உள்ளிட்டோர் கலைக்கேசரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிறைவாக இனிய நந்தவனம் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் ஏற்புரையாற்றி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



# கிளிநொச்சி வைத்தியசாலையில் கர்ப்பப்பை அகற்றிய விவகாரம் – அமைச்சிடம் விளக்கம் கேட்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட பெண்ணின் கர்ப்பப்பை அகற்றிய விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் மத்திய சுகாதார அமைச்சிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பம் சார்பில் கணவரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் பின்வருமாறு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

யூன் மாதம் கிளிநொச்சி வைத்திய சாலையில் தனது கர்ப்பம் தரித்த மனைவி பிரசவத்துக்காக சென்ற போது வைத்தியர்களால் உரிய சிகிச்சை அளிக்கப்படாமல் பாரபட்சம் காட்டப்பட்டதால் எனது குழந்தை இறந்துள்ளது.

எனது குழந்தை இறந்தமைக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்களே பொறுப்பேற்க வேண்டும் எனவும் குழந்தை இறந்ததுடன் கர்ப்பப்பை அகற்றுவதற்கு எனது மனைவிக்கோ அல்லது என்னிடமோ வைத்தியர்கள் கேட்காத நிலையில் எனது குழந்தை இறந்தமைக்கும் எனது மனைவியின் கர்ப்பப்பையை அகற்றியமைக்கும் நீதி கிடைக்க வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட ஆணைக்குழு கிளிநொச்சி வைத்தியசாலையில் முறைப்பாட்டாளர் தெரிவித்த விடயங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தால் பதில் வழங்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் குறித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மத்திய சுகாதார அமைச்சும் குறித்த வைத்தியசாலைக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# இந்திய மீனவர்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம் என்கிறார் எம்.வி.சுப்பிரமணியம்

காங்கேசன் துறை கடல் எல்லையில் வைத்து இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வடமாகாண மீனவர்கள் சார்பில் கண்டிப்பதாக அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான என்.வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை காங்கேசன் துறைக் கடல் எல்லையில் வைத்து இந்திய நாட்டுப் படகு மீனவர்கள் மிகவும் கொடூரமான முறையில் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

எமது வடபகுதி மீனவர்கள் இந்தியா ரோலர் மீன்பிடிப் படகுகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்திய மீனவர்களின் வருகை சற்று குறைந்துள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில் எமது மீனவர்களையும் இந்திய மீனவர்களையும் தூண்டிவிடும் நோக்கில் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது.

கடற்தொழிலையே வாழ்வாதாரமாக நம்பி இருக்கும் இந்தியா மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர்களின் பல இலட்சம் பெறுமதியான கடற்தொழில் உபகரணங்களும் சூறையாடப்பட்டுள்ளது.

ஆகவே தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் உடல்நலம் தேர்ச்சி பெறுவதுடன் குறித்த தாக்குதலை வடமாகாண மீனவர்கள் சார்பில் கண்டிக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் முன்னாள் யாழ் மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசாவும் கலந்து கொண்டார்.

# குற்றச் செயல்களுடன் தொடர்பட்ட 9பேரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு!

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல் மேற்கொள்ளுதல், பெற்றோல் குண்டு அடித்தல், பொருட்களுக்கு சேதம் விளைவித்தல், வாகனங்களை தீயிட்டு எரித்தல் போன்ற குற்றச்செயல்களுடன் தொடர்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களையும் 24 ஆம் திகதி விளக்கமறுகளில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.


யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் வழிகாட்டலில், யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெ. மேனன் தலைமையிலான குழுவினர் மேற்படி சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்கள் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் முகவர்களூடாக அவர்களிடம் பணம் பெற்று கூலிப்படையாகச் செயற்பட்டு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கள்வியங்காட்டுப் பகுதியில் பெண்களின் ஆடை அணிந்து வீட்டினை நாசப்படுத்தி எரித்தமை கீரிமலைப் பகுதியில் ஒரு லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுத் தாக்குதல் மேற்கொண்டமை, திருநெல்வேலியில் மருத்துவர் வீட்டில் பெற்றோல் குண்டு அடித்தமை, கோப்பாய் பால்பண்ணை பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீதான தாக்குதல் போன்ற பின்னணியில் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் மேய்ச்சல் தரையைப் பிடிக்கும் சிங்கள விவசாயிகள்

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



மட்டக்களப்பில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைகளை சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். இது தொடர்பாக நீதிமன்ற உத்தரவுகள் இருக்கத்தக்கதாக அவற்றை மீறி ஆக்கிரமிப்பு நடந்து வருகிறது. அந்த பிரதேசம் மலைகளை அண்டியிருக்கிறது. மலைகளில் இருந்து வடிந்து வரும் நீர் பரவியோடும் பிரதேசம் என்ற காரணத்தால் அது ஒரு செழிப்பான பூமி.தமிழ்ப் பண்ணையாளர்கள் சுமார் 4 லட்சம் கால்நடைகளை அங்கே வைத்து பராமரிக்கிறார்கள். கிட்டத்தட்ட 996 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அந்த பண்ணைகளில் வேலை செய்கிறார்கள்அதனால் பயனடைகிறார்கள். மலையகத்துக்கான இயற்கை உரம் அதாவது மாட்டெரு பெருமளவுக்கு இப்பிரதேசத்தில் இருந்துதான் கொண்டு செல்லப்படுகிறது. இப்பொழுது அதைச் சிங்கள விவசாயிகள் கொள்வனவு செய்து வருகிறார்கள். அதுவும் அறா விலைக்குத்தான். நாள் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு பார ஊர்திகளில் மாட்டு எரு ஏற்றப்படுகிறது. அந்த மேய்ச்சல் தரை இழக்கப்பட்டால் அது கிழக்கின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். அதை நம்பியிருக்கும் குடும்பங்கள் தொழிலை இழக்கும்.

மட்டக்களப்பில் ஒரு லீட்டர் பாலின் விலை 100 ரூபாய். யாழ்ப்பாணத்தில் ஒரு லீட்டர் பாலின் விலை 220 ரூபாய். அந்த மேய்ச்சல் தரையை பயன்படுத்தும் மாடுகளில் அனேகமானவை நாட்டு மாடுகள். கலப்பின மாடுகள் அல்ல. அந்த மேய்ச்சல் தரை இழக்கப்பட்டால் நாட்டு மாடுகளின் இன விருத்தி பாதிக்கப்படும். எனவே மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையை இழப்பது என்பது கிழக்கின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஏற்கனவே தமிழ் மக்களின் தாயகத்தை வடக்கு கிழக்காகப் பிரித்து விட்டார்கள். வடக்குக் கிழக்கு இணைந்த ஒரு தீர்வை முன்வைத்த இந்தியா அவ்வாறு வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட பொழுது அதைத் தடுக்கவில்லை. இன்றுவரை அது தொடர்பாக கூர்மையான கருத்துக்கள் எவற்றையும் தெரிவிக்கவும் இல்லை.

அம்பாறை மாவட்டம் என்கனவே திட்டமிட்ட குடியேற்றங்களின்மூலம் பெருமளவுக்கு சிங்களமயப்பட்டு விட்ட்து. திருகோணமலையிலும் நிலைமை அப்படித்தான். இப்பொழுது கிழக்கில் செறிவாக தமிழ் மக்கள் வாழும் இடம் என்று பார்த்தால் மட்டக்களப்புத்தான். அங்கேயும் பிள்ளையானின் கட்சி ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை பெறக்கூடிய அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. அக்கட்சியானது வடக்குக்கு எதிரான அரசியலையும் முஸ்லிம்களுக்கு எதிரான அரசியலையும் முன்னெடுக்கின்றது. அதேசமயம் தெற்கில் மகிந்த அணியோடு கூட்டிச்சேர்கின்றது. கடந்த ஆண்டு தென்னிலங்கையில் சிங்கள மக்கள் எந்த குடும்பத்திற்கு எதிராக போராடினார்களோ் எந்த குடும்பத்தை பதவிகளில் இருந்து துரத்தினார்களோ் எந்த குடும்பம் சிங்கள மக்களுக்கு அஞ்சி படை முகாம்களில் ஒளிய நேரிட்டதோ, அந்த குடும்பத்தின் அடுத்த கட்ட வாரிசு ஆகிய நாமல் ராஜபக்சவை பிள்ளையான் தன்னுடைய கட்சியின் மாநாட்டுக்கு விருந்தினராக அழைத்திருந்தார். கடந்த ஆண்டு தன்னெழுச்சி போராட்டங்களின் பொழுது அவற்றுக்கு ஆதரவாக தமிழ் பகுதிகளில் குறிப்பாக, மட்டக்களப்பில்தான் காந்தி பூங்காவைச் சூழ உள்ள பகுதிகளில் நீதிக்கான பயணம் என்று கூறி ஒரு போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. அதே மட்டக்களப்பில்தான் பிள்ளையானின் கட்சி சிங்கள மக்களால் துரத்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை தனது கட்சி மாநாட்டுக்கு அதிதியாக வரவழைத்தது.

இவ்வாறு திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலமும்,வடக்குக்குக் கிழக்கைப் பிரிப்பதன் மூலமும், தொடர்ச்சியாக நடக்கும் சிங்கள பௌத்த மயமாக்களின் மூலமும், குறிப்பாக, மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் நடக்கும் நிலப் பறிப்பின் மூலமும், கிழக்கைத் தனிமைப்படுத்தி, பலவீனப்படுத்தி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன்மூலம், தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை பலவீனப்படுத்தலாம் என்று தென்னிலங்கையில் இருப்பவர்கள் சிந்திக்கின்றார்கள். இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் வைத்துத்தான் மேய்ச்சல் தரை விவகாரத்தைப் பார்க்க வேண்டும்.

செழிப்பான அந்த மேய்ச்சல் தரையை சிங்கள விவசாயிகளை குடியிருத்துவதன் மூலம் அரசாங்கம் அபகரிக்க முயற்சிக்கின்றது. அங்குள்ள நாட்டு மாடுகள் உள்ளூரில் விளையும் காய்கறிகளை விரும்பி உண்பவை. சிங்கள விவசாயிகள் விவசாயத்துக்குத்தான் அந்த நிலத்தைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அங்கே பயிர் செய்யும் பொழுது மேய்ச்சலுக்கு வரும் மாடுகள் அந்த பயிர்களைச் சாப்பிட்டுவிடும். மேய்ச்சல் தரையில் பயிர் செய்தால் அங்கு மேய வரும் கால்நடைகள் என்ன செய்யும்? உண்ணவிரதமா இருக்கும்?

பயிர்களை மாடுகள் மேய,அங்கு நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் சிங்கள விவசாயிகள் மாடுகளை வெட்டுகிறார்கள் அல்லது கொல்லுகிறார்கள். இதுதொடர்பில் நீதிமன்ற உத்தரவுகளும் உண்டு. எனினும் எல்லாவற்றையும் மீறி அந்த மேச்சல் தரையை சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகளை சந்திப்பதற்காக மட்டக்களப்பு பல்சமய அமைப்பைச் சமூகத்தைச் சேர்ந்த 9 பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை அப்பகுதிக்குச் சென்றார்கள். அக்குழுவில் ஒரு முஸ்லிம் மௌலவியும் இரண்டு கிறிஸ்தவ மதகுருகளும் ஒரு இந்து மத குருவும் அடங்குவர். அவர்களோடு ஊடகவியலாளர்களும் சென்றிருந்தார்கள். வாகனத்தில் சென்ற அக் குழுவை அப்பகுதியில் காணப்படும் ஒரு பிக்குவின் தலைமையிலான சிங்கள விவசாயிகள் சுற்றி வளைத்திருக்கிறார்கள்.

மௌலவியை மிகவும் கேவலமாகத் திட்டியிருக்கிறார்கள். இந்து மதகுருவை அவருடைய கொண்டையைப் பிடித்து இழுப்பதற்கு ஒருவர் முயற்சித்திருக்கிறார். பல்சமயக் குழுவை கிட்டத்தட்ட நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் அவர்கள் முற்றுகையிட்டு வைத்திருக்கிறார்கள். பொலிஸார் அந்த இடத்துக்கு வந்து அந்த முற்றுகையிலிருந்து அக் குழுவை விடுவித்திருக்கிறார்கள்.

அதிலும் அங்கு வந்த ஒரு போலீஸ் அதிகாரி முதலில் அங்கே முற்றுகைக்கு தலைமை தாங்கிய பௌத்த மத குருவை காலில் விழுந்து வணங்கியிருக்கிறார். அந்த இடத்தில் ஏனைய மதகுருகளும் இருந்தார்கள். அவர்கள் பாதிக்கப்பட்ட தரப்பில் இருந்து வந்தவர்களாகவும், பாதிப்பு தொடர்பான நிலைமைகளை மதிப்பிட வந்தவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் பாதிப்பை ஏற்படுத்திய அதாவது நிலத்தை பறிக்கும் விவசாயிகளுக்கு தலைமை தாங்கிய பிக்குவை அந்த போலீஸ் அதிகாரி காலில் விழுந்து வணங்கியிருக்கிறார். ஏனைய மத குருக்களுக்கு அப்படிப்பட்ட மரியாதை கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் யாரைக் குற்றவாளி என்று கூறுகிறார்களோ் யார் சட்டத்தை மீறுகிறார் என்று கூறுகிறார்களோ்அவரை அங்கு வந்த சட்டத்தின் காவலர்கள் என்று அழைக்கப்படும் போலீசார் விழுந்து வணங்கிய பின்னர் தான் விசாரணைகளை முன்னெடுத்திருக்கிறார்கள். பிறகெப்படி நீதி கிடைக்கும்?

இது தொடர்பாக தொடர்ச்சியாக கிழக்கில் உள்ள சிவில் சமூகங்களும் அரசியல்வாதிகளும் குரலெழுப்பி வருகிறார்கள். ஆனால் சிங்கள விவசாயிகளின் ஆக்கிரமிப்பை நிறுத்த முடியவில்லை. இப்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு முன்னரே இந்த பிரச்சினை தொடங்கிவிட்டது. அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருக்கின்றது. மிகக்குறிப்பாக பன்னாட்டு நாணய நிதியத்திடம் தங்கியிருக்கின்றது. இவ்வாறு உதவிக்காக வெளி தரப்புகளிடம் கையேந்தும் ஒரு காலகட்டத்தில்கூட சிங்கள பௌத்த மயமாக்கலை அரசாங்கம் நிறுத்தவில்லை. இதை இன்னும் சரியாகச் சொன்னால் சிங்கள பௌத்த மயமாக்கல் அண்மை மாதங்களில்தான் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அப்படியென்றால் அரசாங்கம் பன்நாட்டு நாணய நிதியத்துக்கும் பயப்படவில்லை உதவி செய்யும் வெளிநாடுகளுக்கும் பயப்படவில்லை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக அண்மைக் காலங்களில் இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை ஊக்குவிக்கும் மோதல் களங்களில் பிக்குக்கள் வெளிப்படையாக காணப்படுகிறார்கள். கடந்த வாரத்துக்கு முதல் வாரம் குருந்தூர் மலையில் பொங்கல் செய்யப்போன தமிழ் மக்கள் அந்த பொங்கலுக்கு இடையில் புகுந்த பிக்குவைத் திட்டி வெளியே அனுப்பினார்கள். இப்பொழுது மற்றொரு பிக்கு பல் சமய சமூகத்தை நான்கு மணித்தியாலங்கள் முற்றுகைக்குள் வைத்திருந்து மிரட்டியிருக்கிறார்.

இதுவெல்லாம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியாமல் நடக்கவில்லை. போலீசாருக்கு தெரியாமல் நடக்கவில்லை. எல்லாமே சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்றாகத் தெரியும். இவ்வாறு இனமுரண்பாடுகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளின்மூலம் ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கையில் உள்ள சிங்கள பௌத்த தீவிரவாதிகளின் கவனத்தை வடக்கு கிழக்கின் மீது திருப்பிவிட முயற்சிக்கின்றார். அதற்கு தேவையும் உண்டு. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு பணிந்து அரசாங்கம் முன்னெடுத்துவரும் பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக சிங்கள சமூகத்தில் உள்ள எல்லா தரப்புக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வரிவிதிப்பினால் பணக்காரர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விலையேற்றத்தால் ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் மானியங்களை குறைக்க தொடங்கிவிட்டது ஊழியர் சேமலாப நம்பிக்கை நிதியம் உட்பட பல்வேறு சேமிப்புக்களில் அரசாங்கம் கைவைக்கப் போகிறது என்ற கதை வருகிறது. ஒருபுறம் படித்த சிங்கள மக்கள் நாட்டை விட்டு தப்பியோடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு புறம் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் எந்த வேளையும் பெரிய அளவில் போராடலாம் என்று எதிர்பார்ப்பு இருக்கிறது.

நாட்டின் காலநிலையும் அரசாங்கத்துக்கு சாதகமாக இல்லை. வறட்சி காரணமாக விவசாயம் அதிகளவு பாதிக்கப்பட்டு இருக்கிறது. இவை எல்லாவற்றினுடையதும் தொகுக்கப்பட்ட விளைவாக சிங்கள மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக போராடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் சிங்கள மக்கள் பெரிய அளவில் போராடக்கூடிய வாய்ப்புகளை எப்படித் தடுப்பது என்று அரசாங்கம் யோசிக்கின்றது. எனவே அரசாங்கத்திற்கு எதிரான சிங்கள மக்களின் கோபத்தை திசை திருப்பும் உள் நோக்கத்தோடுதான் அரசாங்கம் சிங்கள பௌத்த மயமாக்கலைத் தீவிரப்படுத்தி இருக்கிறது. அரசாங்கத்திற்கு எதிரான சிங்கள மக்களின் கோபத்தை தமிழ் மக்களுக்கு எதிராகத் திசை திருப்பி விடுவதற்கு குருந்தூர் மலை, மேய்ச்சல் தரை போன்ற இடங்களில் நடப்பவை அரசாங்கத்துக்கு உதவ முடியும்.



# யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகிறார்களா? — அரச அதிபர் கண்காணிக்க வேண்டும்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சரிவர ஆற்றுகிறார்களா என்பது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவ பாலசுந்தரன் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பிராசா கோரிக்கை முன்வைத்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கும் பல உணவகங்களில் விலை பட்டியல் இன்னும் காட்சிப்படுத்தப்படாத நிலை காணப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இயங்கும் பாவனையாளர் அலுவலக அதிகார சபையின் மாவட்ட அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சரிவர செய்கிறார்களா என்ற கேள்வி பலருக்கும் எழுகிறது.

நான் கடந்த வாரம் மாவட்ட செயலகத்தில் இயங்கும் பாவனையாளர் அதிகார சபைக்குச் சென்றிருந்தேன் மாவட்ட அதிகாரி எங்கே என கேட்டேன் களச் செயற்பாட்டுக்கு சென்று இருப்பதாக அங்கு கடமையில் இருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவர் கூறினார்.

களச் செயபாடு எனக் கூறிக்கொண்டு அதிகாரியும் உத்தியோகத்தர்களும் உண்மையில் கடமைக்கு தான் செல்கிறார்களா என அரசாங்க அதிபர் ஆராய வேண்டும்.

ஏனெனில் யாழ்ப்பாண நகரப் பகுதி மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் உள்ள அனேகமான வியாபார நிலையங்கள் மற்றும் உணவகங்களில் விலை பட்டியல் காட்சிப்படுத்தப்படுவதில்லை.

ஆனால் அலுவலகத்தில் கேட்டால் களச் செயற் பாட்டுக்குச் சென்றிருக்கிறோம் என கூறும் நிலையில் ஒரு வாரத்தில் ஐந்து நாட்கள் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எத்தனை கடைக்கு செல்கிறார்கள் என்பது கேள்வியாக உள்ளது.

யாழ்ப்பாண நகர பகுதிகளில் பைகளில் அடைக்கப்பட்ட கறி மிளகாய் தூள் 600 ரூபாய்க்கு விற்கப்படும் நிலையில் ஒரு கிலோ மிளகாய்த்தூளை அரைப்பதற்கு 1500 ரூபாய் செலவாகிறது.

குறித்த விடயம் தொடர்பாக யாழ்ப்மாண மாவட்ட பாவனையாளர் அதிகார சபைக்கு தெரியப்படுத்திய போது மிளகாய் தூள் தரம் தொடர்பில் பொதுச்சுகாதார பரிசோதகர்களே நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டது.

மக்களின் வரிப்பணத்தை சம்பளமாகப் பெறும் அரச உத்தியோகத்தர்களான பாவனையாளர் அதிகார உத்தியோர்கள் குறித்த மிளகாய் பை தொடர்பில் இதுவரை அறிந்திருக்கவில்லையா.

அரச உத்தியோகத்தர்களை குறை கூறுவது எனது நோக்கம் அல்ல இதே ஊடக சந்திப்பு போன்ற கடந்த மாதமும் செய்த போது குறித்த மிளகாய் பாக்கெட் தொடர்பில் கருத்துக்களை முன் வைத்தேன் ஆனால் எவரும் நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.

விலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மட்டும் பாவனையாளர்கள் அதிகார சபைக்கு மட்டும் சட்டம் இருக்குது என்றால் தரமற்ற பொருள் தொடர்பில் அவதானித்தால் அதை சம்பந்தப்பட்ட பொது சுகாதார பரிசோதர்களுக்கு ஏன் அறிவிக்க முடியாது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பிரதேச செயலக மற்றும் மாவட்ட செயலக கலாச்சார விழாக்கள் மற்றும் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு வர்த்தகர்களிடம் பணம் பெற்று விழாக்களை நடத்துங்கள் எனக் கூறப்பட்டதாக அறிந்தேன்.

வர்த்தகர்களிடம் கையேந்தி விழாக்களை நடத்தும் அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார்கள்.

ஆகவே மக்கள் வரி பணத்தை பெற்றுக்கொண்டு குளிரூட்டப்பட்ட அறைகளில் இருப்பார் மக்களின் மக்களின் அன்றாட பிரச்சினை தொடர்பில் கவனம் எடுத்து செயல்பட வேண்டும் என கூறிக் கொள்வதோடு அரசாங்க அதிபரும் தனது பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# மட்டக்களப்பு எல்லையில் சர்வமத தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரை பௌத்த தேரர் சிறைப்பிடிப்பு

(23-08-2023)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு வருகை தந்த பல்சமய தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை பௌத்த மதகுரு தலைமையில் காணி அபகரிப்பு குழு சிறை பிடித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய மத தலைவர்கள் ஊடகவியலாளர்கள் கொண்ட குழுவினர் 22.08.2023 மயிலத்தமடு பகுதிக்கு வாகனங்களில் சென்றனர்.

குறித்த பிரதேசத்தில் காணி அபகரிப்பு மற்றும் விகாரை அமைப்பது தொடர்பாகவும் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பல்சமய மத தலைவர்கள் ஊடகவியலாளர்கள் கொண்ட குழுவினர் சம்பவ தினமான காலை மயிலத்தமடு மாதவனை பிரதேசத்திற்கு வாகனங்களில் இரு வணபிதாக்கல், ஒரு மௌளலி, இரு இந்து குருக்கள் 3 ஊடகவியலாளர்கள் உட்பட 18 பேர் சென்று பண்ணையாளர்களை சந்தித்து கலந்துரையாடி விட்டு பகல் ஒரு மணி அளவில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு எல்லை பகுதியில் அமைந்துள்ள கம்பி பாலத்தில் அருகாமையில் வாகனங்களில் திரும்பிக் கொண்டிருந்த பல்சமய மத தலைவர்களின் வாகனங்களை கம்பி பாலத்தில் குறுக்கே தேர் ஒருவருடனான நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஒன்றினைந்து வீதி தடையை போட்டு வாகனங்களை தடுத்து நிறுத்தி வாகனங்களின் திறப்பு களை பிடுங்கி எடுத்து அவர்களை தடுத்து வைத்ததுடன் இந்து குருக்கள் ஒருவரை தாக்க முற்பட்டதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து கரடியனாறு மற்றும் அரங்கலாவ பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கொண்ட பொலிஸ் குழுவினர் அந்த பகுதிக்கு சென்று பௌத்த தேரர் உடனான குழுவினருடன் பேச்சில் ஈடுபட்டு அவர்கள் ஊடகவியலாளர்களின் கமராவில் பதிவு செய்த காட்சிகள் அனைத்தையும் தேரர் அச்சுறுத்தி அழித்ததுடன் இந்த செய்தியை பிரசுரிக்க கூடாது என கடிதம் ஒன்றை வற்புறுத்தி பெற்றுள்ளனர்.



தொடர்ந்தும் பௌத்த தேர் உடனான குழுவுடன் பொலிசார் பேச்சவார்த்தையில் ஈடுபட்டு பின்னர் 6 மணித்தியாலங்களின் மாலை 6 மணிக்கு விடுவிக்கப்பட்டனர்.

# மேர்வின், வீரசேகர, கம்மன்பில மூவரும் இணைந்து இனக் கலவரத்துக்கு திட்டம்? — சட்டத்தரணி ஐ சுகாஷ் தெரிவிப்பு



ஆட்டை கடித்து, மாட்டை கடித்து, தமிழ் மக்களை கடித்து, தமிழ் மக்களுடைய அரசியல் பிரதிநிதிகளை கடித்து இறுதியாக நீதிபதிகளையும் கடித்து குதறத் தொடங்கியுள்ளது சிங்கள பௌத்த பேரினவாதம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

23-08-2023 தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றத்திலேயே ஆளும் தரப்பை பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அவர்கள், முல்லைதீவு மாவட்ட நீதிபதி அவர்களே மனநோயாளி என்று விழித்து வன்மத்தை கக்கியிருக்கின்றார்.

இது நாகரீக மனித குலத்தினாலும், ஜனநாயக சமூகத்தினாலும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம். இதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஆகிய நாங்கள் மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன், சரத் வீரசேகரவுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவருடைய காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளை தடுக்கின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கோரி நிற்கின்றோம்.

சரத் வீரசேகர அவர்களுடைய கருத்துக்களை பார்க்கின்ற பொழுது, அவை தற்செயலாக முன்வைக்கப்படுகின்ற கருத்துகளாக நாங்கள் பார்க்கவில்லை.

இந்த வாரத்தை மாத்திரம் எடுத்து கொண்டால் மேர்வின் சில்வா அவர்கள் கூறுகின்றார் தமிழர்களின் தலைகளை கொய்வேன் என்று, சரத் வீரசேகர கூறுகின்றார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை பார்த்து மனநோயாளி என்று, உதய கம்மன்பில அவர்கள் கூறுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பில் உள்ள வீட்டிற்கு முன்பாக போராட்டம் செய்வேன் என்று.

இவர்களுடைய கருத்துக்களை நாங்கள் தொகுத்து நோக்குகின்ற பொழுது, இந்த சிங்கள பௌத்த பேரினவாதத்தினுடைய அதிதீவிர முகவர்களாக இருக்க கூடிய இவர்கள் அனைவரும் சேர்ந்து மீண்டும் ஒரு இனக் கலவரத்திற்கு திட்டமிட்டு இருக்கிறார்களா என்ற நியாயமான சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது.

சரிந்து கிடக்கின்ற சிங்கள பௌத்த வாக்கு வங்கியை கட்டி எழுப்பி, தங்களுடைய அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், தமிழ ர்களை திட்டமிட்ட வகையில் கட்டமைக்கப்பட்ட ரீதியில் இனவழிப்பு செய்வதற்கான தமது பொறிமுறையை தொடர்ந்து முன்னெடுப்பதற்காகவும், மீண்டும் ஒரு இன அழிப்பிற்கு ஒரு இனக் கலவரத்திற்கு இவர்கள் வித்திடுகின்றார்களா என்று சந்தேகம் எங்களுக்கு எழுந்து நிற்கின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ் அமைப்புகளும், சிவில் அமைப்புகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதை போல இலங்கையிலே நடைபெற்ற இனவழிப்பிற்கு தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலைக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உள்ளக பொறிமுறை ஊடாக ஒரு உலக விசாரணையின் ஊடாக நீதி கிடைக்கப் பெற மாட்டாது என்ற விடயத்தை சரத் வீரசேகரவின் கருத்துக்கள் மீளவும் ஒரு தடவை உறுதிப்படுத்தி இருக்கின்றது.

ஏனென்றால் சிங்கள பௌத்த பேரினவாதமும், ஆட்சியாளர்களும், தாங்கள் விரும்புகின்ற தீர்வுகளையும் கருத்துகளையும் தான் இலங்கையில் இருக்கின்ற நீதிமன்றங்கள் கொடுக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள், ஆணையிடுகின்றார்கள்.

தங்களுடைய கருத்துக்கு, தங்களுடைய நிலைப்பாடுகளுக்கு மாறாக உண்மையை உரைக்கின்ற எந்த ஒரு தீர்ப்பையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள போவது கிடையாது. அவ்வாறு தீர்ப்பை வழங்குகின்றவர்களை மனநோயாளிகள் என்ற கோதாவுக்குள் கொண்டு வந்து அவர்களுக்கு எதிராகத்தான் இந்த சிங்கள பௌத்த பேரினவாதம் நடவடிக்கை எடுக்குமே தவிர, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீதியோ தீர்வு கிடைக்கப் பெற மாட்டாது என்பது இந்த கருத்தின் ஊடாக மீள ஒரு தடவை உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

நாங்கள் வலியுறுத்த விரும்புகின்ற விடயங்கள் என்னவென்றால், மரியாதைக்குரிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி அவர்களை, சரத் வீரசேகர அவர்கள் அநாகரிகமாக மனநோயாளி என்று விழித்ததை நாங்கள் வன்மையாக கண்டிப்பதோடு ஈழத்தில் அரங்கேறிய இனப்படுகொலைக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உள்ளாக விசாரணை ஊடாக ஒரு தீர்வு கிடைக்கப் பெற மாட்டாது என்பதையும் இந்தச் சம்பவம் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தி இருக்கின்றதாகவும் வலியுறுத்த விரும்புகின்றோம் - என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காரைக்கால் மீனவர்கள் தாக்கப்பட்டமையை கண்டிக்கும் வடக்கு மீனவர்கள்!

காங்கேசன்துறை கடற்பரப்பில் இடம்பெற்ற காரைக்கால் மீனவர்கள் மீதான தாக்குதலை கண்டிப்பதாக, முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமசங்களின் சம்மேளன உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் புதன்கிழமை காலை 11:30 மணியளவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காரைக்கால் மீனவர்கள் மீதான தாக்குதல் இடம் பெற்றதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம், இவ்வாறு யார் தாக்குதல் நடாத்தினாலும் அது தவறு. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

தாக்குதல் நடாத்தப்பட்டதாக சொல்லப்படும் படகு இலக்கம் வடக்கு கிழக்கு மீனவர்களது இல்லை என்றும் யாழ்ப்பாணம் j எனவும், கிளிநொச்சி k எனவும் முல்லைத்தீவு m எனவும், மன்னார் mn எனவும் அடையாளப் படுத்தப்பட்டிருப்தபதாகவும் தெரிவித்தார்.

மேலும் எப்படியாவது கச்சதீவை மீட்டெடுப்பேன் ஏன இந்திய தமிழ்நாடு அதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருந்த கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், இது வடக்கு கிழக்கு மீனவர்கள் இருக்கும் வரை சாத்தியமில்லை எனவும் தெரிவித்ததுடன், தி.மு.க வினரே அதிகளவான விசைப்படகுகளை வைத்து எல்லைமீறிய மீன்பிடித்தலில் ஈடுட்டு வருவதாகவும், இலங்கை கடற்பரப்பில் மீன்வளங்களை அழித்து வருவதாகவும் குற்றம் சாட்டிய வரஸணகுலசிங்கம் முதலில் அவர்களை கட்டுப்படுத்துமாறும் தெரிவித்தார்.



இதேவேளை சீனாவிற்கு விஜயம் மேற்கொண்ட மீன்பிடி அமைச்சர் அங்கு என்ன ஒப்பந்தம் செய்து இங்குவந்து கடலட்டை பண்ணையாக இருந்தாலென்னெ அவற்றை செயற்படுத்த முடியாது என்றும் மீறி செயற்பட்டால் ஒட்டுமொத்த கடற்றொழில் சமூகமும் சேர்ந்து எதிர்க்கும் எனவும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்களின் விலைகளை ஒழுங்குபடுத்தாமல் இருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை என அரச அதிபர் எச்சரிக்கை



யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்களின் விலைகளை ஒழுங்குபடுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியும் இதுவரை எழுத்து மூலமான உரிய பதில் கிடைக்கவில்லை என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவ பாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் ஒரு கப் பால் தேனீர் 200 ரூபாய்க்கு விற்கப்படுவது தொடர்பில் செவ்வாய்க்கிழமை அரசாங்க அதிபரை தொடர்பு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் சிற்றுண்டி உரிமையாளர்கள் வர்த்தக சங்கத்தினர் உணவகத்தினர் மற்றும் வெதுப்பக உற்பத்தி பொருட்கள் சார்ந்தவர்களுடனா உயர் மட்ட கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் உணவு பண்டங்களின் மாறுபட்ட விலைகள் தொடர்பில் பேசப்பட்ட நிலையில் உணவக உரிமையாளர்கள் தமக்குள்ளே ஒரு சங்கமாக இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி விலைகள் தொடர்பில் மாவட்ட செயலகத்திற்கு அறியத் தருமாறு கூறினேன் அதற்கான கால எல்லையும் முடிவடைந்த நிலையில் பதில் தரவில்லை.

நல்லூர் சம்பவம் தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரை சம்பவம் தொடர்பில் நேரில் சென்று பார்வையிடுமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்.

ஆகவே உணவகங்களில் விற்கப்படும் உணவு பண்டங்களின் விலை தொடர்பில் உரிய தரப்பினர்கள் அறிவுறுத்தல்களை செவி சாய்க்காவிட்டால் மேலதிக நடவடிக்கைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.




# "வேறொரு நாட்டின் குடியுரிமைபெற்ற இலங்கை முஸ்லிம் ஒருவர், இங்கு வந்து திருமணம் செய்ய முடியாது; இந்தத் தடைநீக்கப்பட வேண்டும்"

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்வலியுறுத்து!

(23-08-2023)

"வேறொரு நாட்டின் குடியுரிமை பெற்ற இலங்கை முஸ்லிம் ஒருவர், இங்கு வந்து திருமணம் செய்ய முடியாது என்ற தடை நீக்கப்பட வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் (22) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, "பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான கொண்டுவந்த இந்தப்பிரேரணையானது காலத்திற்கு தேவையான ஒன்றாகும்.

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் களின் வசதிகளைப் பார்க்கின்ற போது, மிகவும் மோசமான ஒரு நிலையே காணப்படுகிறது.

திருமணப்பதிவொன்றின் கொடுப்பனவாக 1140 ரூபா மாத்திரமே வழங்கப்படுகின்றது.

அதில் 240 ரூபாய் அரசுக்கு வழங்கினால் 900 ரூபா அளவிலேயே அவர்களுக்கு கொடுப்பனவாக கிடைக்கிறது. பிறப்புச் சான்றிதழ் பதிவாளருக்கு பிறப்புச் சான்றிதழ் ஒன்றுக்கு 75 ரூபாய் வழங்கப்படுகிறது.

அலுவலக பராமரிப்புக்கான மாதம் ஆயிரம் ரூபாவும், அதுவும் கொழும்பு போன்ற மாவட்டங்களில் ஆயிரம் ரூபாவும் தூர இடங்களில், கிராமப்புறங்களில் உள்ள பதிவாளர்களுக்கு 700 ரூபாவும் வழங்கப்படுகிறது.

காகிதாதிகள், உபகரணங்கள் செலவுக்கு மாதம் ஒன்றிற்கு 500 ரூபாவே பதிவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. தற்போதைய வாழ்க்கைச் செலவுடன்ஒப்பிடும்பொழுது இந்தக் கொடுப்பனவுகள் மிகவும் சொற்பளவிலேயே இருக்கின்றன.

இவற்றைக்கவனத்திற்கொண்டு மேற்படி கொடுப்பனவுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு, விடயத்துக்குபொறுப்பான அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, உதாரணமாக கம்பஹா போன்ற மாவட்டங்களில் உள்ளஒரு திருமணப் பதிவாளர் கொழும்புக்கு வந்து ஒரு திருமணப் பதிவைச் செய்யும் போது, பலஇன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. குறித்த பதிவாளர் கொழும்பில் உள்ள பதிவாளர் நாயக திணைக்களத்துக்குச் சென்று அனுமதியைப் பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இதனால் பல நாட்களை செலவிட வேண்டிய துர்ப்பாக்கியம் அவருக்கு ஏற்படுகிறது. அவருக்கு 4000 ரூபா கொடுப்பனவு கிடைக்கின்ற போதும், அவர் பல நாட்கள் நேரவிரயம் செய்ய வேண்டிய சூழ்நிலையும் உருவாகின்றது. எனவே, இந்தப் பதிவை ஆன்லைன் முறையில் செய்ய முடியும்.

ஏனெனில், தற்போதுள்ள தொழில்நுட்ப வசதி அதற்கு ஏதுவாக இருக்கும். இவ்வாறான முறைமை பின்பற்றப்பட்டால் பதிவாளர்களுக்கு தமது காரியங்களை நிறைவேற்ற இலகுவாக இருக்கும். இதன்மூலம் செலவு மற்றும் நேரம் மட்டுப்படுத்தப்படுகிறது.

அதேபோன்று, வெளிநாட்டில் உள்ள இலங்கையர், குறிப்பாக முஸ்லிம் ஒருவர், அந்த நாட்டின் குடியுரிமையைப் பெற்று விட்டார் என்றால் அவர் மீண்டும் நமது நாட்டுக்கு வந்து திருமணம் செய்வதற்கு அதாவது, திருமணப் பதிவை மேற்கொள்வதற்கு தடைகள் இருக்கின்றன.

இலங்கையில் வாழும் ஒரு முஸ்லிம் பெண்ணை, வெளிநாட்டு குடியுரிமை பெற்ற முஸ்லிம் ஒருவர் இங்கு வந்து திருமணம் செய்வதற்கு பல சிரமங்கள் உள்ளன. இது முஸ்லிம்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப் படுகின்ற தடையாகவே காணப்படுகின்றது.

அவ்வாறான ஒருவர் திருமணப் பதிவை மேற்கொள்வதாக இருந்தால் இந்தியாவுக்கோ அல்லது வேறொருநாட்டுக்கோ அந்த மணப்பெண்ணை வரவழைத்து திருமணம் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இதன் மூலம் நமது நாட்டுப் பணமும் விரயமாகின்றது. எனவே, இது தொடர்பில் அக்கறைஎடுத்து, இந்தச் சட்டத்தில் ஆக்கபூர்வமான திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

2013ஆம் ஆண்டில் ஒரு சுற்றுநிருபம் வெளியானது. அந்தசுற்றுநிருபத்தில் திருமணப் பதிவுக்கு "இலங்கை முஸ்லிமாக இருக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியுரிமை பெற்ற இலங்கை முஸ்லிம் ஒருவர், இங்கு வந்து திருமணம் செய்ய முடியாத நிலையை கருத்தில் கொண்டு இந்தத் தடை நீக்கப்பட வேண்டும். ஏனைய மதத்தினருக்கு இவ்வாறு தடைகள் இல்லை.

எனவே, முஸ்லிம்களுக்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தத் தடையை நீக்குமாறு வேண்டுவதுடன், இலங்கையில் வாழும் பெண்களின் அடிப்படை உரிமையும் இதில் மீறப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்" என்றார்.

# தமிழ் கட்சிகளின் தலைவர்களை சந்தித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங் 23-08-2023 தினம் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரை யாழில் சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

யாழ்ப்பாணம் - கொக்குவிலில் அமைந்துள்ள தனியார் விடுதியில் குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த துணைத்தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

இதன் போது தற்போது உள்ள நிலைமைகள் தொடர்பில் அமெரிக்க தூதுவர் கேட்டு அறிந்து கொண்டதுடன் தமிழ் மக்களின் அன்றாடம் தற்பொழுது எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பிலும் அரசியல் தலைவர்களினால் அமெரிக்க தூதுவரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.





பௌத்தமயமாக்கல், காணி அபகரிப்பு, அரசாங்கத்தின் பிழையான வரிக்கொள்கை மூலம் வைத்தியர்கள், புத்தியீவிகள் பெரும்பாலானவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் எனவும் அமெரிக்க தூதுவருக்கு, தமிழ் தலைவர் களினால் இதன் போது சொல்லப்பட்டது.

# இலங்கைக்கான 'ஒரு புதிய ஒழுங்கமைப்பை' நோக்கி பேரினவாதச் சக்திகள்



**வி.தேவராஜ்**
**மூத்த ஊடகவியலாளர்**

- **தே**ர்தல் நடைபெறும் சாத்தியம் இல்லை.
- ரணில் தலைமையில் 13 காணாமல் போகலாம்.? இல்லையேல் நீர்த்துப்போகும்.

தமிழ் மக்கள் குறித்து பிரச்சனைகள் கிளைவிட்டு பரந்து விரிந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு பிரச்சனை நோக்கி தமிழ் மக்களின் கவனம் குவியும்போது இன்னொரு பிரச்சனை துளிர் விடுகின்றது. மொத்தத்தில் பிரச்சனைகளே வாழ்க்கையாகப் போய்விட்டது.

- இராவணனின் பூர்வீகத்தை தேடி சர்வதேச விசாரணை!

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி பெற்றோரும் உறவுகளும் வருடக்கணக்கில் போராடிக் கொண்டிருக்கின்றனர். சர்வதேச நீதியை நோக்கிய இந்தப் பயணத்திற்கு இலங்கை அரசிடம் இருந்தோ அல்லது சர்வதேச சமூகத்திடம் இருந்தோ காத்திரமான பதில் இல்லை. ஆனால் சர்வதேச விசாரணைக்கு இடமில்லை எனக் கூறும் இலங்கை அரசு உள்ளக விசாரணையையும் இருட்டுக்குள் வைத்து ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. தமிழர் விவகாரத்தில் சர்வதேச விசாரணையை மறுதளித்து நிற்கும் இலங்கையில் இராவணனின் பூர்வீகத்தை தேடி சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென தென்னிலங்கையில் கோரிக்கை விடுக்கப்படுவது விசித்திரமாக உள்ளது. உள் நாட்டில் தமிழர்களுக்கு ஒரு நீதி சிங்கள மக்களுக்கு ஒரு நீதியென ஆட்சி நடக்கும் இலங்கையில் அதே நீதியை சர்வதேச சமூகத்திடமும் தென்னிலங்கை கோரி நிற்கின்றது. அதாவது சர்வதேச சமூகம் தென்னிலங்கை வகுத்துள்ள நீதிக்குள் நின்று தமக்கு நீதி வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றது.

- இனக் கலவரத்துக்கான காய் நகர்த்தல்

அதேவேளயில் நாட்டில் இன்னொரு இனக் கலவரத்தை உருவாக்குவதற்கான காய்கள் வேகமாக நகர்த்தப்படுகின்றன. பௌத்த பிக்குகளில் ஒரு பகுதியினரும் பேரினவாதச் சக்திகளும் நடந்து கொள்ளும்விதம் அவர்களது அடாவடித்தனங்கள் வரம்பு மீறிய செயற்பாடுகள் மாத்திரமல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாம் சளைத்தவர்கள் அல்ல என களத்தில் சண்டித்தனம் காட்டுகின்றனர்.

இவைகளை "இலங்கை அரசாங்கம்" கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

"2022 ஆம் ஆண்டில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் அரசாங்கத்தை நடத்துகிறார்கள் என்று அன்று பிபிசி அறிக்கை ஒன்று இன்றைய அரசாங்கம் குறித்து 2022 ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி பிபிசி இவ்வாறு தெரிவித்துள்ளது.

இவ்வாறான ஒரு அரசாங்கத்திற்கு நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் யோசிப்பதற்கு நேரம் இருக்காது.தமது "அரசியல் இருப்பு" குறித்த கவலையே ரணில் - ராஜபக்ஷ அணியினருக்கு உள்ளதெனலாம்.

- ரணில் விகரமசிங்க அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவானவர் அல்ல

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பொருத்து 13ஐ நிறைவேற்றுவதுகுறித்து பேசுகின்றார். ஆனால் 13ஐ நிறைவேற்றாமல் இருப்பதற்கான அனைத்து வழிகளையும் திறந்துவிட்டுள்ளார்.

ஆரசியல் அமைப்பில் உள்ள 13வது சரத்தை நிறைவேற்ற கட்சிகளின் கருத்தக்களும் ஆணையும் அவசியம் இல்லை. ஆனால் 13ஐ கட்சிகளின் முன் தூக்கிப் போட்டு அறிக்கை கோருவது 13ஐ நிறைவேற்றுவதற்கல்ல. ரணில் விகரமசிங்க அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவானவர் அல்ல. ஒன்றில் 13ஐ நீர்த்துப் போகச் செய்வது அல்லது இல்லாமல் ஆக்குவது. இதனை நோக்காகக் கொண்டதாகவே அவரது 13 அதிகாரப்பரவலாக்கல் காய் நகர்த்தல் உள்ளது.

மறுபுறம் இனப் பதற்றத்தை அதிகரிக்கச் செய்து ஒரு இனக் கலவரத்துக்கான காய் நகர்த்தலும் நடைபெறுகின்றது. மக்களை பிணங்களாக்கி அதன்மேல் ஏறி தேர்தல் வெற்றிகளை அடைவது என்பது இலங்கையின் ஆளும் வர்க்கத்திற்கு கை வந்த கலையாகும். ஆனால் அரகலயாக்களின் வருகையுடன் இந்த வழி முறை சாத்தியமா என்பதுகுறித்தும் ஆளும் தரப்பு சிந்திக்காமல் இருக்காது.

தற்போதைய நிலையில் தேர்தல் வெற்றியை நோக்கியதாக இந்த காய் நகர்த்தல் இடம்பெறலாம்.

இரண்டாவது சட்டம் ஒழுங்கை காரணம் காட்டியும் பொருளாதார மீட்சிக்கான பயணத்திற்கெனவும் காலவரையின்றி தேர்தல்களை ஒத்திப்போடும் சூட்சமும் இதன் பின்னணியில் இருக்கலாம். ஏனெனில் ரணில் - ராஜபக்ஷ அணியினருக்க எந்த ஒரு தேர்தலையும் எதிர் நோக்கும் மன நிலையோ அல்லது கள நிலவரமோ இல்லை என்பது தெரிந்த விடயமே.

அந்தவகையில் 2024 தேர்தல் ஆண்டென தொடர்ச்சியாகக் கூறப்படுகின்றபோதும் தேர்தல் அற்ற ஆண்டாக தொடர்வதற்கான சாத்தியங்கள் இருப்பதையும் நிராகரிப்பதற்கில்லை.

இந்த ஒரு பின்னணியில் பேரினவாதச் சக்திகள் பௌத்த துறவிகள் சிங்கள புத்திஜீவிகளில் ஒரு பகுதியினர் கொள்கை வகுப்பாளர்கள் சிங்கள அரசியல்வாதிகள் இலங்கையின் வடக்குக் கிழக்கில் பௌத்த மயமாக்களையும் தமிழர் குடிப் பரம்பலைச் சிதைக்கும்வகையிலான குடியேற்றங்களையும் விரைவுபடுத்த களத்தில் இறங்கியுள்ளனர். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் ரணில் - ராஜபக்ஷ அணியினரின் ஆசீர்வாதத்துடனேயே நடைபெறுகின்றன என்பது பரம இரகசியமல்ல.

- New Sri Lankan Order

கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக ஆட்சியில் அமர்ந்தவுடன் இலங்கைக்கான ஒரு புதிய ஒழுங்கமைப்பை New Sri Lankan Order - உருவாக்கிக் கொள்வதே இந்தச் சக்திகளின் நோக்கமும் இலக்குமாகவும் இருந்தது.

புயங்கரவாதத்துக்கெதிராக பதிய ஒழுங்கமைப்பை அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ பிரகடனப்படுத்தினார். அதேபாணியில் இலங்கையின் அரச தரப்பு, சிங்கள புத்திஜீவிகளில் ஒரு பகுதியினர் மற்றும் இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் இணைந்து "இலங்கைக்கென புதிய ஒழுங்கமைப்பை" உத்தியோகப்பற்றற்ற முறையில் பிரகடனப்படுத்திச் செயற்படுத்தி வருகின்றனர்.

New Sri Lankan Order என்ற பதிய இலங்கைக்கான இந்த ஒழுங்கமைப்பை தென்னிலங்கை குறிப்பிடுகின்ற "பயங்கரவாதத்துக்கு" எதிர்வினை செயற்பாடாக செயற்படுத்த முனைகின்றது. இந்த ஒழுங்கமைப்பு ஒரே தேசம் ஒரே மக்கள் என்ற கருத்தியலுக்குள் வார்த்தெடுக்கப்பட்டதாகும்.

முள்ளி வாய்க்கால் போருடன் இலங்கையின் வரலாற்றை புதிதாக எழுதுவதற்கு சிங்கள புத்திஜீவிகளில் ஒரு பகுதியினரும், இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களும், சிங்களத் தலைமைகளும் புறப்பட்டுள்ளனர்.

தற்போது குருந்தூர் மலை விவகாரம் குறித்து 60 கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டள்ளது.

இவர்களைப் பொறுத்தவரை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதிக்குப் பின் வரலாறு பெரும் மாற்றத்துக்கு உள்ளாகி உள்ளதென்ற கருத்தியலைக் கொண்டவர்களாக உள்ளனர்.

இந்தக் கருத்தியலில் இலங்கையின் இன விவகாரம் குறித்துக் கூட தென்னிலங்கையின் நிலைப்பாட்டில் சடுதியான ஒரு மாற்றத்தை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. கிளிநொச்சியின் வீழ்ச்சியுடன் மேற்கூறிய மனப்போக்கு தென்னிலங்கையின் அனைத்துமட்டங்களிலும் மிக ஆழமாக எதிரொலித்தது.

இந்தச் சக்திகளைப் பொருத்தவரை தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள், தமிழ் மக்களின் இருப்பு, சுய கௌரவம், சுய நிர்ணய உரிமை, தாயகக் கோட்பாடு என அனைத்துமே முள்ளிவாய்க்கால் போருடன் புதைக்கப்பட்டுவிட்டன என்பதையே பேரினவாதத் தரப்புகள் தமது நிலைப்பாடாகக் கொண்டுள்ளன.

இதனை முன்னிறுத்தியே 2009க்குப் பிறகு இலங்கை பெரும் மாற்றத்தக்கள்ளாகியதாகக் கருதுகின்றனர்.

ஆதாவது மக்வம்சத்தின் போக்கில் இலங்கையின் எதிர்கால வரலாற்றை புதிய வடிவில் எழுத, செயற்படுத்த முற்படுகின்றனர்.

இந்த நாடு பல மொழி, பல இன, பல கலாசார விழுமியங்களைக் கொண்டுள்ளது என்பதற்கு அப்பால் ஒற்றையாட்சியின் பௌத்த மேலான்மைக்குள்ளேயே இலங்கையின் ஒவ்வொரு குடிமகனதும் தலைவிதியையும் நிர்ணயிக்க இந்தச் சக்திகள் புறப்பட்டுள்ளன.

"ஒரே நாடு ஒரே மக்கள்" கருத்தியலுக்குள் இவை அனைத்தும் மிகக் கச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

மொத்தத்தில் இலங்கையர் என்ற பொதுவான அடையாளத்திற்குள் சிறுபான்மை இனங்கள் சமரசமாகி மூழ்கிப் போகும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதே ஆக New Sri Lankan Order வருகின்றது.

ஆனால் அரகலயாக்களின் எழுச்சியால் கோத்தாபய ராஜபக்ஷ அரசியலில் இருந்து வெளியேற்றப்படவே New Sri Lankan Order என்ற பதிய இலங்கைக்கான இந்த ஒழுங்கமைப்புக்கான பயணம் சற்று பின்னடைவைக் கண்டது. ஆனால் அது தற்போது மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டு வேகம் பெற்றுள்ளது.

இலங்கையின் இன்றைய நிலையில் தமது கருத்தியலை செயற்படுத்துவதற்கான கால நேரம் கூடிவந்துள்ளதாக பேரினவாதச் சக்திகள் கணக்கிட்டுள்ளன.

இந்த புதிய ஒழுங்கமைப்பிற்குள் காணாமல் போகும் அபாயத்தை ஒட்டு மொத்த சிறுபான்மை இன மக்களும் எதிர் நோக்கியுள்ளனர்.

பேரினவாதம் தமிழர் தாயகத்தை விழுங்கிவிட முனைப்புடன் செயற்படும் இவ் வேளையில் துரதிஸ்டவசமாக தமிழ் மக்களை வழி நடத்த தலைமைகள் இல்லை.. தமிழ்த் தலைமைகள் சிதறிக் கிடக்கின்றன.

Email : vathevaraj@gmail.com
25th August 2023

## கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல்

### இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா அழைப்பு

----------------------------------------

காலம்: 03-09-2023 (ஞாயிற்றுக்கிழமை)
இடம்: மில்லீக்கன் பூங்கா - பிரிவு B
நேரம்: காலை 10.00 மணி

கனடா வாழ் இணுவில் மக்கள் அனைவரையும் இவ்வொன்று கூடல் நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பிற்குமாறு அன்போடு அழைக்கிறோம். சகல வயதினர்க்குமான விளையாட்டுப் போட்டிகள் வழமைபோல களிப்பூட்டும் வகையிலே இடம்பெறவுள்ளது.

தொடர்புகளுக்கு: சாந்தி சர்வானந்தா: (647) 200-2177
மு. கிருபாகரன்: (416) 430-0422
ப. கஜஜெயன்: (416) 732-5898

இலங்கை செய்திகள்
Sri Lanka News

ப. கஜிந்தன்

# வடமாகாணத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி ஜே. சுங் மகிழ்ச்சி




தற்போது வடமாகாணத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகள் தொடர்பில் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், வடக்கின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி. ஜூலி ஜே. சுங் கூறுகிறார்.


வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் (23.08.2023) அன்று ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநரைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து தூதுவருக்கு விளக்கமளித்த ஆளுநர், மீள்குடியேற்றம், விவசாயம், மீன்பிடி மற்றும் சுற்றுலா உள்ளிட்ட மக்களின் பொதுவான உட்கட்டமைப்புகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதாக கூறினார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், மக்களின் நல்வாழ்வுக்காக கடந்த சில வருடங்களாக அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் குறித்த உண்மைகளை சுட்டிக்காட்டிய ஆளுநர், இலங்கையின் அன்றாட செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திகளில் திருப்தியடைவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மக்களுக்காக திருமதி. பி.எஸ். எம்.சார்ள்ஸ் இரண்டாவது தடவையாக வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமை குறித்தும் அவருக்கு நல்வாழ்த்துக்களை அமெரிக்க தூதுவர் கூறியிருந்தார்.

# இளைஞர், யுவதிகளுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் அறிவிப்பு!


Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் 23.09.2023 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில், ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப்படிவங்களை பெற்று "கல்வி அமைச்சு, வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறும், மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

# நெடுந்தீவு குமுதினி படகு மீண்டும் சேவையில்!

நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கமான குமுதினிப் படகு வியாழக்கிழமை (24-08-2023) முதல் மீண்டும் பயணிகள் சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

குமுதினிப் படகு பழுதடைந்த நிலையில் திருத்த வேலைகளின் பின்னர் குறிகாட்டுவானில் தரித்துவிடப்பட்டிருந்தது. குமுதினிப் படகு குறிகாட்டுவானில் இருந்து பயணிகளை ஏற்றியவாறு நெடுந்தீவு சென்று தரித்ததுடன் காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குமுதினிப் படகு குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்டு அங்கிருந்து மீண்டும் நெடுந்தீவுக்கு பயணித்தது.

யாழ்ப்பாணம், குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு பயணிகளுக்கான கடல்வழிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட குமுதினி படகு அடிக்கடி செயலிழந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குமுதினி படகின் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குமுதினி படகு 1968 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் - நெடுந்தீவிற்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் பழங்கள் மற்றும் இளநீர் வியாபாரத்தில் வீழ்ச்சி!





நாட்டில் அதிக வெப்ப நிலையுடனான வறட்சியான காலநிலை நிலவும் நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பழ வியாபாரிகள், இளநீர் வியாபாரிகள் விலை உயர்வின் காரணமாக வியாபாரம் இடம் பெறவில்லை என கவலை வெளியிட்டுள்ளார்கள்.

குறிப்பாக வெப்ப காலத்தில் பொதுமக்கள் பழம் வாங்க வருவார்கள். தற்பொழுது பழங்களின் விலையினை கேட்டு விட்டு சென்று விடுகின்றார்கள்.

ஏனென்றால் விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக எமது வியாபாரம் மற்றும் முழுதாக பாதிக்கப்பட்டுள்ளது என கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாண குடா நாட்டில் வெப்ப காலத்தில் பழங்கள், இளநீர் வியாபாரம் அதிகளவில் இடம்பெறும். எனினும் தற்போது பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பழங்களின் விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பழம், இளநீர் வியாபாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

# புதுக்குடியிருப்பில் அதிகரிக்கும் சிறுவர் துஸ்பிரயோகமும் போதைவஸ்து பாவனையும் – கட்டுப்படுத்த கோரி கவனயீர்ப்பும் மனு கையளிப்பும்





புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்த கோரி கவனயீர்ப்பு பேரணியும், மனு கையளிப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இயங்கிவரும் காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையம் மற்றும் சிறுவர்களின் போசாக்கு அபிவித்தி நிலையம் ஏற்பாட்டில் இந்த கவனீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரசேத சபை முன்பாக இருந்து ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணி ஒன்றும், புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியில் இருந்து ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணி ஒன்றும் புதுக்குடியிருப்பு சந்தியினை சென்றடைந்து அங்கிருந்து கவனயீர்ப்பினை வெளிப்படுத்தியவாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலம் சென்றடைந்து.

அங்கு சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு கோரிக்கைகள் அடங்கிய மனு வாசிக்கப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 500 வரையான சிறுவர்கள் பெரியவர்கள் வரை கலந்து கொண்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகரிக்கும் சிறுவர் துஸ்பிரயோகத்தினை கட்டுப்படுத்த கோரி புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந் அவர்களிடம் மனு கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவில், "புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உடலியல் மற்றும் உணர்வு ரீதியான சிறுவர் துஸ்பிரயோகம் அண்மைக்காலமாக அதிகளவில் அதிகரித்து வருவதை நாம் அவதானித்துவருகின்றோம். போதைப்பொருள் பாவனையாலும், விற்பனையாலும், குடும்பங்களில் பிரச்சினைகள் தலைதூக்குவதாலும் சிறுவர்கள் மகிழ்வாக வாழக்கூடிய சூழலை இழந்து, உள ரீதியான நெருக்கடியை சந்திக்கின்றார்கள். இதனால் இவர்களின் கல்வி பெறுபேறுகள் குறைவாக காணப்படுவதால் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த பிரதேசத்தில் பாலியல் ரீதியான துஸ்பிரயோகமும் போதைப்பொருள் உற்பத்தியும் அதிகளவில் காணப்படுவதும், இதனால் ஏற்பட்ட விளைவுகள் பாராதுரமானதென்பதும் வெளிப்படையாக தெரிந்த போதிலும் உரியவர்கள் அநேக சந்தர்பங்களில் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் மேலும் துஸ்பிரயோகங்கள் அதிகரித்து நம் சிறுவர்கள் மிகவும் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்படுவதோடு நம்பிக்கைக்குரியவர்களாலேயே பாலியல் தீண்டல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்."

உள்ளிட்ட கோரிக்கை அடங்கிய மனு மாவட்ட அரசாங்க அதிபருக்கான மனுவினை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இடம்பெறும் சிறுவர் துஸ்பிரயோகம் பேதைவஸ்து பாவனைகளை உடனடியாக கட்டுப்படுத்த கோரியான மனுக்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும், முல்லைத்தீவு சிரேஸ்ட காவல்துறை அத்தியட்சகருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

SULLIVAN AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
2023

POWERED BY iConnect Mortgages

# FREE ADMISSION!



AUGUST
26 & 27

# TAMIL FEST 2023



## MARKHAM RD
### (BETWEEN MCNICOLL AVE. & PASSMORE AVE.)

**Largest Tamil Street Festival outside of Asia**

FOR MORE INFORMATION PLEASE CONTACT
THE CANADIAN TAMIL CONGRESS AT
416-240-0078
INFO@CANADIANTAMILCONGRESS.CA
WWW.TAMILFEST.CA

TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
Formula Honda

POWERED BY
iConnect Mortgages

HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien

SUPPORTED BY
Canada
TORONTO

MARKETING PARTNER
PRINT FAST

ZONE SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
NAVA WILSON LLP
PRADON
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING

MEDIA SPONSORS
ATN
CASI
metroland

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 09 - 09 - 1933



அரன் அடியில்: 16 - 09 - 2021

திதி: 27-08-2023

## அமரர்.
## திருமதி. டாக்டர் அன்னபூரணம் ஞானசம்பந்தர்

எமை ஈன்றெடுத்த எம் அன்புத் தாயே
உங்கள் இன்முகம் தான் எங்கேயம்மா
இவ்வுலகில் எமை விட்டுப் பிரிந்து
ஆண்டு இரண்டு ஆனதே அம்மா

பாசத்தை நமக்கு ஊட்டி வளர்த்த
பண்பான எம் அன்னையே
கண்ணின் இமையானீர் அன்று
எம் கண்ணீரின் கதையானீர் இன்று

எங்கள் பாச ஒளிவிளக்கே
ஓர் ஆண்டு மறைந்தாலும் உங்கள் முகம்
எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது அம்மா
தெய்வமே எமை விட்டு சென்றதெங்கே

ஏங்கித் தவிக்கின்றோம், ஏமாந்து போகின்றோம்
மீண்டும் ஓர் பிறப்புண்டேல்
உமக்கே பிள்ளைகளாய் பிறப்போம் அம்மா
வாரும் அம்மா ஒரு முறையேனும் எங்களிடம்....

அன்னையின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

*ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!*

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு: சந்திரகுமார் (மகன்) - 1(613) 266-0411
சுமதி (மகள்) - (416) 627-7202

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
15 - 01 - 1963

மண்ணின் மடியில்
15 - 08 - 2023



## அமரர். சின்னராசா சர்வேந்திரராஜா

யாழ்ப்பாணம் வசாவிளானைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திரு. சின்னராசா சர்வேந்திரராஜா அவர்கள் 15-08-2023 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னராசா, பாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், சபாரத்தினம், ராணியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தினியின் அன்பு கணவரும், பிரியங்காவின் பாசமிகு தந்தையும் இலங்கையில் வாழும் சிந்தாதேவி, சற்குணதேவி, சரோஜினிதேவி, செல்வேந்திரதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும். இலங்கையில் வாழும் கந்தசாமி, ஆனந்தராஜா, செல்வரட்ணம், சேதுராமன் ஆகியோரினதும், மற்றும் செந்தினி, செல்வகுமார்(ராசன்), சிவகுமார், சுகந்தினி(இலண்டன்), தர்சினி, துஷ்யந்தினி ஆகியோரினதும் அன்பு மைத்துனரும், பற்றிக், அனுஷா, ஜெயவாணி, மதிபாலராஜா (இலண்டன்), பரணீதரன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5 ல் அமைந்துள்ள St John's Dixie Cemetery & Crematorium ல் ஆகஸ்ட் 26ந் திகதி சனிக்கிழமை மாலை 5:00 - 9:00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, ஆகஸ்ட் 27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 - 12:00 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
1. செல்வகுமார் (ராசன் - கனடா -மைத்துனர்) -416 824 0580
2. ரமேஷ் (கனடா - மருமகன்) 647 456 7768
3. கந்தசாமி (இலங்கை - மைத்துனர்) +94 77 555 4886
4. சதீஸ் (பிரான்ஸ் - மருமகன்) - +336 2351 0795
5. சிவகுமார் (கனடா - மைத்துனர்) + 905 463 4872
6. மதி- (லண்டன் - சகலன்) - +447985 126716 - +447960 870971

# மரண அறிவித்தல்

தோற்றம்: 28-08-1939
மறைவு: 22-08-2023



## திருமதி. கோகிலாம்பாள் விவேகானந்தன்

(யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவியும் பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரியும்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இங்கிலாந்து, மில்ரன், ரொறன்ரோ-கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி. கோகிலாம்பாள் விவேகானந்தன் (கோகிலா) அவர்கள் 22-08-2023 அன்று கனடாவில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற பேரம்பலம் விவேகானந்தன் (ஆலோசகர் - அணு மின்நிலையம், New Brunswick - கனடா) அவர்களின் அன்பு மனைவியும்,

ஜீவன், உஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜஸ்ரினின் அன்பு மாமியாரும், ஈசன், கேடன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,

கலாநிதி மகாதேவா (கனடா), பத்மாவதி (கனடா) இராஜேந்திரா (இங்கிலாந்து) ஆகியோரின் சகோதரியும்,

காலஞ்சென்றவர்களான லில்லிமலர், நேசமலர், பரமேஸ்வரநாதன், சொர்ணகாந்திமலர், வித்தியானந்தன், தவமலர், சிவானந்தன், யோகரட்ணம், புஸ்பமலர் மற்றும் செல்வானந்தன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

***அன்னாரின் பூதவுடல் 27-08-2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4:00 மணி தொடக்கம் 9:00 மணிவரை Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் அன்னாரின் விருப்பத்திற்கு இணங்க, குடும்பத்தார் சகிதம் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: குமரகுரு: (416) 464-4609
விக்கி: (647) 886-7516
இராஜேந்திரா: + 44 208 551 5230


EASY FURNITURE
Summer
BLOWOUT SALE
LOWEST PRICE IN TOWN
READY TO DELIVER
STARTING FROM $59
Queen Diamond Firm Mattress $499 $299
Rest-O-Pedic Queen $399 $249
S/S BUNK Bed (Grey) $799 $399
Dreamopedic Single Mattress $249 $149
Velvet Rose Queen Mattress $399 $299
Back Support Queen Mattress $799 $549
Spine Comfort Queen Mattress $699 $499
5" Foam $79 $59
ANG L Sofa Grey& Brown $650 $399
4 Door Wardrobe $899 $599
2 Door Wardrobe With Glass Mirror $449 $349
2 Door Wardrobe $399 $249
Sami Madam
Price Starting from $149
We Can Make Special Order
CALL US TODAY
416-293-9204
3500 McNicoll Ave, Unit 5
Scarborough, ON M1V 5C7


EASY FURNITURE
WHOLESALE PRICE
REM L Sofa $699 $499
SAI L Sectional (with ottoman) $1299 $899
JANE Sectional (Bk-WH-RD) $1699 $1299
UG RED Sectional $1199 $899
MOREN Sectional Sofa $1249 $899
GRASSY 3 pcs Sofa $1199 $899
Easy Air Leather Corner Sofa $2499 $1999
Sky Power 3 pcs Recliner Sofa $2999 $2499
EF QUEEN Bedroom Only $999 $799
Single Bed $199 $149
5 pcs Dining Table $799 $499
6 pcs Bedroom $899 $599
5pcs Dining Table $799 $499
7 pcs Dining Table $799 $549
Coffee Table $149 $99
Bar Stool $99 $59
STARTING FROM $59
ORDER TODAY 416-293-9204
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1062

## ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவில் மட்டக்களப்பு

ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவில் ஆரம்பகாலத்திலிருந்த நிலையிலிருந்து பல்வேறு நிலையிலே வளர்ச்சியடைந்தது. ஆலயத்திலே பல மாற்றங்கள் காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப்பட்டது. ஊரவர்களின் ஆர்வத்தின் காரணமாகத் திருவிழாவின் முழுப்பொறுப்புக்களையும் கோவிலே எற்று நடத்துவதற்கான ஆயத்தங்கள் பல முன்னெடுக்கப்பட்டன. திருவிழாக்காலங்களிலே சுவாமி ஊர்வலம் வருவதற்குரிய வாகனங்கள் மற்றும் எழுந்தருளி மூர்த்திகளையும் சொந்தமாகச் செய்வதற்கு அனைவரும் முன்வந்தனர். இதன் முன்னோடியாகக் காளி மற்றும் வீரபத்திரர் எழுந்தருளி மூர்த்திகளும், குதிரை, எருது போன்ற வாகனங்களும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது. தற்காலத்திலும் இவ்வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் 1935 ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டுவரை ஆலயத்தின் பூசைவழிபாடுகளிலே தடையேற்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் முன்புபோல ஆலயம் சிறப்பாக இயங்கவேண்டுமென எண்ணிய ஊரவர்கள், பல்வேறு நிலையில் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆரம்பகாலத்தில் குறிப்பிட்ட ஒரு சிலர் வசமே ஆலய நிர்வாகம் காணப்பட்டுள்ளது. 1960 ஆம் ஆண்டின் பின்னர் பெத்தான்குடி, படையாண்டகுடி, காலிங்காகுடி, உலகிப்போடிகுடி, வேளாளர் ஆகிய ஐந்து குடிகளுக்கும் கோவில் உரிமை கொடுக்கப்பட்டது. இதன்பின்னர் நிர்வாகசபையிலும் மாற்றங்கள் ஏற்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கொருமுறை நிர்வாகசபை மாற்றியமைக்கப்பட்டது. இச்சூழ்நிலையில் 1965 ஆண்டிலிருந்து நிர்வாகசபையினர் ஆலயத்திலே பல மாற்றங்களை ஏற்படுத்தினர். இதன்பயனாக மடாலயமாக இருந்த ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவில், சிகரக் கோவிலாக மாற்றம் பெற்றது. இதனைத்தொடர்ந்து 1978 ஆம் ஆண்டு ஆவணிமாதம் காளி, வீரபத்திரர், வயிரவர் ஆகிய மூர்த்திகள் சிலாவிக்கிரகமாக அமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இவ்வாலயத்தின் பூசைநடைமுறைகளைச் சைவக்குருக்கள் பரம்பரையினரே நடத்திவருகின்றனர். இவ்வாலயத்திலே நித்தியபூசைகள் தினமும் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம் பத்துநாட்கள் நடைபெறும். புரட்டாதி பூரணைக்கு முன்னுள்ள பத்துநாள் திருவிழாக்களும் மிக விமரிசையாக இடம்பெறும். பூரணையிலன்று தீர்த்தோற்சவம் நிகழும். வருடாந்த மகோற்சவ தீர்த்ததினத்தன்று சுவாமி ஊர்வலமாக எழுந்தருளி, கோவிலிலிருந்து மூன்றுமைல் தொலைவிலுள்ள கடலிலே தீர்த்தமாடுவார்.

இவ்வாலயத்திலே சித்திரை வருடப்பிறப்பு, கந்தசஷ்டி, கார்த்திகைத் தீபத்திருவிழா, திருவெம்பாவை, முதலியனவும் விசேடமாகக் கொண்டாடப்படும். கார்த்திகை, திருவெம்பாவை முதலிய காலங்களிலும் இவ்வாலயத்திலே தீர்த்தோற்சவம் நிகழும். இக்காலத்திலே நிகழும் தீர்த்தோற்சவம் ஆலயத்திற்கு முன்புள்ள ஆற்றிலே நடந்தேறும். வீரபத்திரரை சிவபிரானது மூர்த்திபேதங்கள் என்றும், அவரது புத்திரர் என்றும் சாத்திர நூல்களிலே கூறப்பட்டுள்ளது. வீரபத்திரரை வணங்கி விரதமிருப்பதற்குரிய திருநாளாகச் செவ்வாய்கிழமை கருதப்படுகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலே அனுட்டிக்கப்படும் இவ்விரதத்தினை வீரபத்திரர் மங்கலவார விரதம் என்றழைப்பர். இவ்விரதத்தின்பயனாக மக்கள் தாம் விரும்பிய நலன்களைப் பெறமடியும் என்றும் உரைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவிலிலே எழுந்தருளியுள்ள அகோர வீரபத்திரசுவாமியின் தோற்றம், எட்டுக்கைகளையுடையதாகக் காணப்படுகின்றது. கால் அங்குல கனமும், ஒன்றரை அடி உயரமும், ஒரு அடி அகலமுமடையதாய் ஐம்பொன்னாற் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான தோற்றப்பாடு, வீரபத்திர வணக்கமுறையில் மிகவும் அரிதானதாகவே காணப்படுகின்றது. இவ்வாறான அகோரதோற்றத்துடனான வீரபத்திரர் உருவம் இலங்கையில் வேறெந்த ஆலயத்திலும் காணப்படவில்லை. மட்டக்களப்பிலும் இவ்வணக்கமுறை அருகியே காணப்படுகின்றது. காரைதீவு, களுவாஞ்சிக்குடி போன்ற சில பிரதேசங்களில் மட்டுமே வீரபத்திரருக்குரிய கோவில்கள் காணப்படுகின்றன. மனிதராகப் பிறந்தால் மட்டும்போதாது. மனிதன் மனிதனாக வாழ இறைவழிபாடும், ஆசார அனுட்டானங்களும் மக்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளன. புராதன காலந்தொட்டே ஆலயமும், கடவுள் வழிபாடும், சடங்குகளும், விரதங்களும் மக்கள் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. ஏறாவூர் வீரபத்திரசுவாமி மீது மக்கள் கொண்ட நம்பிக்கையும், அதன்வெளிப்பாடுகளும் இவ்வூரவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் பிரதிபலிக்கின்றது. வீரபத்திரரை வழிபடுவது சிவனை வழிபடுவதற்குச் சமமானது என்ற உயர்ந்த எண்ணத்தோடு இவ்வாலயத்தை இவ்வூர் மக்கள் போற்றி வருகின்றனர்.

**- வளரும்...**

## அராலி காச்சார ஒன்றியம் — கனடா

அராலி கலாச்சார ஒன்றியத்தின் வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும், பொதுக்கூட்டமும் எதிர்வரும் September 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு வழமைபோல் Sunnybrook Park இல் உட்புறம் Serina Gundy Park, Area 3 இல் (Leslie & Eglinton) நடைபெற உள்ளதால் சகல அங்கத்தினரையும், அராலி ஊர் மக்களையும், தலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**வெல்வரட்ண்: (647) 828-4614 | இரவிநேசன்: (647) 464-9508**
**உருத்திரன்: (647) 294-6863 | தனராஜா (ஐயா): (416) 726-8569**

## அனைவராலும் பாராட்டப்பெற்ற செல்வன் ஹரிகரன் தர்மசோதி, செல்வி ஹரிணி தர்மசோதி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம்



கனடா - கலையருவி நாட்டிய நிறுவன அதிபரும் குருவுமாகிய ஸ்ரீமதி ரேணுகா விக்னேஸ்வரன் அவர்களின் மாணவர்களும் திரு.திருமதி. தர்மசோதி அவர்களின் புத்திரச் செல்வங்களுமாகிய செல்வன் ஹரிகரன் தர்மசோதி, செல்வி ஹரிணி தர்மசோதி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 19-08-2023 சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ சீனக் கலாச்சார நிலையத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.



அன்றைய அரங்கேற்றத்தில் கலந்து சிறப்பித்த பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர் ஆகியோராலும் நடன இரசிகர்களாலும் மேற்படி சகோதரக் கலைஞர்களின் அரங்கேற்றம் பாராட்டப்பெற்றது என்றால் மிகையாகாது.

பக்கவாத்தியக் கலைஞர்களாக வாய்ப்பாட்டு - அருண் கோபிநாத், மிருதங்கம் - ரதிரூபன் பரஞ்சோதி, வயலின் - ஏ. ஜெயதேவன் ஆகியோர் மேடையை அலங்கரித்ததோடு மட்டுமல்லாது சகோதரக் கலைஞர்களின் நடன ஆற்றலை மேலும் மெருகூட்டும் வகையில் தங்கள் பக்கவாத்தியப் பங்களிப்பை மிகவும் நேர்த்தியாக வழங்கி அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டனர்.

இசைச் செல்வர்கள் சாய்ச்சரன் முரளிதரன் மற்றும் சியாம் கருணேஸ்வரன் ஆகியோர் அரங்கேற்ற நிகழ்ச்சிகளை சிறப்பாக தொகுத்து வழங்கி சபையோரினதும் பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர் ஆகியோரின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டனர்.

நடன உருப்படிகளை ஒரு சாதாரண பரதநாட்டிய ரசிகன் என்ற வகையில் ரசித்த போது அரங்கேற்றத்தின் நாயகர்களாக விளங்கிய செல்வன் ஹரிகரன் தர்மசோதி. ஹரிணி தர்மசோதி ஆகியோரின் ஆகியோரின் திறமைகள் சபையோர் அனைவருக்கும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் அமைந்தன என்றே கூறலாம்.

அவர்களின் குரு மேடையில் மிகுந்த கவனத்தோடும் மிக்க களிப்போடும் அமர்ந்திருந்து தனது பங்களிப்பை ஆற்றியதும் பத்து வருடங்களுக்கு மேலாக தமது மாணவர்களாக அவர்களை ஏற்று அன்று சபையோர் முன்பாக சமர்ப்பித்த அவரது அரங்கேற்றத்தின் நோக்கம் நன்கு நிறைவேறியது என்றும் இந்த சகோதரக் கலைஞர்கள் தமது குருவிற்கு மிகுந்த அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்துள்ளார்கள் என்றும் துணிந்து கூறலாம்.

செல்வன் ஹரிகரன் தர்மசோதி, செல்வி ஹரிணி தர்மசோதி ஆகியோர் தனியாகவும் இணையாகவும் சமர்ப்பித்த நடன உருப்படிகள் அனைத்துமே சபையோரையும் பரத நாட்டியத்தின் பாண்டித்தியம் பெற்ற அனைவராலும் நன்கு இரசிக்கப்பட்டும் பாராட்டப்பட்டும் கரகோசங்களைப் பரிசாகப் பெற்றன.

**- சத்தியன்**











# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை தோண்டுவதற்கான நிதியை வழங்க அனுமதி

- எமது யாழ்ப்பாணம் செய்தியாளர்

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை தோண்டுவதற்கான செலவை நீதி அமைச்சின் ஊடாக வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நீதி அமைச்சு காணாமல் போனவர்களிற்கான அலுவலகம் - ஓ.எம்.பி ஊடாக மாவட்டச் செயலகத்திற்கு நிதியை விடுவித்து அதற்கான செலவு முன்கொண்டு செல்லப்படவுள்ளது. இதனால் எதிர் வரும் ஆகஸ்ட் 31 ஆம் திகதிய வழக்கு நடவடிக்கையை தொடர்ந்து எதிர்வரும் செப்டம்பர் 4 ஆம் திகதி தோண்டும் பணி ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான செலவில் முதல் கட்டமாக 5 மில்லியன் ரூபா வரையில் வழங்க நீதி அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் குறித்த புதைகுழு விவகாரம் ஐ.நா மற்றும் சரவதேச செஞ்சிலுவைச் சங்கங்களின் கவனத்தையும் பெற்றிருப்பதனால் அரசும் இதற்கான பணியை விரைவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை தோண்டும் பணியின்போது நீதிமன்றத்துடன் சட்ட வைத்திய நிபுணரகள் மற்றும் தொல்லியல்த் திணைக்கள நிபுணர்களும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜுன் மாதம் கொக்குத்தொடுவாய்-கொக்கிளாய் பாதையில் நீர் வழங்கல் குழாய்களை அமைக்க நிலம் தோண்டப்பட்ட போது அங்கு மனித எச்சங்களும் உடைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் பெண்கள் உள்ளாடைப் பகுதிகள் இருந்தன. அதன் காரணமாக அங்கு பெண் போராளிகள் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் தோன்றியது.

இதையடுத்து அங்கு அகழ்வு பணிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், அது பல காரணங்களால் தொடர்ந்து தாமதமாகி வந்தது. கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, தமக்கான நிதி ஒதுக்கீடு அளிக்கப்படுவதாக அரசு தெரிவித்துள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# முல்லைத்தீவில் தமிழ் மீனவர்கள் மீது தொடரும் தாக்குதல்

- நடராசா லோகதயாளன்



இலங்கையில் தமிழ் மக்கள் மீதான கலாச்சார, சமூக பொருளாதார தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. குருந்தூர் மலையில் ஆதி சிவன் கோவிலில் தமிழ் மக்கள் வழிபாடு செய்ய தடங்கல்களை ஏற்படுத்துவது, தமிழ் மக்களின் வாழ்வாதார இடங்களை அரச படைகள் பிடித்து வைத்துள்ளன, மக்களின் அன்றாட பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்துவது என்று தொடர்ச்சியாக அரச தரப்பும், தொல்லியல் திணைக்களம் என்கிற போர்வையில் பௌத்த பிக்குமார்களும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதை காணக்கூடியதாக உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்கள் செய்து வரும் தொழிலிற்கும் தொடர்ச்சியக இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பில் தமிழ் மீனவர்களின் 4 படகுகள் திங்கள்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு நாசமாக்கப்பட்டுள்ளன.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்ற அப்பகுதியை சேர்ந்த மீனவர்களின் படகுகளே இவ்வாறு எரிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பும் தண்ணிமுறிப்பு குளப்பகுதியில் வைத்து இதேபோன்று படகுகள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு மீனவர்களின் படகுகள் தொடர்ச்சியாக சேதமாக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்படியான சம்பவங்களுக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குரிய இழப்பீட்டினை வழங்க வேண்டும் எனவும் மீனவர்களின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் தண்ணிமுறிப்புக் குளத்தில் அதனை அண்டிய பகுதியில் வழும் தமிழ் மற்றும் முஸ்லாம் மீனவர்கள் மட்டுமே தொழில் புரியும் நிலையில் ஆண்டுதோறும் அத்துமீறிய மீன்பிடியில ஈடுபடும் சிங்கள மீனவர்களினால் குழப்பம் ஏற்படுவதோடு அண்மையில் தாக்குதலில் ஈடுபட்ட சிங்கள மீனவர்ளை பிடித்து தமிழ் மற்றும் முஸ்லீம் மீனவர்கள் பொலிசாரிடம் ஒப்படைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

வெலிஓயா பகுதியிலிருந்து சிங்கள மீனவர்கள் அத்துமீறி சட்டவிரோதமான முறையில் முல்லைத்தீவு பகுதிக்கு வந்து மீன்படி தொழிலில் ஈடுபடுகின்றனர், இதை அரச தரப்பின் பார்வைக்கு எடுத்துச் சென்றாலும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்று பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்கள் கூறுகின்றனர்.

தொடர்ச்சியாக இப்படியாக தமது படகுகள் எரிக்கப்பட்டால், தாம் வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாமல் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாவதாக உள்ளூர் மீனவர்கள் குமுறுகின்றனர்.



# மன்னார் மாவட்டத்தில் மேலும் நிலங்கள் விடுவிக்கப்படுவதாக அறிவிப்பு

- நடராசா லோகதயாளன்

மன்னார் மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களின் பிடியில 26 ஆயிரத்து 627 ஏக்கர் மக்களின் நிலம் உள்ளபோதும் அதில் 5 ஆயிரத்து 459 ஏக்கரை விடுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 1985 ஆம் ஆண்டிற்கு முன்பு இருந்த காடுகளின் எல்லைக்கு அமைகாவே திணைக்களங்கள் உரிமை கோரும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பிற்கு ஏற்ப அவற்றை இனங்கண்டு பாதுகாப்பிற்கு மக்களிற்கு சொந்தமான எஞ்சிய நிலத்தை விடுவிப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து ஜனாதிபதி செயலகத்தினால் அமைக்கப்பட்ட விசேட குழுவற்கு மாவட்டச் செயலகங்கள் தமது பரிந்துரையை அனுப்ப விசேட குழு ஆய்வின் பின்னர் மாவட்டங்களில்தோறும் கூட்டம் நடாத்தி நில விடுவிப்பு தகவலை வழங்கி வருகின்றனர். இந்த வகையில் ஏற்கனவே வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட கூட்டங்கள் நிறைவடைந்த நிலையில் தற்போது மன்னார் மாவட்ட கலந்துரையாடலும் நிறைவுற்றுள்ளது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களின் பிடியில் இருக்கும் 26 ஆயிரத்து 627 ஏக்கர் மக்களின் நிலங்களையும் மேச்சல் தரவைக்காக 4 ஆயிரத்து 393 ஏக்கர் நிலமும் கோரப்பட்டது.

இவ்வாறு கோரப்பட்ட நிலங்களில் இருந்து 5 ஆயிரத்து 459 ஏக்கர் நிலம் மட்டும் விடுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டதோடு மேச்சல் தரை நிலம் தொடர்பில் தேசிய குழுவிற்கு சமர்ப்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஞ்சியவை தொடர்பில் மீண்டும் கூடி ஆராய்வதாக தெரிவிக்கப்பட்டபோதும் இக்கலந்துரையாடலில் பங்குகொண்ட நாடாளுமன்ற உறுப்பினரகளான காதர் மஸ்தான் மற்றும் ரிசாட் பதியுதான் போன்றோர் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவில் சில இடங்களேனும் விடுவிக்கப்பட்டபோதும் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் 11 இடங்கள் கோரப்பட்டபோதும் ஒரேயொரு இடம் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

ஐ நா மனித உரிமைகள் ஆணையத்திற்கு இலங்கை அரசு தெரிவித்துள்ள பதிலில், 92 வீத நிலங்கள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுவிட்டன என்று கூறினாலும், இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் படையினர் மற்றும் இதர அரச திணைக்களங்கள் பிடியிலேயே உள்ளன என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பிலான வரைபடங்கள் மற்றும் ஆவணங்களை அவர் இலங்கைக்கான கனேடிய தூதர் எரிக் வால்ஷ் உட்பட பலரிடம் கையளித்துள்ளார்.

# வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலை பாரதம் தொடும் போது, நாம் தரைக்கு கீழே தொல்பொருளை தேடுகிறோம்

மனோ கணேசன் எம்பி

சந்திரனில் தடம் பதித்த நான்காம் நாடாகவும், நிலவின் தென்முனையில் விண்கலத்தை இறக்கிய முதலாவது நாடாகவும் பாரதம் சரித்திரம் படைத்துள்ளது. இந்திய மக்களுக்கும், அரசுக்கும், குறிப்பாக இந்திய இஸ்ரோ நிறுவனத்தின் "மூன்-ப்ராஜெக்ட்" வேலைத்திட்ட பணிப்பாளர் வீரமுத்துவேல் தலைமையிலான விஞ்ஞான தொழிட்நுட்ப அணிக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இந்த சாதனையை எண்ணி, தென்னாசிய நாட்டவராகவும், இந்திய வம்சாவளி தமிழராகவும் பெருமையடைகிறேன். ஆனால், வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலை பாரதம் தொடும் போது, நாம் தரைக்கு கீழே தொல்பொருளை தேடுகிறோம் என்ற உண்மையை உணர்ந்து வருந்துகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது, பாரதம் தந்த 13A மாகாணசபையும் இன்று குருந்தூர் மலையில் ஏறி விழுந்து நிற்கிறது. அது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்று இழுபறி படுகிறது. சரித்திரத்தில் இருந்து பாடம் படிப்பதற்கு பதிலாக, எல்லா பிரச்சினைகளுக்கும் சரித்திரத்துக்குள் நுழைந்து பதில் தேடும் தோற்றுப்போன நாட்டவராக நாம் இன்று இருக்கிறோம்.

தொல்பொருள் அகழாய்வு பிரதேசம், மதங்களுக்கும், மத நிகழ்வுகளுக்கும் இடம் தராத பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக இருக்க வேண்டும். அது தொடர்பான எல்லா வரலாறு உண்மைகளையும் ஆவணப்படுத்தி ஆர்வலர்களுக்கு எடுத்து கூறும் அரச நிறுவனமாக இருக்க வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனையறிவு எமக்கு இல்லை. ஆகவே, ஒருநாள், மாலைத்தீவும் இப்படி "மூன்-ரொக்கட்" அனுப்பும் வரை நாம் இப்படி தொல்பொருளாராட்சியில் தேடி மோதிக்கொண்டே இருப்போம்.

# வவுனியா இரட்டைக் கொலை: சிறையில் தொலைபேசி பயன்படுத்தியது தெரியவந்துள்ளது

- ந. லோகதயாளன்

வவுனியாவையே உலுக்கிய இரட்டைக் கொலை சம்பவத்தின் பிரதான சந்தேநபர் சிறைச்சாலையிலும் சர்வ சாதாரணமாக தொலைபேசி பாவித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சிறையில் இருந்த சந்தேகநபர் தினமும் ஓர் பெண்ணுடன் 90 நிமிடங்கள் வரையில் உரையாடியுள்ளதோடு மேலும் பலருடன் 35 தடவைகள் உரையாடியுள்ளதாகவும் தற்போது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினரால் நீதிமன்றிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதான சந்தேக நபர் உட்பட 6 பேர் கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்து அவ்வீட்டில் இருந்தவர்கள் மீது வாள் வீசி தாக்கியதுடன், வீட்டிற்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்தனர்.

சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர்களான கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் மரணமடைந்திருந்தனர். இச்சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சம்பவத்தின், பிரதான சந்தேக நபர்கள் உட்பட 5 பேர் வவுனியா சிறைச்சாலையிலும், ஒருவர் அநுராதபுரம் சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் வவுனியா சிறைச்சாலையில் இருக்கும் பிரதான சந்தேக நபரே இவ்வாறு தொலைபேசி பாவித்துள்ளமை தெரியவந்துள்ளது.

தற்போது சந்தேக நபர் பயன்படுத்திய கைத்தொலைபேசி மீட்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் இந்த விடயத்தை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து வியாழக்கிழமை (24) அதிகாலை மேற்கொண்ட திடீர் சோதனையில் பிரதான சந்தேக நபரிடம் இருந்து கைத்தொலைபேசி மீட்கப்பட்டுள்ளது.

அந்த தொலைபேசி ஊடாக 3,292 வெளிச் செல்லும் அழைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன், அதில் 3 அழைப்புக்கள் குறித்த நபரின் மனைவிக்கும், பிறிதொரு பெண்ணுக்கும் ஒன்றரை மணித்தியாலப்படி 35 தடவைகள் கதைத்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றத்திடம் அனுமதி பெற்று குற்றப் புலனாய்வு திணைக்கள கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இலங்கை சிறைச்சாலைகளில் கைதிகள் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக நிலவினாலும், அது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் ஏதுமில்லை என்ற விமர்சனங்கள் தொடருகின்றன.

# காரைநகரில் பொலிசாரை தாக்கிய கனேடியப் பிரஜைகள் மீது வழக்குப் பதிவு

- எமது யாழ்ப்பாணம் செய்தியாளர்

காரைநகர் கடற்கரையில் நீராடிய 10 கனே-டியப் பிரஜைகள் பொலிசாரைத் தாக்கிய குற்றச் சாட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் கசூரினாபீச் கடற்கரையில் கடந்த திங்கள்கிழமை (21) நீராடிய கனேடியக் குடியுரிமை பெற்ற 10 பேர் நீராடியுள்ளனர். இதில் சிலர் மது போதையிலும் காணப்பட்டுள்ளனர்.

இதன்போது ஒருவரின் கை விரலில் இருந்த தங்க மோதிரம் கடலில் தவறி வீழ்ந்துள்ளது. அதனால் கடற்கரையில் பணியில் இருந்த பொல-சாரிடம் அதனை மீட்டுத் தருமாறு கோரியுள்ளனர்.

அதனை மீட்கும் அளவிற்கு தமக்கு பணி அனுபவம் கிடையாது என பொலிசார் கூறியதனால் ஏறபட்ட தர்க்கத்தின் போது பொலிசாரை தாக்க முறபட்டதுடன் ஒருவர் பொலிசாரை கடித்துள்ளார். இதனால் அங்கே பணியில் இருந்த பொலிசார், கனேடியர்கள் 10 பேரையும் கைது செய்து அரச சேவைக்கு இடையூறு செய்த குற்றச் சாட்டின் கீழ் மல்லாகம் நீதிமன்றில் முறபடுத்தியுள்ளனர்.

இதனபோது கைது செய்யப்பட்ட 10 கனேடியர்களில் இருந்த 4 பெண்களும் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு 6 ஆண்களும் எதிர் வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடிகாயத்திற்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சையின் பின் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து இலங்கைக்கு சுற்றுலா மற்றும் இதர வேலைகளிற்காக வருபவர்கள் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுகின்றனர் என்றும், வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பதால் தங்கள் மீது உள்ளூரில் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று தவறான புரிதலில் உள்ளனர் என்று பொலிசார் கூறுகின்றனர்.

# வடக்கில் படையினருக்காக மேலும் பல்லாயிரம் ஏக்கர் நிலம் கோரப்படுகின்றது, ஆனால் காணி இல்லாதோருக்கும் ஏதுமில்லை

- நடராசா லோகதயாளன்



வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போதும் படையினரின் பாவனைக்கு அரச மற்றும் தனியார் நிலங்களை சுவீகரித்து தருமாறு பாதுகாப்பு அமைச்சு கோருவது தகவல் அறியும் சட்டம் மூலமான பதிலில் உறுதியாகியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் படையினரின் பாவனைக்கென 6 ஆயிரம் ஏக்கர் நிலங்களை சுவீகரித்து தமக்குத் தருமாறு மாவட்டச் செயலகங்களை பாதுகாப்பு அமைச்சு கோரி நிற்கின்றது என மாவட்டச் செயலகங்கள் உறுதி செய்கின்றன.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் படையினர் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் முகாம் அமைந்து நிலைகொண்டுள்ளனர். இவ்வாறு படையினர் நிலைகொண்டுள்ள நிலங்களில் தனியாருக்குச் சொந்தமான காணிகள், அரச காணிகள், மற்றும் திணைக்களங்களிற்குச் சொநதமானகாணிகள் எற்பவற்றுடன் பாதுகாப்பு அமைச்சிற்கு உரித்தாக்கப்பட்ட நிலங்களும் உள்ளது.

இதிலே தனியாருக்குச் சொந்தமான காணிகள் மற்றும் அரச காணிகளை படையினரின் நிரந்தரப் பயன்பாட்டிற்கு வழங்குவதானால் சட்டப்படி சுவீகரிக்கும் பணியை பிரதேச செயலகம் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நில உரிமையாளரின் ஒப்புதலுடன் மேற்கொள்ள வேண்டும். எனவே அந்த நிலங்களை அளவீடு செய்ய நில அளவைத் திணைக்களத்திடமும் நிலங்களை சுவீகரிப்பதற்கு பிரதேச செயலாளரிடமும் இதன் விபரங்களை அளிக்குமாறு படையினர் எழுத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த விபரங்களிற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது 3 ஆயிரத்து 214 ஏக்கர் நிலம் படையினரிடம் உள்ளது. இதேநேரம் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் காணிகளை சுவீகரித்து தருமாறு படையினர் மாவட்டச் செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்களை எழுத்தில் கோரியுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணத்தில் படையினர் வசமுள்ள 3214 ஏக்கரில் பல இடங்களள் கோரப்படுவதோடு கிளிநொச்சியில் 220 ஏக்கரும் முல்லைத்தீவில் 1,508 ஏக்கர் நிலைத்தையும் சுவீகரித்து பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்குமாறு படையினர் கோருகின்றனர். இதேபோன்று மன்னாரில் 1060 ஏக்கர் நிலத்தையும் வவுனியாவில் 301 ஏக்கர் நிலத்தை கோருவதாக அந்த அந்த மாவட்டச் செயலகங்களிற்கு விண்ணப்பித்த தகவல் அறியும் சட்டத்திற்கான பதிலில் உறுதிப்படுத்தப்பட்டு பதில் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கில் மட்டும் 6 ஆயிரத்து 286 ஏக்கர் தனியார் காணிகள் படையினர் வசம் உண்டு என மாவட்டச் செயலகங்கள் உறுதி செய்கின்றன.

படையினர் கோரும் இந்த நிலங்களிற்கு அப்பால் படையினரின் நிரந்தர முகாம் அமைப்பதற்காக ஏற்கனவே ஆயிரக்கணக்கான ஏக்கர் அளவிற்கு பல அரச நிலங்கள் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் பாதுகாப்பு அமைச்சிற்கு என்றே நிலங்கள் பாரதீனப்படுத்து விட்டமையும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பாரதீனப்படுத்தப்பட்ட நிலங்கள் தொடர்பில் மாகாண காணி ஆணையாளர் செயலகத்திற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்தபோது வடக்கில் 32 அரச காணிகள் மக்களிற்கோ அல்லது மக்கள் பிரதிநிதிகளிற்கோ தெரியாது மாகாண ஆளுநரால் படையினருக்கு என நிரந்தரமாக பாரதீனப்படுத்தப்பட்டு விட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரச காணிகளை அந்த பிரதேசத்தின் பொதுப் பயன்பாட்டிற்காக ஒப்படைக்க வேண்டும் என மாவட்டச் செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நீண்ட காலமாக கோரிக்கை விடப்பட்டு வருகிறது. இருந்தபோதும் அரச காணிகள் இரகசியமான முறையில் சில அரச அதிகரிகளின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு அமைச்சிற்கு வெஸ்ரிங் செய்யப்பட்டு பிரதேச செயலாளர்களிடம் இருந்த உரிமை பாதுகாப்பு அமைச்சிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு வடக்கு மாகாணத்தில் உரிமை மாற்றம் செய்யப்பட்ட விபரம் தொடர்பில் வடக்கு மாகாண காணி ஆணையாளர் தகவல் அறியும் சட்டத்தின் மூலமாக வழங்கிய பதிலில் 2020, 2021, 2022 ஆகிய 3 ஆண்டுகால எல்லைக்குள் மட்டும் 32 அரச காணிகள் பாதுகாப்பு அமைச்சிற்கு ஆளுநரால் கையளிக்கப்பட்ட விபரம் வழங்கப்பட்டுள்ளதனால் அவை படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள இராணுவம், கடற்படை, விமானப் படையினர் ஆகியோர் தற்போது நிலைகொண்டுள்ள 32 இடங்கள் அவர்களிற்கு என்றே நிரந்தரமாக வெஸ்ரிங் செய்யப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கில் 22 ஹெக்டேயர் அல்லது 54 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த 32 இடங்களில் ஒரேயொரு இடம் விமானப் படையிரின் பயன்பாட்டிற்காக முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவில் வழங்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது. அதேபோன்று 3 இடங்கள் இராணுவத்தினருக்கும் எஞ்சிய 28 இடங்களும் கடற்படையினரின் பயன்பாட்டிற்காகவும் வழங்கப்பட்டுள்ளமையும் உறுதி செய்கின்றது.

இந்த 3 ஆண்டுகளிலும் 2020 ஆம் ஆண்டு 16 முகாம்களிற்காக 9 ஹெக்டேயரும், 2021 இல் 6 முகாமிற்காக 6.5 ஹெக்டேயர் நிலங்களும் வழங்கியுள்ள அதேநேரம் 2022 ஆம் ஆண்டில் 10 முகாம்களிற்காக 6 ஹெக்டேயர் நிலமும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களில், முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் பதவிக் காலத்தில் 12 முகாம்களிற்குரிய நிலங்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த 12 நிலங்களும் வழங்கப்பட்டுள்ள போதும் வடக்கு மாகாணத்தில் மட்டும் இன்றும் 21 ஆயிரம் குடும்பங்கள் குடியிருப்பதற்கே காணி இன்றி இருப்பதாக மாவட்டச் செயலகங்களின் தரவுகள் உறுதி செயகின்றன.

இவற்றிற்கும் மேலாக வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், விவசாயத் திணைக்களங்களின் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களில் படையில் நிலைகொண்டுள்ளபோதும் வடக்கில் தற்போது படையினர் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மட்டுமே நிலை கொண்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்திருப்பது தமக்கு மிகுந்த கவலையளிப்பதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறுகிறார்.

இவை தொடர்பில் எதிர்வரும் சந்திப்புக்-களின்போது கண்டிப்பாக விவாதிக்கும் நிலைமை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

படையினர் தனியார், அரச காணிகளை சுவீகரித்து தருமாறு கோருவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கருத்து தெரிவிக்கையில்:

“படையினர் சுவீகரித்து தருமாறு கோரிய தனியார் நிலங்கள மட்டுமே இவையாகும். ஏனைய அரச திணைக்கள நிலங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் பல ஆயிரம் ஏக்கரை படையினர் கோருகின்றனர். படையினர் இந்த தனியார் நிலங்களையேனும் உடனடியாக மக்களிடம் வழங்க வேண்டும் என நாம் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்தாலும் அது அரசிற்கு செவிடன் காதில் ஊதிய சங்கின் ஒலியாகவே உள்ளது. இதனாலேயே தினமும் தனியார் காணியை அபகரக்க முயல்வதும் நாம் ஓடிச் சென்று தடுப்பதுமாகவே உள்ளது. தினமும அதிகாலையில் இதற்காகவே பத்திரிகைகளை புரட்ட வேண்டியுள்ளது. எம்மைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் மக்களிற்கு ஏதும் உருப்படியாக செய்து விடக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு இடம்பெறுவதோடு அந்த நிலத்தின் மக்களை பந்தாடும் விதமாககவே அனைத்து அரசுகளும் செயல்படுகின்றன. அதற்கு இன்றைய ரணில் அரசும் விதி விலக்கல்ல” என்றார்.

# Buddhist Monk-Led Sinhala Mobs Threaten to Burn Alive Religious Leaders

- by Siva Parameswaran



A multi-religious team along with cattle farmers were issued death threat and detained for over three hours by Sinhala mobs in Batticaloa district on Tuesday (22) Tamil National People's Front leader and Jaffna district MP Gajendrakumar Ponnambalam has tweeted.

The team was visiting the Tamil village of Mylathamadu in Batticaloa district, to look into the alleged illegal encroachments by Sinhala people from the adjoining district of Polonnaruwa.

"A mob of 150 men armed with swords surrounded the multi-religious team. A Priest has been assaulted and the rest held as a hostage for over 3 hours" he tweeted.

The incident happened at the Mylathamadu bridge army point.

In his tweet, he said although he had informed the secretary to the President, the top cop of the nation the Inspector General did not respond to his calls.

"The Secretary to the President informed me that he has informed the army commanded and the Minister for Public Safety to look into the matter," his tweet says.

Apart from being assaulted and threatened with dangerous weapons, the Sinhala mobs also took away the keys of the two vehicles in which the multi-religious team travelled there.

However, the keys to the vehicles were returned back later after recording the statements of three members of the clergy who were part of the team.

In a series of tweets on the incident, he said "The OIC of the Karadiyanaru Police along with two officers went to the site and talked to the mob. No signs of the mob dispersing".

The team part of the Batticaloa multi-religious forum comprised two Rev. Fathers, one Hindu Priest, and a Muslim Moulavi. Two journalists were also part of the delegation.

They went there on an invitation from the cattle farmers to discuss the issues faced by them said Rev. Fr. Jegathas who was part of the team.

"When we were returning a bhikku along with those Sinhalese people who were forcefully and illegally resettled there blocked our vehicles. The bhikku forcefully not only took away the keys from us but also threatened us saying we would be burnt inside the vehicles. He also spoke in abusive words that we are acting at the behest of the diaspora taking money from them."

He further said the bhikku recorded a video standing in front of them stating the team had come there to create trouble for them with the money from abroad to create trouble in Sri Lanka and stopped them from leaving the place.

"Subsequently, the local Sinhala villagers to gathered around and forced journalists to delete all the pictures and recordings, and forced us to write and sign on a white paper that we won't inform or speak to anyone about the incident and detained us and intimidated for over three hours. The Karadiyanaru police came after we were detained. Once they arrived the Buddhist monk told them, we are agents of the MP Shanakkiyan and we are there to gather information for him".

Rev. Fr. Jegathas added the atrocities of the monk were of the highest order whose intimidation was petrifying.

"The Hindu priest was held by his tuft and about to be assaulted when someone intervened and stopped it. We were almost kept as hostages. The police instead of handling the issue properly were acting according to what was told by the mob. The cameras of the journalists were seized and all recordings were deleted".

The Mylathamadu-Mathavanai area situated on the left bank of the Mahaweli has vast grazing lands where 100 acres were allotted to the Tamil villagers to take their cattle to graze. However, illegal colonization and forced occupation by Sinhala people from nearby has been going on for years-a fact which was admitted in the court of appeal by the Attorney General's office on the 7th of March 2022.

A writ petition was filed by Tamil National Alliance (TNA) MP's Shanakkiyan Rajaputhiran and Govindan Karunakaram after the Mahaweli development authority decided to hand over the 100 acres of land earmarked for grazing cattle to private parties for maize cultivation. Another TNA MP and senior attorney M.A.Sumantharn had argued in this case that illegal resettlement and forced colonization are happening in the allocated grazing lands. The Additional Solicitor General submitted that action was being taken to evict those who were resettled illegally.



Cattle farmers in the area say, their only source of livelihood is through selling dairy products, milk in particular, and with the forced takeover of the grazing lands allocated to them, their livelihood has been jeopardised.

Selvakumar Nilanthan a freelance journalist who went along with the team says media oppression is continuing unabated and he is so scared to venture out for coverage.

"I am terribly traumatized. I was told straight away if the videos or photos taken by me is released then I would be killed. I was shocked when the Sinhala thugs held the Hindu priest by his tuft. It was very humiliating and he was a direct assault on his culture and traditions. This has affected me mentally very much. When I was told the consequences would be serious, then it's clearly something is very seriously wrong there".

Locals say the Buddhist monk and the mob who attacked the team are from the nearby Amparai district and such threats are happening regularly.

Cattle farmers say the economy of Batticaloa district depends on the dairy industry. Seenitambi Thiyagaraja, President of the Mylathamadu-Mathavanai Cattle farmers association says close to 2000 cattle farmers live in the area and they are dependent on the 100-acre land granted by the government for grazing their cattle.



"The economy of the district depends on cattle farming. Sinhala people hold on to 10-15 acres of land and starve the cattle and threaten us. Mahaweli Development Authority remains silent as the grasslands and the forest areas where the cattle graze is set on fire. The Wildlife authorities say they won't permit us to have a piece of iron and threaten to arrest us if so. But the Sinhala people are allowed to come with weapons and attack us and none are arrested. Many courts including the Batticaloa and Valaichenai have permitted cattle rearing here. So where do we go and what do we do if we can't take our cattle for grazing in the lands allotted by the government?".

TNPF and the TNA has vowed to take the issue of the multi-religious team held captive and intimidated including death threats would be raised at all platforms including the Parliament.



# புதிய உலக ஒழுங்கில் ஈழத்தமிழர்களின் அரசியல் அணுகுமுறை

**- மருத்துவர். சி. யமுனானந்தா**

ஈரானின் வளர்ச்சியும் சீனாவின் வளர்ச்சியும் இலங்கையில் பாரிய செல்வாக்கினை எதிர்வரும் காலங்களில் செலுத்தும். இந் நிலையில் இலங்கையில் இனங்களிற்கிடையிலான முரண்பாடுகளும் மதங்களிற்கிடையிலான முரண்பாடுகளும் முன்னைய காலங்களை விட மிகவும் வேகமாக அதிகரிக்கும். இதனால் தமிழர்கள் அமைதியற்ற சூழலிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தமும் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய சூழலும் அதிகரிக்கும்.

கொரோணாப் பெருந்தொற்றும் உக்கிரெயின் ரஸ்சியா மோதலும் உலகில் பாரிய பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் உலகின் பல நாடுகளில் அரசியல் ஸ்திரத் தன்மை குலைந்துள்ளது. இதற்கு இலங்கையும் விதி விலக்கல்ல.

தற்போதைய பொருளாதார நெருக்கடி சமூகத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் தமது அன்றாட உணவுக்கு உழைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர். சமூகத்தில் செல்வந்தர்களைத் தவிர ஏனையவர்களுக்கு தமது வருமானம், தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய பூரணமாக அமையாதுள்ளது. இதனால் உணவைத் தவிர ஏனைய தேவைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை பலருக்கு ஏற்பட்டுள்ளது. வறுமைக்கு மணம் உண்டு; குணம் உண்டு; நிறம் உண்டு.

குறிப்பாக ஆடைகள் சவர்க்காரம் போன்ற செலவுகள் மட்டுப்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அழுக்கடைந்த ஆடைகள் பாவித்தல், துர்நாற்றம் வீசும் நிலையில் பொது இடங்களிற்கு வருதல் சமூக நிலையில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் இங்கு இருந்த நிலைக்கோ அல்லது இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன் பங்களாதேசத்தில் இருந்த நிலைக்கோ இட்டுச் சென்றுள்ளது. இதனையே வறுமைக்கு மணம் உண்டு, நிறம் உண்டு என்பது. அடுத்ததாக வறுமையின் குணம், அடிமைத்தனமானதாக அமையும். யாரிடமும் கையேந்தும் நிலை, அகதியாக வேற்று நாடுகளிற்கு செல்லும் மனநிலை என்பன வறுமையின் குணங்களாகும்.

நாம் எமது சமூகத்தின் வறுமையினைப் போக்க பல்வேறு நுண்ணிய அபிவிருத்தியினை மேற்கொள்ள வேண்டும். பல்வேறு தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும்.

அதே வேளையில் உக்கிரெயின் ரஸ்சியா போரில் மனித குலத்திற்கு எதிராக ஆயுதங்களின் பிரயோகம் அதிகரித்துள்ளது. அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளால் உக்கிரெயினுக்கு வழங்கப்பட்ட அதி நவீன தொழில்நுட்ப ஆயுதங்களில் ரஸ்சியாவால் கைப்பற்றப்பட்டு மீள்தொழில்நுட்ப பொறியியல் மூலம் உருவாக்குவதற்காக ரஸ்சியாவின் நட்பு நாடான ஈரானுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. இதனை ஈரானிய விஞ்ஞானிகள் வெற்றிகரமாக பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இதனால் மத்திய கிழக்கில் ஈரான் அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இராணுவ பலத்துடன் பெற்றோலிய வளத்துடனும் வல்லரசாக ஊருவாகும் நிலை ஏற்பட்டுவிட்டது.

ஈரானின் வளர்ச்சியும் சீனாவின் வளர்ச்சியும் இலங்கையில் பாரிய செல்வாக்கினை எதிர்வரும் காலங்களில் செலுத்தும். இந் நிலையில் இலங்கையில் இனங்களிற்கிடையிலான முரண்பாடுகளும் மதங்களிற்கிடையிலான முரண்பாடுகளும் முன்னைய காலங்களை விட மிகவும் வேகமாக அதிகரிக்கும். இதனால் தமிழர்கள் அமைதியற்ற சூழலிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தமும் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய சூழலும் அதிகரிக்கும்.

எனவே தமிழ் அரசியல்வாதிகளும் புத்தி ஜீவிகளும் இலங்கையில் தமிழர்கள் நிம்மதியாக வாழுவதற்கு மிகவும் பொருத்தமான இந்திய சார்பு அரசியல் நிலைப்பாட்டினை எடுத்தல் காலத்தின் தேவையாகும். புதிய உலக ஒழுங்கில் தமிழர்களின் இருப்பிற்கான போராட்டம் பாரிய விட்டுக்கொடுப்புடனேயே நிகழ வேண்டும். இன்று உக்கிரெயின் அழியும் நிலையில் நாம் மனித நேயத்தைப் பற்றியோ சமஸ்டி பற்றியோ பேசினால் அதனை கேட்பதற்கு உலகில் யாரும் இல்லை என்பதனையும் புரிந்து கொள்ளல் அவசியமாகும். தற்போது ஈழத் தமிழர்களை பாதுகாக்கும் அஸ்திரம் 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் மட்டுமே ஆகும். அதன் மூலம் நாம் தற்போதைய பொருளாதார அரசியல் இராணுவ இடர்களை எதிர்கொள்ளல் அவசியம். அன்றேல் பாரிய சமூக கால இடைவெளி எமது சமூகத்திற்கு தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர் தேசங்களிலும் ஏற்படும்.

# தமிழ் மொழி (கும்மி)

உலகின் முதன்மொழி ஓங்கு தமிழே!
உயர்ந்த தாயாய் உயர்ந்தவளே!
வலம்வரும் பூமியில் மான்புறு ஓசையாய்
வீச்சாய் மிளிர்கிற மாதே!
வள்ளுவன் தந்த வான்புகழ் குறளை
வாழ்நாள் முழுவதும் ஓதிடவே!
பள்ளிகள் தோறும் படிக்கக் கொடுத்தே!
பாடலாய்ப் பாடிக் காட்டிடுவோம்.

அவ்வையார் அருளிய ஆத்தி சூடியை
ஆர்வமாய்க் கற்றுத் தெளிவோமே!
அவ்வியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவென்று
ஆரம்ப வயதிலே சொல்லிடுவோம்.
தேவாரம் திருமுறை தெளிவாய்க் கற்றுமே!
தினமும் அதனைப் பாடிடுவோம்
ஆவாரம் பூப்போன்ற அழகு தமிழை
ஆனந்த மாகவே கற்றிடுவோம்.

தேனினும் இனிய செந்தமிழ் மொழியை
தேசம் எங்கும் ஒலித்திடவே!
வானிலும் வலம்வர வழிவகை செய்துமே!
வாகை சூடிட வைத்திடுவோம்.
புலம்பெயர் நாட்டில் பரவியே வாழும்
பழம்பெரும் தமிழர் நாமெலாம்
நலமுடன் தமிழை வாழ வைக்கவே!
நம்பிள்ளை நம்மொழி கற்கட்டுமே!

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453


றொறன்ரோ
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

தமிழ், சமய, பண்ணிசை
வகுப்புக்கள் 10.09.2023 ஆரம்பம்

எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த 18 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது. தரமான ஆசிரியர்களைக் கொண்டு கல்விகற்பிப்பதுடன், ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி, திருவெம்பாவை, சிவராத்திரி, வருடாந்த மஹோற்சவம் போன்றதினங்களில் தேவார திருமுறைகளைப் பண்ணோடு படித்தல், புராணக் கதைகளை நாடகவடிவில் நடித்தல், வாரம்தோறும் ஆலயத்தில் நடைபெறும் பஜனை வழிபாட்டில் கலந்துகொள்ள ஊக்குவிப்பது போன்றவை இக்கல்லூரியின் சிறப்பம்சமாகும்.

புதிய மாணவர்களுக்கான பதிவு www.varasiththi.com இணையத்தளத்தில் விண்ணப்பிக்கலாம். நேரடியான பதிவு 26.08.2023 சனிக்கிழமை இந்துக்கல்லூரியில் காலை 10:00 மணிமுதல் 1:00 மணிவரை நடைபெறும்.

தமிழ், சமய, பண்ணிசை வகுப்புக்கள்
ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 முதல் 4:45 வரை

இந்துக்கல்லூரியில் ஏற்கனவே கல்வி கற்றுவரும் மாணவர்கள் மற்றும் 4 வயது (Junior Kindergarten) முதல் 8 வயது (2 ம் வகுப்பு) வரையிலான புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

Apply now at www.varasiththi.com

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU COLLEGE
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416.291.8500 www.varasiththi.com




ஆரபி படைப்பகம் ஆதரவில்

தமிழ்நாடு "இசைக் கவி" ரமணன் வழங்கும்
இசையும் உரையும் கலந்த

# 'பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி'



சொற்பொழிவு

இடம்:

கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபம்
733 Birchmount Rd., Scarborough, ON M1K 1R5

காலம்:

09-09-2023 சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு



மேலதிக விபரங்களுக்கு:

(647) 762-9512 அல்லது (647) 891-7725

ஆகிய இலக்கங்களை அழைக்கவும்





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு கிழக்கில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஒன்றிணைத்து எதிர் வரும் 30 ஆம் திகதி மன்னாரில் மாபெரும் போராட்டம்

## அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-மனுவல் உதயச்சந்திரா

- மன்னார் நிருபர் (23-08-2023)

வடக்கு கிழக்கில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஒன்றிணைத்து எதிர்வரும் 30 ஆம் திகதி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் புதன்கிழமை (23) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கோரி எதிர்வரும் புதன்கிழமை (30) காலை மன்னாரில் மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மன்னாரில் முன்னெடுக்க உள்ளோம்.

இந்த ஆர்ப்பாட்டமானது மன்னார் "சதொச" மனித புதைகுழியிலிருந்து ஆரம்பித்து பவனியாக மன்னார் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தை சென்றடையும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி 14 வருடங்களாக நீதிக்காக போராடும் தாய்மார்கள் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ் தேசியத்தில் பணிபுரியும் தமிழ் தேசியத்தை நேசிக்கும் அனைவரும் எங்களுடன் கைகோர்க்க வேண்டும். ஐந்து வயது முதல் 70 வயது வரை உள்ளவர்கள் அனைத்து தரப்பினரும் எங்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.




மேலும், காணாமல் போன உறவுகளின் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் எமது பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ், நஷ்ட ஈடு வழங்க அரசாங்கம் முயல்கிறது.

ஆனால் எமக்கு நீதி வேண்டும். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கேட்கின்றோம். அதனால் தான் இதுவரை இலங்கை அரசை நம்பவில்லை. இனியும் நம்பப் போவதில்லை.

இவ்வாறானதொரு சம்பவம் இலங்கையில் நடை பெறவில்லை என்பதை உலகுக்குக் காட்டவே இந்த அரசாங்கம் உலகத் தரப்பினரின் மனதைக் கவரும் வகையில் சலுகைகளை கொடுக்கிறது.

அதேபோன்று ஓ.எம்.பி மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு களை கொண்டு வந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளில் தாய்மார்களின் போராட்டத்தை மழுங்கடிக்க செய்ய நினைக்கிறது.

எது எப்படி இருந்தாலும் எங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

எனவே பல்கலைக்கழக மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என அனைவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு எமது உறவுகளுக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும் என்று மனுவல் உதயச்சந்திரா மேலும் தெரிவித்தார்.

# நல்லூர் மூத்த விநாயகர் ஆலய பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிசேகம்

நல்லூர் மூத்த விநாயகர் ஆலய பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிசேகம் இன்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து விநாயக பெருமான் வீதி வலம் வந்தார்.









அதனை தொடர்ந்து நாட்டியாஞ்சலி நிகழ்வு இடம்பெற்று, பிரதான கும்பங்கள் வீதி வலம் வந்து பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேக பெருவிழா இடம்பெற்றது.

இவ்கும்பாபிஷேக பெருவிழாவில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்தின் மஹோட்சவ அன்னபூரணி திருவிழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது



(23-08-2023)

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீச்சரத்திற்கு அடுத்து பெரிய ஆலயமாக காணப்படும் நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் ஆலய மஹோற்சவத் திருவிழாவின் 6 நாள் அன்னபூரணி திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.





இதன் போது ஆலயத்தைச் சுற்றி பக்தர்களால் பொங்கல் பொங்கி அம்பிகைக்கான நேர்த்திக் கடன்கள் செய்யப்பட்டது.

இந்தத் திருவிழாவின் சிறப்பம்சமாக திருச்சி தேவா எனப்படும் நானாட்டான் பிரதேசத்தின் சங்கீத வித்துவானாகவும் இசைப் பேராசிரியராகவும் இருக்கும் மாசிலாமணி தேவபாலன் அவர்களின் இசைக் கச்சேரியினைத் தொடர்ந்து ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் ஆலய நிர்வாகத்தினரால் பொன்னாடை போற்ற சங்கீதப் பேராசிரியர் அவர்கள் மதிப்பளிக்க பட்டார்.

இந்த மதிப்பளிப்பினை நானாட்டான் பிரதேசத்தின் பக்திக் கலைஞராக உள்ள திரு. கந்தசாமி அவர்களால் மதிப்பளிக்க பட்டார். இந்த நிகழ்வின் அம்பிகையின் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# புத்தளம், சிலாபம் வலய பாடசாலைகளில் திறன்பலகைகளினூடு கற்றல் செயற்பாடுகள் முன்னெடுப்பு


வடமேல் மாகாணத்திலுள்ள புத்தளம் மற்றும் சிலாபம் கல்வி வலயங்களில் முதல் கட்டமாக 14 பாடசாலைகளில் திறன் பலகைகள் பொருத்தப்பட்ட திறன் வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

திறன் பலகைகளை வழங்கி திறன் வகுப்பறைகளை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகளை IMHO-USA மற்றும் Ratnam Foundation-UK மேற்கொண்டது மட்டுமன்றி அவ்வப் பாடசாலை ஆசிரியர்களுக்கு மூன்று நாட்கள் கொண்ட பயிற்சிகளையும் திறமையான வளவாளர்களைக் கொண்டு வழங்கியிருந்தது.

இதற்கு மேலதிகமாக வகுப்பறை செயற்பாடுகளை what's up குழுமத்தினூடு அறிந்து கொள்வதிலுள்ள நாட்டங்களும் ஆசிரியர்களுக்கான ஓர் ஊக்குவிப்பாக அமையப்பெற்றுள்ளமை சிறப்பான அம்சமாக நோக்கப்படுகின்றது.

திறன்வகுப்பறைகளை திறந்து வைக்கும் ஆரம்ப வைபவங்களில்







புத்தளம் கல்வி வலயத்தின் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கான பணிப்பாளர் திரு.கமலேந்திரன் அவர்களும் சிலாபம் கல்வி வலயத்தின் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கான பணிப்பாளர் திருமதி. ஹனித்தா கமலேந்திரன் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. அருணாகரன் அவர்களும் கலந்து சிறப்பித்தமை இத்திட்டத்திற்கு வலு சேர்த்துள்ளது. இவர்களுடன் இதன் இணைப்பாளரான, நாயக்கர்சேனை தமிழ் வித்தியாலய அதிபர் திரு. இராமநாதன் அவர்களும் இணைந்து ருந்தார்கள்.

இதற்கு அடுத்த கட்டமாக மேலும் 6 பாடசாலைகள் பரிந்துரை செய்யப்பட்டு திறன் வகுப்பறைகளை திறந்து வைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவையாவும் IMHO-USA அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளரும் ஓய்வுநிலை வலயக் கல்விப்பணிப்பாளருமாகிய திரு. கிருஷ்ணகுமார் அவர்களினால் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 15)

*(Continued from last week)*

An appeal to the Privy Council, the apex body under the Soulbury Constitution, is easily said than done. It involves money, time and effort. The AES leadership has already spent huge amounts fighting the case in the Colombo High Court and in the Supreme Court from 1962. This despite the fact our lawyers appeared pro-bono.

To retain English lawyers to argue the case in the Privy Council, we needed sterling pounds to pay their fees. Therefore, we decided to launch a campaign to collect funds from our members as well as supporters. The AES membership, numbering about 3,000, rose to the occasion by contributing liberally. We went and met our members working in Ministries and Department. I recollect on such occasion when Kodeeswaran and myself went to the Department of Treasury, one of our members bought a whole book containing 20 tickets and gave us Rs.200 then and there. This was a extremely large amount those days. Travel by third class between Colombo and Jaffna by train costed only Rs.13.50!

It was decided to retain the services of the then famous civil lawyer Sir Dingle Foot, QC with C. Ranganathan, Q.C., M. P. Solomon, S. C. Crossette-Thambiah and M. I. Hatnavi Haniffa, for the plaintiff- appellant. C. Ranganathan, QC, appeared for Kodeeswaran both in the Colombo High Court and the Supreme Court. E. F. N. Graliaen, Q.C., with R. K. Handoo and H. L. de Silva, for the defendant-respondent. After prolonged delay judgment was delivered by Lord Diplock on December II, 1969. The Privy Council in favour of Kodeeswaran vs Attorney General.

In its judgment the Privy Council directed the Supreme Court to address the constitutional question of whether the Official Language Act of 1956 which made Sinhala the official language was in violation of Section 29 of the Soulbury constitution, which prohibits discrimination. Dr Colvin R de Silva, a staunch Trotskyite and Minister for Constitutional Affaires in Mrs Srimavo Bandaraike's cabinet (1972), changed the constitution so that there will be "no more Kodeeswaran type challenges".

This case is famous because it highlighted a conflict between the Roman-Dutch Law and English Law in Sri Lanka. As already told Kodeeswaran sued the Government for arrears in pay, and the Sri Lankan Supreme Court dismissed the action, saying that under English law a civil servant had no right to remuneration that could be enforced against the State. Kodeeswaran appealed to the Privy Council, claiming that Roman-Dutch law governed the issue, and that under R-D Law, an action against the State for arrears in pay was allowed. The Privy Council said that neither English Law nor R-D Law allowed for the type of action Kodeeswaran was bringing, but that the Sri Lankan courts, over the years, had recognized such an action. In other words, what the Privy Council said was that the Sri Lankan courts had developed, through interpretation, a body of laws, and that this was what constituted the "common law" of Sri Lanka. The Privy Council therefore held in favour of Kodeeswaran.

The issue with regard to language policy was a secondary issue in this case, and the Privy Council emphatically refused to comment on it. Here's what the Privy Council actually said: "There are more important constitutional issues to be decided upon which neither the Supreme Court nor their Lordships have heard argument. As already indicated, their Lordships would think it inappropriate to enter into any of these matters without the considered opinion of the Supreme Court of Ceylon thereon." (Kodeeswaran v. Attorney General (1969) 72 NLR 337, pp. 347)

For purpose of record, I give below the text of the judgment. Judgment of the Privy Council in Kodeeswaran vs Attorney General, Ceylon New Law Reports Volume 72, p 337

PRIVY COUNCIL
1969 Present: Lord Hodson, Viscount Dilhorne, Lord Donovan, Lord Pearson, Lord Diplock
C. KODEESWARAN, Appellant, and THE ATTORNEY-GENERAL, Respondent
PRIVY COUNCIL APPEAL NO. 38 OF 1968
S. C. 408/64-D.C. Colombo, 1026/Z.

Constitutional law-Public servant--Contract of service with the Crown-Action for recovery of arrears of salary due-



Maintainability-Roman-Dutch law- Effect of Proclamation of 23rd September 1799-Applicability of English law.

A civil servant in Ceylon is entitled to sue the Crown for arrears of salary which, have accrued due, by the terms of his appointment, in respect of services which he has rendered during the currency of his employment. In such a case the fact that his appointment as a Crown servant is terminable at will, unless it is expressly otherwise provided by legislation, is not relevant.

" Although the Roman-Dutch law as applied in Ceylon under the Government of the United Provinces is the starting point of the ' common law ' of Ceylon, it is not the finishing point. Like the common law of England, the common law of Ceylon has not remained static since 1799. In course of time, it has been the subject of progressive development by a cursus curia (Samed v. Segutamby, 25 N. L. R. 481) as the Courts of Ceylon have applied its basic principles to the solution of legal problems posed by the changing conditions of society in Ceylon. In their Lordships' view if long established judicial authority for a proposition of law not inconsistent with the British constitutional concept of the exercise of sovereign authority by the Crown can be found in the decisions of the Ceylon courts themselves there is no need to go back to see whether any precedent can be found for it in the jurisprudence of the Courts of the United Provinces or the doctrine of the Roman-Dutch jurists of the eighteenth century. Still less is it necessary to find a precedent for it in English common law."

APPEAL from a judgment of the Supreme Court reported in (1967) 70 N. L. R. 121.
Sir Dingle Foot, Q. C., with C. Ranganathan, Q.C., M. P. Solomon, S. C. Crossette-Thambiah and M. I. Hamavi Haniffa, for the plaintiff-appellant.
E.F.N. Gratiaen, Q.C., with RK. Handoo and H.L. de Silva, for the defendant-respondent.
December 11, 1969. [Delivered by LORD DIPLOCK]-

The appellant has been for many years a civil servant in Ceylon. He is one still. He brings this action against the Attorney-General as representing the Government of Ceylon. Its subject matter is the salary which he has received as a civil servant. He says that he was entitled to be paid more under the terms of his appointment and claims the balance which he alleges he has earned but which the Government of Ceylon has refused to pay him. He is a Tamil and the balance of salary that he claims is due to him is an increment which was denied to him because he did not pass a test in the Sinhala language. The requirement that he should pass such a test as a condition precedent to his being paid the increment was imposed by a Treasury Circular expressed to be issued in implementation of the Official Language Act, 1956. In the action he claims that the Official Language Act is unconstitutional and void and that the circular which was issued to implement the Act and which purported to vary the existing terms of his appointment is also void and ineffective to disentitle him to the increment to which he would have been entitled under those terms.
(To be continued)



125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N.Pராஜசேகர் தற்போது கனடா வில் வசிக்கிறார்.

மற்ற நாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



Contact - (416) 904-6278
21rajbhavan@gmail.com

16 Treeline Court Markham ONT
L3S 3T8 CANADA

1 வது காண்டம் : அண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய். தந்தை. மனைவி. சுமங்கைகள். சகோதா. சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்

2 வது காண்டம் : பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது

3 வது காண்டம் : சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது

4 வது காண்டம் : தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது

5 வது காண்டம் : சுமங்கைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது

6 வது காண்டம் : வாழ்க்கையில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது

7 வது காண்டம் : திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது

8 வது காண்டம் : ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது

9 வது காண்டம் : தகப்பனார். செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது

10 வது காண்டம் : தொழில். வியாபாரம். உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது

11 வது காண்டம் : இலாபம் எங்கெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது

12 வது காண்டம் : செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது

**பரிகார காண்டங்கள்**

13 வது சாந்தி காண்டம் : முற்பிறவியில் பிறந்த இடம். செய்த கன்மை. தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது

14 வது தீட்சை காண்டம் : மந்திரம். எந்த மந்திரக் காயத்து செய்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது

15 வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்தியங்களையும் விபரமாகக் கூறுவது

இவையன்றியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் காணி உறுதிகளை பெற்றுக் கொள்வதில் சிரமம் — நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் வெளி மாவட்டத்தில்

**பு. கஜிந்தன்**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இயங்குகின்ற மாவட்ட காணிப் பிரிவில் இரு உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்ற நிலையில் ஒருவர் சுயீன விடுமுறையில் உள்ளதால் விரைவு காணி உறுதிகளை பெற்றுக் கொள்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதக அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவது, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இயங்குகின்ற கணி பதிவாளர் நாயகப் பிரிவில் ஆறுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டும் இருவர் மட்டுமே தற்போது கடமையில் உள்ளதாக அறிய முடிகிறது.

மாவட்ட காணிப் பிரிவுக்கு ஏற்கனவே தென் இலங்கை அரசியல் செல்வாக்கின் மூலம் வெளி மாகாணங்களைச் சேர்ந்த பெரும்பான்மையின உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட நிலையில் அநேகமானவர்கள் குறுகிய காலத்தில் இடமாற்றம் பெற்று தமது சொந்த மாகாணங்களுக்கு திரும்பி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இரு உத்தியோகத்தர்கள் மட்டும் குறித்த பிரிவில் கடமையாற்றுவதாகவும் ஒருவர் சுகயீன விடுமுறையில் நிற்பதால் துரித சேவையினை மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்தில் உள்ள காணிப் பிரிவில் அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பலர் தமது காணி உறுதிகளை பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர் நோக்குகின்ற நிலையில் நியமிக்கப்பட்ட ஆளனியினர் தொடர்பில் யார் மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த விடையம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் முயற்சி பயனளிக்கவில்லை.




# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் "சொர்க்கத்தின் சுமை: மலையகக் கதைகளின் காட்சி" ஆரம்பமான கண்காட்சி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் “சொர்க்கத்தின் சுமை: மலையகக் கதைகளின் காட்சி” எனும் தலைப்பில் கண்காட்சி ஆரம்பமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை காட்சிக்கூடத்தில் புதன்கிழமை (23-08-2023 ) மாலை ஆரம்பித்த கண்காட்சியை ஓகஸ்ட் 31ம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பார்வையிட முடியும்.

ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் தா.சனாதனன், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோர் பங்கேற்றதுடன் விரிவுரையாளர்கள் மாணவர்கள் ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் பிரபல கர்நாடக இசைப் பாடகர் ரி.எம். கிருஷ்ணா, பிரபல தமிழக எழுத்தாளர் பெருமாள் முருகன், வரலாற்றாசிரியரும் ஆய்வாளருமான பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி மற்றும் காலச்சுவடு வெளியீட்டக உரிமையாளர் கண்ணன் சுந்தரம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தென்னிந்தியாவில் இருந்து மலையகத்திற்கு தோட்டத் தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு குறித்த கண்காட்சி ஏற்பாட்டாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது.





# ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் கையளிப்பு!




ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு வன்னி ஹோப்பினால் மருந்துகள் உதவி.

24.8.2023 வைத்தியர் வாணி பிறேம்ஜித் (USA) என்பவரின் நிதிப்பங்களிப்பு உதவியுடன், தொண்டு நிறுவனமாகிய வன்னி ஹோப் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த வைத்தியசாலை நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்கவும், தற்போதைய நாட்டு நிலைமையை கருத்திற்கொண்டும் அவரது தனிப்பட்ட நிதியில் இத்தகைய மருந்துகள் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டது.

இந்த கையளிப்பு நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தினனர், வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மன்னார் சதொச புதைக்குழியில் இருந்து, விளையாடரங்கு வரை சர்வதேச காணாமால் ஆக்கப்பட்டவர்கள் தினத்தினை முன்னிட்டுபேரணி!

சர்வதேச காணாமால் ஆக்கப்பட்டவர்கள் தினத்தினை முன்னிட்டு, எதிர்வரும் 30ஆம் திகதி மன்னாரில் பாரிய பேரணி ஒன்றினை முன்னெடுக்கப்படவுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

இந்த பேரணியானது மன்னார் சதொச புதைக்குழியில் இருந்து, விளையாடரங்கு வரையில் குறித்த பேரணி செல்லவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்கள், வர்த்தக சங்கத்தினர், தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் அரசியல்வாதிகள், அரசியல் செயற்பட்டாளர்கள், மத குருமார்கள் என அனைத்து தரப்பினரையும் தமது போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு கோரியுள்ளனர்.

போராட்டத்திற்கு செல்வோருக்கான இலவச வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என தெரிவித்தார்.




# "அரகல" போராட்டத்தை கட்டுப்படுத்திய ஜனாதிபதி ரணில் இனவாதிகளுக்கு ஏன் சுதந்திரம் வழங்குகிறார்? — சபா குகதாஸ்

இலங்கை வரலாற்றில் தென்னிலங்கையில் மக்களின் அறவழிப் போராட்டத்தால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய துரத்தப்பட்ட பின்னர் அரகல தரப்பு ஏனையோரையும் விரட்ட தீவிரம் பெற்ற போது பதில் ஜனாபதியாக பொறுப்பேற்று ஒரு சில நாட்களில் நீண்டநாள் போராட்டக்காரரை விரட்டி வீட்டுக்கு அனுப்பினார் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் தற்போது ஒரு இனத்தை குறி வைத்து குறிப்பாக தமிழர்களை கொதிப்படைச் செய்யும் வகையில் இனவாதிகள் வெளியீடும் இனவாதக் கருத்துக்களை ஏன் கட்டுப்படுத்த வில்லை? என்ற சந்தேகம் தமிழர்களிடம் ஒரு அச்சத்தை தோற்றுவித்துள்ளது மாறாக மறைமுக சுதந்திரம் இனவாதிகளுக்கு ஜனாதிபதி வழங்கியுள்ளாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இவ்வாறு ரெலோ இளைஞர் அணித் தலைவர் சபா குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார். இன்றையதினம் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் அவர் கூறுகையில்,

தமிழ் மக்களையும் அவர்களது தொன்மையான தொல்லியல்களையும் தமிழ் அரசியல் பிரதி நிதிகளையும் தமிழ் நீதிபதியையும் குறி வைத்து மிகப் பாரதூரமான கருந்துக்களை மேர்வின் சில்வா, சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச பொது வெளியிலும் பாராளுமன்றத்திலும் கூறிவருகின்றனர். இதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் ஒரு ஒப்புக்கு கூட எதிர்க்கவில்லை.

எனவே மீண்டும் தமிழர்களை அடக்கி அவர்களின் இருப்பை கபளீகரம் செய்ய முழு அரச இயந்திரமும் தயாரா? அத்துடன் இனவாதிகளின் கருத்துக்களுக்கு வெளிநாட்டுச் சக்திகளும் மறைமுக ஆதரவா? மீண்டும் ஒரு இனத்தை அழித்து தங்கள் பூகோள நலன்களை பெற முயற்சிக்கின்றார்களா? இப்படியான கேள்விகள் அச்சங்கள் தமிழ் மக்களிடையே எழுந்துள்ளன.

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி கருத்து வெளியிடுவது ஒரு புறம் இருக்க பொது வெளியில் தமிழர்களின் தலையை வெட்டி களணிக்கு கொண்டு வருவேன் என கூறிய மேர்வின் சில்வாவிற்கு ஏன் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இவ்வார ராசிபலன்

**25-08-2023 வெள்ளி தொடக்கம் 31-08-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** சந்தோஷமான சூழ்நிலை அமையும் வாரம். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலம் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாக்கும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். கற்பனை ஆற்றல் பெருகும். எதிர்பாராத செலவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். பயணம் தடைப்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. கலை ஆர்வம் கூடும். எண்ணங்கள் ஈடேறும். எதிர்பார்ப்புக்கள் கூடும். அலுவலக பணியில் கவனம் தேவை. உடல் சோர்வு உண்டாகும். விபரீத போக்கு மறையும். பூர்வீக சொத்து சேரும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. இயந்திரத் தொழில் லாபம் தரும். குழந்தைகள் நலத்தில் அதிகம் அக்கறை தேவை. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. பொறாமைகள் விலகும். உறவினர் பகை மாறும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K




**ரிஷபம்:** விவசாயிகள் பயன்பெறும் வாரம். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். எதிர்பார்ப்புகள் உருவாகும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியினால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. பெருமைகள் சேரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். திடீர் பயணம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். காதல் எண்ணம் ஈடேறும். கனவுத்தொல்லை உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. விருந்தினர் வருகை உண்டு. மருத்துவச் செலவு ஏற்படும். மனோ பயம் நீங்கும். குதூகலம் அதிகமாகம். உடல் உபாதை அதிகமாகும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குல தெய்வம், அதிர்ஷ்ட எண்: 2,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N




**மிதுனம்:** நினைத்தது நிறைவேறும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். செயல்களில் பொறுமை தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். முதலீடு கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். புதிய கடன் வாங்க நேரிடும். மனக்குழப்பம் தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: 2,5,6,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V




**கடகம்:** சுபகாரியம் கைகூடும் வாரம். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். தொழில் முயற்சி வெற்றி தரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. தந்திரமாக செயல்படுவீர்கள். வியாபாரம் வெற்றி தரும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். எதிர்பார்த்த உதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். இனிப்பான செய்திகள் வரும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். சச்சரவுகள் அகலும். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். எதிரிகளால் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். பூமி வாங்கும் யோகம் உண்டு. அலைபேசி தகவல் ஆதாயம் தரும். பொது வாழ்வில் புகழ் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: 4,1,9,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y




**சிம்மம்:** யோகமான வாரம். திருப்புமுனை ஏற்படும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிக்கொள்ளும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆலோசனை பூர்த்தியாகும். தொழிலில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். பொறாமைகள் அதிகரிக்கும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பயணம் தடைப்படும். வீடு, வாங்கும் யோகம் உண்டு. பணப்பற்றாக்குறை நீங்கும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். முதுகில் வலி வந்து நீங்கும். சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு.
வழிபட வேண்டிய: அங்காரகன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,L



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**கன்னி:** வேண்டாத விஷயங்கள் விலகும் வாரம். நிர்வாகத்தில் நிதானம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். காதல் கைகூடும். வியாபாரத் தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. குடும்ப வளர்ச்சி கூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களால் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பெற்றோர்களின் ஆசி கிட்டும். எதிர்ப்புகள் விலகும். திடீர் பயணம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். இடமாற்றம் உண்டு. கல்வியில் கவனம் வேண்டும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத் தடை ஏற்படும். விரும்பிய பொருள் கிடைக்கும். கல்வி ஆர்வம் கூடும். தொழில் லாபம் தரும். பங்குச்சந்தையில் லாபம் தரும். பாதகம் விலகும். பதவி உயர்வு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பூமி லாபம் உண்டு. பெற்றோர் ஆசி கிடைக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். வெற்றிச்செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,4,2,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**துலாம்:** பாராட்டுக்கள் கிடைக்கும் வாரம். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றித்தரும். பெரிய திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். தனவரவு உற்சாகம் தரும். செயலில் வேகம் கூடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றி நிலை தொடரும். ஏற்றமான தருணம் அமையும். ஆபரணப் பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கைகூடும். எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டும் கிட்டும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். புதிய உத்தியோகம் அமையும். விவசாயம் கை கொடுக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 6,3,1,2
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**விருச்சிகம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். நிர்வாக வாய்ப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல், வாங்கலில் நன்மை சேரும். உறவினரால் தொல்லை நேரும். மாற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கூடும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். உத்தியோக ஏற்றம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. வருமானம் திருப்தி தரும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வீண் செலவுகள் தவிர்க்கவும். வேலை பளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதிய பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். புண்ணியம் சேரும். சந்தர்ப்பம் சாதகம் உண்டு. ஆரோக்கியம் கூடும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். உஷ்ணம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். நண்பரால் செலவு உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 1,5,3,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம் (அரக்கு), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**தனுசு:** தேக ஆரோக்கியம் கூடும் வாரம். வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கண்ணாடிப் பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும். மனிதநேயம் மிகுதியாகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர் திறமை பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 4,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**மகரம்:** சிறப்புக்கள் சேரும் வாரம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. விரயங்கள் கூடும். பயணங்கள் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. உற்சாகம் அலைமோதும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். கடன் தொல்லை அகலும். குடும்ப ஒற்றுமை மேம்படும். விவேகம் வெற்றி தரும். பயணம் அனுகூலம் தரும். வாகன நன்மை உண்டு. நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும்.

**(தொடர்ச்சி 30 பக்கம்)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் கைதான முன்னாள் கணக்காளருக்கு எதிர்வரும் செப்டம்பர் 06 வரை விளக்கமறியல்



(24-08-2023)

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதான முன்னாள் கணக்காளரை எதிர்வரும் செப்டம்பர் 06 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு புதன்கிழமை (23) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்த நீதிவான் முன்னாள் கணக்காளர் உட்பட 04 சந்தேக நபர்களையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் கல்முனை மாநகர சபையின் நிதி மோசடி விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு அண்மைக்காலமாக நால்வர் கைதாகி இருந்தனர். இதில் ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.ஏனைய மூன்று சந்தேக நபர்களும் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை (22) திருகோணமலையில் வைத்து முன்னாள் கணக்காளர் மருதமுனை-5 பகுதியை சேர்ந்த ஏ.எச். முகமது தஸ்தீக் (வயது-47) கைதானார்.

இவ்வாறு திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்ட கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர் கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிவான் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் கைதான முன்னாள் கணக்காளர் உள்ளிட்ட கைதாகஜ விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஏனைய சந்தேக நபர்களின் சேவைக்காலத்தில் வரியிருப்பாளர்கள் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின்போது மேலும் மோசடி முறைகேடுகள் எவையும் மேலும் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பிலும் இவற்றுடன் வேறு எவராவது சம்மந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் குற்றப்புலனாய்வு பிரிவினரால் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றன.

மேலும் கடந்த காலங்களில் இவ்வரி மோசடி தொடர்பில் விசாரணைகள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் பலர் கைது செய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் இவ்விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் நிமித்தம் நிர்வாக மட்டத்தில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அத்துடன் குறித்த நிதிகையாடல் சம்பவம் தொடர்பில் கடந்த காலங்களில் கல்முனை பொலிஸ் நிலையம் அம்பாறை விஷேட குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் விசாரணை பொறுப்பளிக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் குற்றப்புலனாய்வு பிரிவிடம் இவ்வழக்கு விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சரத் வீரசேகரனின் கருத்துக்கு சட்டத்தரணிகள் சங்கம் பணி புறக்கணித்து கண்டன போராட்டம்!

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கடந்த 22:08:23 அன்று கௌரவ முல்லைத்தீவு நீதிபதி அவர்கள் தொடர்பாக அவதூறு பரப்பும் வகையில் நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக்கு உட்படுத்தும் வகையிலும் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை கண்டித்தும், எதிர்ப்பு தெரிவித்தும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம், 25.08.2023 காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து அடையாள கண்டன போராட்டத்தை நடத்த ஏக மனதாக தீர்மானித்துள்ளது.

இந்த அடையாள புறக்கணிப்பு போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச் சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் குறித்த அடையாள கண்டன போராட்டத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.



# மன்னார் அடம்பன் முள்ளிக்கண்டல் பகுதியில் துப்பாக்கிச்சூடு – இருவர் பலி


## உயிரிழந்தவர்கள் அடையாளம் காணப்பட்டனர்

- மன்னார் நிருபர் (24-08-2023)

மன்னார் அடம்பன் முள்ளிக்கண்டல் பகுதியில் வியாழக்கிழமை (24-08-2023) காலை மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் குறித்த இருவரும் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகிறது.

உயிரிழந்தவர்கள் மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது-43) மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தை சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது-56) ஆகிய இரு குடும்பஸ்தர்களே உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த இருவரும் வியாழக்கிழமை (24) காலை மோட்டார் சைக்கிலில் வயலுக்குச் சென்ற போது குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளதோடு, குறித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.



கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

இதேவேளை கடந்த வருடம் மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நொச்சி குளத்தைச் சேர்ந்த ஒருவரும் குறித்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

பலிக்கு பலி வாங்கும் நோக்குடன் இச்சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த இரட்டை கொலை தொடர்பாக அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் – வடமராட்சி கொற்றாவத்தை பகுதியில் விபத்து – 14 வயது சிறுவன் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம் - வடமராட்சி, கொற்றாவத்தை பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதுண்ட விபத்தில் 14 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளதோடு இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் வியாழக்கிழமை (24) மதியம் கரணவாய் வடமேற்கு கொற்றாவத்தை கணபதி மில்லுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொற்றாவத்தை பகுதியைச் சேர்ந்த சாகித்தியன் (வயது 14) எனும் சிறுவன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு பகுதியிலிருந்து கடந்த சில வருடங்களாக கொற்றவத்தை பகுதியில் வசிக்கும் அஜந்தன் (வயது 21) என்பவர் கை மற்றும் கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் வளைவு பகுதியில் திரும்பிய போது இரண்டு வாகனமும் நேருக்கு நேர் மோதியது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டதோடு, மோட்டார் சையிக்கிளும் டிப்பர் பவருக்குள் சிக்குண்டு தீ பிடித்தும் எரிந்துள்ளது.



சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் புலனாய்வு பிரிவினர் என மக்களை அச்சுறுத்தும் "இரும்பு திருடர்கள்"!





- பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதாகவும் பொலிஸார் திருட்டுக்களை கட்டுப்படுத்த தவறி வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த 33 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட மாங்கொல்லை பகுதியில் இருந்து கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர். ஆனாலும் குறித்த பகுதி இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை.

அதனால் அக்காணி உரிமையாளர்கள் அப்பகுதியில் குடியமர முடியாத நிலை காணப்படுகிறது.

அந்நிலையில் அப்பகுதிக்குள் ஊடுருவும் இரும்பு திருடர்கள் வீடுகளில் உள்ள இரும்புகளை திருடி சென்றனர். அது குறித்து தெல்லிப்பழை பிரதேச செயலர், காங்கேசன்துறை பொலிஸார் உள்ளிட்ட தரப்பினருக்கு பல தடவைகள் வீட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்தும் திருட்டினை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இரும்பு திருடர்கள் சுதந்திரமாக அப்பகுதிகளில் நடமாடி திரிகின்றனர்.

பிரதேச செயலரிடம் முறையிட்ட போது, இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக தம்மிடம் அப்பகுதியை கையளிக்காத நிலையில் தாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது என முறைப்பாட்டாளர்களுக்கு தெரிவிக்கின்றார்.

பொலிஸாரிடம் முறையிட்டோருக்கு பொலிஸார் நடவடிக்கை எடுப்பதாக கூறிய போதிலும், அப்பகுதியில் கண்காணிப்புக்கு சுற்றுக்காவல் பகுதியில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கண் முன்னால் இரும்பு திருடர்கள் திருட்டில் ஈடுபடுகின்றனர். அது தொடர்பில் பொலிசாரிடம் கேட்ட போது, பழைய இரும்புகள் தானே அவர்கள் கொண்டு செல்லட்டும் என பதில் அளித்துள்ளனர்.

இவ்வாறாக பொறுப்பு வாய்ந்தோர் திருட்டினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க தவறி வரும் நிலையில் தற்போது வீட்டின் பாகங்களை உடைத்து திருட்டில் ஈடுபட தொடங்கியுள்ளனர்.

அது தொடர்பில் தகவல் அறிந்து வீட்டு உரிமையாளர்கள் தமது காணிக்குள் வரும் போது, இரும்பு திருடர்கள் தம்மை புலனாய்வு பிரிவினர் என கூறி, காணி இன்னமும் இராணுவ கட்டுப்பாட்டினுள் தான் இருக்கிறது. இதற்குள் நீங்கள் வர கூடாது என அச்சுறுத்தி அனுப்பி விட்டு, உரிமையாளர் கண்களுக்கு முன்னாலையே வீடுகளை உடைத்து இரும்புகளை திருடி செல்கின்றனர்.

பிரதேச செயலரோ, இராணுவத்தினரோ, பொலிஸாரோ திருட்டுக்களை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காது இருப்பதால், உரிமையாளர் கண்களுக்கு முன்னாலையே திருடர்கள் திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் யாரிடம் இனி முறையிடுவது என தெரியாத நிலையில் தமது கண்களுக்கு முன்னால் தமது வீடுகளை உடைத்து திருடுபவர்களை கண்ணீர் மல்க உரிமையாளர்கள் பார்த்து மனம் நொந்து வருகின்றார்.

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)

**மகரம்:** செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். இனிக்கும் செய்திகள் வரும். நினைத்தது நடக்கும். தொட்டது துலங்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொலைதூர தொடர்பு லாபம் தரும். முதலீடு உண்டாகும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,L




**கும்பம்:** கலை ஈடுபாடு அதிகரிக்கும் வாரம். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். குழப்பங்கள் அகலும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். செய்தொழில் லாபம் தரும். புதிய நட்பில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்பு கூடி வரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,X




**மீனம்:** தொட்டது துலங்கும் வாரம். வழக்கு வெற்றித்தரும். புத்திர வழியில் தொல்லையுண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. கடன் பிரச்சனை தீர்வு உண்டு. கல்வியில் ஏமாற்றம் அடைவர். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. ஜீவராசிகளுக்கு உணவு அளித்தல் யோக பலன் கூடும். வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பண விரயம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். கலை ஆர்வம் கூடும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத் தடை அகலும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. போட்டிகள் மறையும். தொல்லைகள் ஒழியும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியுண்டு. ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குல தேவதை, அதிர்ஷ்ட எண்: 2,1,3,9
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J






# கடந்தவையும் கடப்பவையும் (68)

*உண்டபின் உசாராகக் கேட்கிறார்*
*நன்றாக இருந்ததோ உணவு என்று*

*'கனநேரம் காத்திருக்க நேர்ந்தாலும் - பெருமளவில்*
*குறைகூற முடியாத உணவுதான்' என்று சொல்ல*

*பக்கத்து மேசையில் தாளச்சத்தமும்*
*உச்சமாக கேட்க*
*எட்டிப் பார்த்தவர் 'அங்கே பாருங்கள் உங்கட ஆக்களை' - அவர்கள்*

*ஆரெண்டு தெரியாது எங்கட ஆக்களாம்*
*பேரொன்றும் தெரியாது வெளிநாடு ஆதலால்*

*தனியான ஒரு பெயரால் தரம் பிரித்து - உள்நாட்டில்*
*பெரியவர்கள் தாங்கள் என்பதுபோல் பாசாங்கு இவருக்கும் - 'முன்பின்*

*அறியாத சாப்பாடோ! கடைசிப் பருக்கையைப் பொறுக்க - மிக*
*பெரிதான தாளம்' எனச் சிரிக்கிறார் - கொஞ்சம்*

*அவமானம் போலத்தான் இருந்தது - ஆனாலும்*
*கவனமாகக் கூறுகிறேன் 'அன்னத்திற்கு அவரளிக்கும் மதிப்பு' என்று*

*சொல்லத் தொடங்கினார் , எனக்காக என்பதுபோல்*
*மெல்ல மெல்ல குனிந்ததுதான் தலை - 'அங்கு*

*ஆலய வீதிகளில் நடப்பதெல்லாம் எங்களுக்கு*
*தெரியாது என்று நினைக்க வேண்டாம்*

*வடக்கு வீதியில் சுவாமிவர - முன்னர்*
*குடித்த தேனீர்க் கொப்பையுடன்*

*கடலைக்கும் அவலுக்கும் காத்திருக்கும்*
*அலங்காரத்து அம்மாக்களும் அவர்கள் - பிரசாதம்*

*வந்தவுடன் இடிபட்டும் நெரிபட்டும் வாங்குவதும் - பின்*
*சேர்ந்து நின்று உண்பதுவும் கதைப்பதுவும்*

*உண்டது சமிபாடு அடையும் முன்பே*
*வந்த சுவாமி வாசலுக்கு போவதற்குள்*

*அடுத்த வரிசையில் அவசரமாய் நிற்பதுவும்*
*பெருத்த மேளச்சத்தம் மெல்லச் சுவாமி*

*உள்ளுக்குப் போனதை அறியத்தர*
*வெள்ளைச்சோறும் பல கறிகளோடு வெளியே வருமாமே?*

*இரவு பகலாய் உழைப்பராம் அடுப்பங்கரையில் பலர் - அதிக*
*செலவும் ஆகுமாம் காய் கறிகளுக்கும் - ஆனாலும்*

*அள்ளியே போடுவாராம் வயிறாற உண்ணவென - இருப்பினும்*
*சொல்லுக் கேட்காமல் எடுத்து வைத்திருப்பாராம் ஒருவரே இரு தட்டுக்களை சிலர்*

*சிறுவரையும் சிரமப்படுத்தி எடுத்துவரச் செய்த பின்பு*
*வெறும் தரையில் அவற்றை வைத்துவிட்டும் செல்வாராம்*

*வீடுகட்குப் போகுமாம் தட்டுகள் மூடியோடு - ஆனாலும்*
*தேடுவார் அற்றும் கிடக்குமாம் நிலத்தில் ஆங்காங்கு உணவோடு*

*சிந்துப்பட்டும் சிதறுப்பட்டும் ஆலயத் தொண்டர்*
*நொந்து கொள்ளும் அளவுக்கு நடக்குமாமே திருவிழாக்கள் - போரிலே*

*எத்தனையோஅடிவாங்கி உண்பதற்கு உணவு இன்றி*
*நித்தம் செத்துச் செத்துப் பிழைத்தவரும் - அங்கு*

*மெத்தப் பெரும் தப்புக்களைச் செய்கிறாராம்*
*அத்தனையும் உண்மையா?' எனக் கேட்டார் - 'இருக்கலாம்*


*எல்லா இடமும் இருப்பதில்லை அப்படி' - என*
*எங்கள் இடத்தை விட்டுக்கொடுக்காமலே விடை சொன்னேன்.......*

*( தொடரும்)*

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

கனடிய செய்திகள் Canadian News

# "இசைக் கவி" என்று அழைக்கப்பெறும் தமிழ்நாடு ரமணன் கனடா வருகின்றார்



தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரும் பத்திரிகையாளரும் இசையோடு இணைந்த சிறந்த உரைகளை ஆற்றிய பெருமைக்குரியவருமான "இசைக் கவி" ரமணன் கனடாவிற்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் 9ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் இசையோடு இணைந்த உரையரங்கில் "பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.



மறுநாள் 10ம் திகதி ஈற்றோபிக்கோ நகரில் பாரதி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள உரையரங்கிலும் இசைக்கவி ரமணன் உரையாற்றவுள்ளவுள்ளார்.

9ம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வு தொடர்பான விபரங்களுக்கு (647) 762-9512 அல்லது (647) 891-7725 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION



**Providing the best future for your best living**

**Contact Us Today**

**NESAN** **416-908-5656**

*Subramaniam*

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages









26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்




உதயம் 1429 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 25, 2023

# மட்டக்களப்பில் நம்மவர்களின மேய்ச்சல் தரையைப் பிடிக்கும்சிங்கள விவசாயிகள்

### – யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



மட்டக்களப்பில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைகளை சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். இது தொடர்பாக நீதிமன்ற உத்தரவுகள் இருக்கத்தக்கதாக அவற்றை மீறி ஆக்கிரமிப்பு நடந்து வருகிறது. அந்த பிரதேசம் மலைகளை அண்டியிருக்கிறது. மலைகளில் இருந்து வடிந்து வரும் நீர் பரவியோடும் பிரதேசம் என்ற காரணத்தால் அது ஒரு செழிப்பான பூமி.தமிழ்ப் பண்ணையாளர்கள் சுமார் 4 லட்சம் கால்நடைகளை அங்கே வைத்து பராமரிக்கிறார்கள். கிட்டத்தட்ட 996 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அந்த பண்ணைகளில் வேலை செய்கிறார்கள்.அதனால் பயனடைகிறார்கள். மலையகத்துக்கான இயற்கை உரம் அதாவது மாட்டெரு பெருமளவுக்கு இப்பிரதேசத்தில் இருந்துதான் கொண்டு செல்லப்படுகிறது. இப்பொழுது அதைச் சிங்கள விவசாயிகள் கொள்வனவு செய்து வருகிறார்கள்.

உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

# சென்னையில் 'கவிதை உறவு' மற்றும் பன்னாட்டு தமிழுறவு மன்றம் இணைந்து நடத்திய பாராட்டு விழா



இரண்டு வார கால பயணம் ஒன்றை மேற்கொண்டு தமிழகம் சென்றிருந்த "கனடா உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அங்கு பல நிகழ்ச்சிகளின் கலந்து கொண்டார்.

கடந்த 14-08-2023 திங்கட்கிழமையன்று சென்னையில் அவருக்கு. சென்னை" கவிதை உறவு" வெளியீட்டாளர்கள் மற்றும் பன்னாட்டு தமிழுறவு மன்றம் இணைந்து நடத்திய பாராட்டு விழாவில் பல கலை இலக்கிய நண்பர்கள் கலந்து சிறப்பித்தனர். கவிதை உறவு ஆசிரியர் ஏர்வாடி இராதாகிருஸ்ணன் மற்றும் பன்னாட்டு தமிழுறவு மன்றத்தின் ஸ்தாபகர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் ஆகியோர் இணைத்தலைமை வகிக்க விழா சிறப்பாக ஆரம்பமாகியது.

பல கலை இலக்கிய மற்றும் புத்தக வெளியீட்டாளர்கள் ஆகியோர் கனடா உதயன் பத்திரிகை பற்றியும் அதன் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கத்தின் சேவைகள் மற்றும் கலை இலக்கியப் பங்களிப்புக்கள் ஆகியவை பற்றியும் உரையாற்றினார்கள்.

வா. மு. சே. திருவள்ளுவர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பல எழுத்தாள நண்பர்கள் தங்கள் நூல்களையும் லோகேந்திரலிங்கம் அவர்களிடம் கையளித்தனர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

# சந்திரனில் கால் பதித்த சந்திரயான் – 3



நிலவினை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் சந்திரயான்-3 விண்கலம் கடந்த மாதம் 14ம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் மதியம் 2.35 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. அப்போது பேசிய இஸ்ரோ தலைவர் சோமநாத், "திட்டமிட்டபடி விண்கலம் பூமியில் இருந்து 179 கிலோ மீட்டர் தொலைவில் அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. சந்திரயான்-3 நிலவை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கிவிட்டது. சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் மூலம் மீண்டும் அது மிகவும் வலுவான ஒரு விண்கலம் என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளது" என்று தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆக.1-ம் தேதி புவியீர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு நிலவை நோக்கி செல்லும் வகையில் சந்திராயன் 3 ன் பயணப் பாதை மாற்றப்பட்டது. தொடர்ந்து 5 நாள் பயணத்துக்கு பின் கடந்த 5-ம் தேதி நிலவின் சுற்றுவட்டப்பாதைக்குள் சந்திரயான்-3 நுழைந்தது. ஆக.17ம் தேதி பிற்பகல் 1.15 மணிக்கு சந்திரயான்-3 விண்கலத்தில் லேண்டர் பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நிலவுக்கு 163 கி.மீ. தொலைவில் ரோவர் பயணித்து வந்தது. அதில் இருந்து லேண்டரின் உயரம் படிப்படியாக குறைக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் புதன்கிழமை இந்திய நேரப்படி மாலை சுமார் 6 மணி அளவில் சந்திராயன்-3ஐ நிலவில் தரையிறக்க திட்டமிடப்பட்டது. இந்த சாதனையை உலக மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர்.


# அனைவராலும் பாராட்டப்பெற்ற ஹரிகரன் தர்மசோதி. ஹரிணி தர்மசோதி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம்



கனடா கலையருவி நாட்டிய நிறுவன அதிபரும் குருவுமாகிய ஸ்ரீமதி ரேணுகா விக்னேஸ்வரன் அவர்களின் மாணவர்களும் திரு திருமதி தர்மசோதி அவர்களின் புத்திரச் செல்வங்களுமாகிய செல்வன் ஹரிகரன் தர்மசோதி. ஹரிணி தர்மசோதி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 19-08-2023 சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுரோ சீனக் கலாச்சார நிலையத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

# தமிழ்நாட்டிலிருந்து "இசைக் கவி" ரமணன் கனடா வருகின்றார



தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரும் பத்திரிகையாளரும் இசையோடு இணைந்த சிறந்த உரைகளை ஆற்றிய பெருமைக்குரியவருமான "இசைக் கவி" ரமணன் கனடாவிற்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் 9ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் இசையோடு இணைந்த உரையரங்கில் "பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார். ஆரபி படைப்பகம் வழங்கும் இந்த நிகழ்வு தொடர்பான விபரங்களுக்கு 647 762 9512, 647 891 7725 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

(உள்ளே விபரமான செய்தி 30ம் பக்கத்தில்)

